SIVARAJAVEL IAS ACADEMY
AN IDEAL INSTITUTE FOR CIVIL SERVICE EXAMS

# சங்கமம்

TNPSC க்கான மாதாந்திர நடப்பு நிகழ்வுகள் | ஜுன்-2023



## சர்வதேச ஒலிம்பிக் தினம்

SIVARAJAVEL IAS ACADEMY
FOUNDER - DIRECTOR OF SMART LEADERS IAS

TNPSC மற்றும் அனைத்துவிதமான அரசு போட்டித் தேர்விற்கு பயிற்சி பெறும் மாணவர்கள் பயன்படும் வகையில் சிறந்த ஆசிரியர்களை கொண்டு மாதம் தோறும் நடப்பு நிகழ்வுகள் எங்கள் Sivarajavel IAS Academy சார்பாக இலவசமாக வெளியிடப்படுகின்றது. இதனை இலவசமாக பதிவிறக்கம் செய்வதற்கு கீழ்க்கண்ட இணைய முகவரியில் இணையவும்

**Website: www.sivarajavelias.com**
**Facebook : https://www.facebook.com/Sivarajaveliasacademy**
**Instagram: https://www.instagram.com/sivarajavel_ias_academy**
**Telegram: https://t.me/sivarajavel_ias_academy**
**Twitter : https://twitter.com/sivarajavel_ias**

**Kindly share your feedback**
sivarajaveliasacademy@gmail.com

**HEAD OFFICE**
No.97, AF Block, Shanthi Colony,
12th Main Road, Anna Nagar
West, Chennai – 600 040.
Ph: 9626364444, 9626369899

**BRANCHES**

TIRUNELVELI
No.106B, 3rd Floor, Gilgal Complex,
VOC ground Opposite,
Trivandrum Road,
Palayamkottai – 627 002
Ph: 9626252500, 9626253300

TRICHY
No.143, 4th Floor,
Lakshmi Complex,
Salai Road,
Thillai Nagar, Trichy-620 018
Ph: 9751500300, 9786500300

# பொருளடக்கம்


| வ.எண் | பொருளடக்கம் | ப.எண் |
|---|---|---|
| 1. | தமிழ்நாடு செய்திகள் | 4 |
| 2. | தேசியச் செய்திகள் | 6 |
| 3. | சர்வதேச செய்திகள் | 20 |
| 4. | பொருளாதாரச் செய்திகள் | 24 |
| 5. | திட்டங்கள் | 26 |
| 6. | சுற்றுச்சூழல் செய்திகள் | 27 |
| 7. | இராணுவச் செய்திகள் | 28 |
| 8. | அறிவியல் / தொழில்நுட்பம் | 29 |
| 9. | விளையாட்டுச் செய்திகள் | 31 |
| 10. | விருதுகள் | 40 |
| 11. | அறிக்கைகள் | 43 |
| 12. | முக்கிய தினங்கள் | 45 |
| 13. | நியமனம் | 49 |
| 14. | TNPSC துணுக்குகள் | 52 |
| 15. | கலை மற்றும் கலாச்சாரம் | 53 |
| 16. | ஜூன் மாத வினா விடைகள் | 54 |
| | | |
| | | |
| | | |

# தமிழ்நாடு செய்திகள்

## வெம்பக்கோட்டை அகழாய்வில் உலோகங்கள் மற்றும் தங்கப் பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

- விருதுநகர் மாவட்டத்தின் சாத்தூர் அருகே உள்ள வெம்பக்கோட்டையில் தற்போது நடைபெற்று வரும் 2ஆம் கட்ட அகழாய்வில் ஜூன் 6 அன்று தங்கத் தகடு மற்றும் தங்க அணிகலன் ஆகியவை கண்டெடுக்கப்பட்டுள்ளன.



- இந்த அகழாய்வுப் பணியின் போது சுடுமண் பொருட்கள் மற்றும் சங்கு வளையல்கள் உள்ளிட்ட பல்வேறு வகையான தொல்பொருள்கள் கண்டெடுக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் தங்கத்தினால் ஆன "தோடு மற்றும் தங்கத் தகடு" தலா 2 கிராம் அளவில் கண்டெடுக்கப்பட்டுள்ளன என்பது இங்கு குறிப்பிடத்தக்க ஒன்றாக பார்க்கப்படுகிறது.

## பெண் குழந்தைகளைப் பாதுகாப்பதற்காக 'இமைகள்' என்ற திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

- சென்னையில் ஜூன் 23 அன்று நடைபெற்ற பெண் குழந்தைகளைப் பாதுகாப்பதற்கான மாநாட்டில் தமிழகக் காவல் துறையின் தலைமை இயக்குநர் டிஜிபி சி.சைலேந்திரபாபு சிறுவர்கள் மற்றும் பெண் குழந்தைகளைப் பாதுகாப்பதற்காக "இமைகள்" என்ற திட்டத்தைத் தொடங்கி வைத்துள்ளார்.
- பாலியல் குற்றங்களில் இருந்து பெண் குழந்தைகளைப் பாதுகாப்பதற்காகவும், பள்ளிகளின் பெண் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான விழிப்புணர்வை மக்களிடையே கொண்டு செல்லும் நோக்கத்துடன் இந்த திட்டமானது தொடங்கப்பட்டுள்ளது.

## இந்தியாவிலேயே முதல் முறையாக இணையம் மூலம் மண் வள விவரங்களை அறிவதற்கான முன்னெடுப்பைத் தமிழக முதல்வர் தொடங்கி வைத்துள்ளார்.

- சென்னை தலைமைச் செயலகத்தில் ஜூன் 28 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், மண் வளத்தை அறிந்து அதற்கேற்ப உரமிடும் முறையை ஊக்குவிப்பதற்காகவும், விவசாயிகளுக்கு வழிகாட்டு நெறிமுறைகளை வழங்குவதாகவும் 'தமிழ் மண்வளம்' என்ற இணையதளத்தைத் தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் தொடங்கி வைத்துள்ளார்.
- இந்த இணையதம் மூலம் தமிழகத்தில் உள்ள அனைத்து விளைநிலங்களின் மண்வளத்தைப் பற்றிய புரிதலுக்காக (www.tnagriculture.in/mannvalam) என்ற இணையத்தளமானது தொடங்கப்பட்டுள்ளது. மேலும் இந்த இணையத்தளத்தில் தமிழ் மற்றும் ஆங்கிலம் என இரு மொழிகளிலும் மக்களுக்குப் பயனுள்ள வகையில் மண்டலம் வாரியாகவும், மாவட்டத்தில் உள்ள வட்டாரம், கிராமங்கள் வாரியாகவும் மண்ணின் வகைகள் தரப்பட்டுள்ளன என முதல்வர் தெரிவித்துள்ளார்.

## ஆம்புலன்ஸ் கூட்ட நெரிசலில் சிக்காமல் இருக்க 'எம் சைரன்' என்ற ஸ்மார்ட் ஆம்புலன்ஸ் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

- சென்னையில் போக்குவரத்து நெரிசலின் காரணமாக நோயாளிகளையும் விபத்தில் சிக்கியவர்களையும் ஒரு மணி நேரத்தில் மருத்துவமனையில் கொண்டு சேர்ப்பது மிகவும் சவாலானதாக உள்ள நிலையில், இதைக் கருத்தில் கொண்டு சென்னை பெருநகர காவல் துறையின் போக்குவரத்து பிரிவு 3, தனியார் மருத்துவமனைகளுடன் இணைந்து எம் சைரன் என்ற ஸ்மார்ட் ஆம்புலன்ஸ் புதிய திட்டமானது ஜூன் 28 அன்று தொடங்கப்பட்டுள்ளது.
- இந்தத் திட்டத்தின்படி, ஆம்புலன்ஸ் வாகனத்தில் உள்ள சைரன்களில் 'ஸ்மார்ட் சைரன்' என்ற மென் பொருள் பொருத்தப்பட்டிருக்கும் அதன்படி இந்த ஆம்புலன்ஸ் சாலையில் செல்லும்போது அதில் உள்ள டிரான்ஸ்மிட்டர் ஒரு சமிக்ஞையை வெளிப்படுத்தும். இந்த சமிக்ஞையை 200 மீட்டர் தொலைவுக்கு முன்னரே சிக்னலில் உள்ள மென்பொருளின் 'ரிசிவர்' பெறுவதன் மூலம் ஆம்புலன்ஸானது நெரிசலில் சிக்காமல் நேரத்திற்கு செல்லும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

## மாளிகைமேடு அகழாய்வில் 3 பழங்காலப் பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

- அரியலூர் மாவட்டத்தின் ஜெயங்கொண்டம்

SIVARAJAVEL IAS ACADEMY

பகுதிக்கு அருகேயுள்ள கங்கைகொண்ட சோழபுரத்தின் மாளிகைமேட்டில் நடைபெறும் 3- ஆம் கட்ட அகழாய்வுப் பணியில் சீனப் பானையோடு, காசு வார்ப்பு மற்றும் சுடுமண்ணாலான அரசு முத்திரை உள்ளிட்ட 3 பழங்கால பொருள்களானது ஜூன் 28 அன்று கிடைத்துள்ளன.

- இந்த நிலையில், 11-ஆம் நூற்றாண்டில் தமிழகத்துக்கும் சீன நாட்டுக்கும் இடையிலான வாணிபம் மற்றும் வணிகத் தொடர்பை இந்த பொருட்களானது உறுதி செய்கிறது என அகழ்வாராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.



## தமிழக காவல் துறையானது “சைபர் எச்சரிக்கை” என்ற செயலியை அறிமுகப்படுத்தியுள்ளது.

- புலனாய்வு அதிகாரிகளின் நலனுக்காக மற்றும் குற்றங்களை நடப்பதற்கு முன் தடுப்பதற்காகவும், சைபர் கிரைம் புகார்கள் மற்றும் குற்றவாளிகளின் விவரங்களை வகைப்படுத்தவும் “சைபர் அலர்ட்” என்ற கைபேசி செயலியை போலீஸ் ஆணையர் சங்கர் ஜிவால் ஜூன் 28 அன்று அறிமுகப்படுத்தியுள்ளார்.

- இந்த செயலி மூலம் சைபர் கிரைம் குற்றவாளிகளின் தொலைபேசி எண்கள், வங்கிக் கணக்கு மற்றும் மின்னஞ்சல் ஆகியவற்றை உள்ளடக்கிய விவரங்கள் இந்த செயலியில் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மிகப்பெரிய கலைஞர் நூற்றாண்டு நூலகமானது மதுரையில் திறக்கப்பட்டுள்ளது.

- தமிழக அரசு சார்பில் மதுரையில் புதுநத்தம் சாலையில் பொதுப்பணித்துறைக்குச் சொந்தமான 2.61 ஏக்கர் நிலத்தில், 2,22,815 சதுர அடி பரப்பளவில் அதிநவீன வசதிகளுடன் மாணவர்களின் நலனுக்காக பிரமாண்டமாக ‘கலைஞர் நூற்றாண்டு நூலகம்’ ஆனது திறக்கப்பட்டுள்ளது.

- இந்த நூலகத்தை தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஜூலை 15 அன்று மாலை 5 மணியளவில் திறந்து வைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## வெம்பக்கோட்டை அகழாய்வில் சுடுமண்ணால் செய்யப்பட்ட தோசைக்கல் ஆனது கண்டெடுப்பு.



- விருதுநகர் மாவட்டத்தில் உள்ள வெம்பக்கோட்டையில் நடைபெற்று வரும் இரண்டாம் கட்ட அகழாய்வில் சுடுமண்ணால் செய்யப்பட்ட ‘தோசைக்கல்’ ஆனது கண்டெடுக்கப்பட்டுள்ளது.

- வெம்பக்கோட்டை பகுதிக்குட்பட்ட விஜயகரிசல்குளம் கரையோரம் உச்சிமேடு பகுதியில் முதலாம் கட்ட அகழாய்வுப் பணிகள் முடிவுற்ற நிலையில், அங்கிருந்து 3,254 பொருள்கள் ஆனது கண்டெடுக்கப்பட்டன. மேலும், இதே பகுதியில் இரண்டாம் கட்ட அகழாய்வுப் பணிகள் கடந்த ஏப்ரல் 6-ஆம் தேதி தொடங்கப்பட்டு 8 குழிகள் தோண்டப்பட்டன. இவற்றிலிருந்து இதுவரை 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொருள்கள் ஆனது கண்டெடுக்கப்பட்டுள்ளன.

## தேசியச் செய்திகள்

### டாக்காவில் உள்ள இந்திய கலாச்சார மையத்தில் விடுதலைப் போருக்கான புதிய காட்சியகம் திறப்பு.

- மே 30 அன்று வங்கதேசத்தின் டாக்காவில் உள்ள இந்திய உயர் ஆணையத்தின் கலாச்சார மையத்தில் 1971 ஆம் ஆண்டு வங்கதேசத்தின் விடுதலைப் போருக்கான புதிய காட்சியகம் திறக்கப்பட்டுள்ளது.
- இது 1971 ஆம் ஆண்டு கிழக்கு பாகிஸ்தான் மற்றும் மேற்கு பாகிஸ்தானுக்கிடையே நடைப்பெற்ற போரில் வெற்றி பெற்று வங்கதேசம் என புதிய நாடு உருவாவதற்கு காரணமாய் அமைந்த இந்தியாவின் பங்கை இது பிரதிபலிக்கிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

### 2022-2023ஆம் ஆண்டுகளில் பொது அரசின் பற்றாக்குறையானது GDPயில் 9.4% ஆக குறைக்கப்பட்டது – ரிசர்வ் வங்கி ஆய்வறிக்கை.

- 2022 மற்றும் 2023ஆம் ஆண்டுக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தியில் “பொது அரசு பற்றாக்குறை மற்றும் கடன்கள் முறையே 9.4 சதவீதம் மற்றும் 86.5 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது என இந்திய ரிசர்வ் வங்கி தனது 2022-23 ஆண்டு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.
- இந்த மதிப்பானது 2020-2021ல் முறையே 13.1 சதவீதம் மற்றும் 89.4 சதவீதம் என்ற உச்சநிலையில் இருந்து இந்த மதிப்பிற்கு குறைக்கப்பட்டுள்ளது.

### இந்தியா-ஐரோப்பிய ஒன்றிய இணைப்பு மாநாடானது மேகாலயாவில் நடத்த திட்டம்.



- இந்தியாவிற்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகள் குழு மற்றும் ஆசிய சங்கம் இணைந்து ஜூன் முதல் மேகாலயாவில் “இந்தியா-ஐரோப்பிய ஒன்றிய இணைப்பு உச்சி மாநாட்டை“ நடத்த திட்டமிட்டுள்ளது.
- இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்கள் மற்றும் இந்தியாவின் அண்டை நாடுகளான பூட்டான், நேபாளம் மற்றும் வங்கதேசம் ஆகியவற்றில் இணைப்பு முதலீடுகளை அதிகரிப்பதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து மேம்படுத்துவதாகும்.

### தானிய சேமிப்பு திறனை அதிகரிக்க ரூ.1 லட்சம் கோடி திட்டத்திற்கு மத்திய அமைச்சரவையானது ஒப்புதல் அளித்துள்ளது

- கூட்டுறவு துறையில் உள்ள தானிய சேமிப்பு திறனை அதிகரிப்பதற்கு ஒரு லட்சம் கோடி ரூபாய் திட்டத்திற்கு மத்திய அமைச்சரவையானது சமீபத்தில் ஒப்புதல் அளித்துள்ளது.
- நகர அளவில் ஒருங்கிணைந்த கழிவு மேலாண்மை மற்றும் மாநில அளவில் காலநிலை சார்ந்த சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், தேசிய அளவில் நிறுவனங்களை வலுப்படுத்துதளுக்கும் ஆதரவளிக்க இந்த திட்டமானது அமையும் என மத்திய அரசு தெரிவித்துள்ளது.

### இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையத்திற்கான தேசிய பயிற்சி மையத்தை மன்சுக் மாண்டவியா திறந்து வைத்தார்

- உத்திரபிரதேச மாநிலம் காஜியாபாத்தில் மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா,இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையத்தின் (FSSAI) அதிநவீன தேசிய பயிற்சி மையத்தை திறந்து வைத்தார்.
- FSSAI ஆனது உணவு வணிக ஆபரேட்டர்கள் மற்றும் பிற பங்குதாரர்களுக்கான திறன் மேம்படுத்தலின் முக்கியத்துவத்தை உணர்ந்து பல்வேறு பயிற்சி திட்டங்களை வழங்குவதற்காக இந்த தேசிய பயிற்சி மையத்தை நிறுவியுள்ளது. மேலும் தெருவோர வியாபாரிகளுக்கான உணவுப் பாதுகாப்பு மற்றும் சான்றிதழ் (FoSTaC) வழங்க மின்–கற்றல் செயலி தொடங்கப்பட்டது.

## PM SVANidhi மொபைல் செயலி அறிமுகம்.

- வீட்டுவசதி மற்றும் நகர்புற விவகார அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி அவர்களால், “தெரு வியாபாரிகளுக்காக, கடன் வழங்கும் விண்ணப்ப செயல்முறையை எளிதாக்குவதற்கும், சில திட்டம் சம்பந்தப்பட்ட தேவையான தகவல்களை அவர்களுக்கு வழங்குவதற்கும்“ PM SVANidhi என்ற மொபைல் செயலியை அறிமுகப்படுத்தியுள்ளார்.
- தெருவோர வியாபாரிகளிடையே சுயதொழில் மற்றும் அவர்களின் தன்னம்பிக்கையை மீட்டெடுப்பதை நோக்கமாகக் கொண்டு அமைந்துள்ளது. இந்தத் திட்டமானது கோவிட்-19 பெருந்தொற்றினால் பாதிக்கப்பட்ட தெருவோர வியாபாரிகளுக்கு அவர்களின் வாழ்வாதாரத்தை மீட்டெடுக்கும் முயற்சியை ஏற்படுத்துகிறது என அறிவிக்கப்பட்டுள்ளது.

## பல்வேறு ஒருங்கிணைந்த கூட்டுறவுகளை மேம்படுத்த இந்தியா மற்றும் நேபாளம் இடையே ஏழு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளன.

- “வணிகம் மற்றும் வர்த்தகம், நீர்மின் திட்டங்கள், எல்லை தாண்டிய பெட்ரோலிய குழாய் இணைப்பு, ஒருங்கிணைந்த சோதனைச் சாவடிகளின் மேம்பாடு மற்றும் பணம் செலுத்தும் வழிமுறைகள்” என பல துறைகளில் இந்தியாவும் நேபாளமும் இணைந்து செயல்பட ஜூன்1 அன்று ஏழு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளன.
- “பொருளாதாரம், கல்வி, எரிசக்தி, நாட்டின் உள்கட்டமைப்பு மற்றும் மக்களிடையேயான தொடர்புகள்“ ஆகிய துறைகளில் இந்திய-நேபாள உறவை மேம்படுத்துவதற்கு இந்த ஒப்பந்தங்கள் ஒரு சாதனை மைல்கல்லாக அமையும் என நேபாள பிரதமர் தெரிவித்துள்ளார்.

## ஜல் சக்திக்கான மத்திய அமைச்சர் GOBARdhan-என்ற ஒருங்கிணைந்த பதிவு போர்ட்டலைத் தொடங்கி வைத்துள்ளார்.

- ஜல் சக்திக்கான மத்திய அமைச்சர், ஸ்ரீ கஜேந்திர சிங் ஷெகாவத், இந்திய அளவில் இயற்கை எரிவாயு மற்றும் CBG துறையில் முதலீடு மற்றும் பங்கேற்பை மதிப்பிடுவதற்கு, GOBARdhan-க்கான ஒருங்கிணைந்த பதிவு போர்ட்டலைத் தொடங்கி வைத்துள்ளார்.
- இந்தியாவில் CBG/இயற்கை எரிவாயு ஆலைகளை அமைப்பதற்கான செயல்முறையை ஒழுங்குபடுத்துவதற்கான ஒரு வலைதள களஞ்சியமாக இது செயல்படும். Galvanizing Organic Bio-Agro Resources Dhan (GOBARdhan) என்பது இந்திய அரசின் ஒரு முக்கிய வளர்ச்சிக்கான முயற்சியாகும், இது “முழுமையான அரசாங்க அணுகுமுறையின் அடிப்படையிலும், நாட்டின் ஒட்டு மொத்த பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக, கழிவுகளை செல்வமாக மாற்றும் முறையையும் வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## NHPC மற்றும் VUCL ஆகியவை நேபாளத்தில் நீர்மின்சார திட்டத்தை மேம்படுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.

- இந்திய அரசு நிறுவனமான NHPC மற்றும் நேபாளத்தின் Vidhyut Utpadan Company Limited (VUCL) ஆகியவை நேபாளத்தில் ஃபுகோட் கர்னாலி நீர்மின் திட்டத்தை (480MW) மேம்படுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (MoU) ஜூன் 1 அன்று கையெழுத்திட்டன.
- இதன் மூலம் கர்னாலி ஆற்றின் நீரோட்டத்தை மின் உற்பத்திக்கு பயன்படுத்த மற்றும் உற்பத்தி செய்யப்பட்ட மின்சாரத்தை நேபாளத்தின் மின் அமைப்பில் ஒருங்கிணைக்க உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்தில் நிறுவப்பட்ட திறனானது 480 மெகாவாட்டாக இருக்கும் மற்றும் சராசரி ஆண்டு உற்பத்தி சுமார் 2448 ஜிகாவாட்டாக இருக்கும் என ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## NTPC மற்றும் UPRVUNL ஆகியவை புதுப்பிக்கத்தக்க ஆற்றல் கொண்ட பூங்காக்கள் மற்றும் திட்டங்களின் வளர்ச்சியில் இணைந்து செயல்பட திட்டமிட்டுள்ளது.

- ரிஹான்ட் நீர்த்தேக்கம் மற்றும் பிற நீர்நிலைகள், அயோத்தி நகரின் சூரியமயமாக்கலுக்காக அர்ப்பணிக்கப்பட்ட சோலார் PV திட்டத்தின் மேம்பாடு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பூங்காக்கள் ஆகியவற்றில் சூரியசக்தி திட்டங்களை அமைக்க NTPC க்ரீன் எனர்ஜி லிமிடெட்(NGEL) மற்றும் UPRVUNL ஆகிய நிறுவனங்கள் இணைந்து செயல்படும் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.
- இத்திட்டம் மூலம் நாட்டின் வளர்ச்சிக்கு புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வளங்களை அதிகமாக பயன்படுத்த முடியும் என்றும் இது மற்ற எரிசக்தி வளங்களை பிற நாடுகளிலிடமிருந்து இறக்குமதி செய்வதை குறைக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 2030க்குள் ஐக்கிய அரபு அமீரகத்தின் மிகப்பெரிய ஏற்றுமதி நாடாக இந்தியா அமையும் என சமீபத்திய அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

- 2030 ஆம் ஆண்டுக்குள் ஐக்கிய அரபு அமீரகத்தின்(UAE) மிகப்பெரிய ஏற்றுமதி நாடாக

இந்தியா இருக்கும் என சர்வதேச நிறுவனமான ஸ்டாண்டர்ட் சார்ட்டர்டின் தனது சமீபத்திய ஆய்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

- "வணிகத்தின் எதிர்காலம்: உயர்-வளர்ச்சி தாழ்வாரங்களில் புதிய வாய்ப்புகள்" என்ற தலைப்பில் சமீபத்தில் வெளியிட்ட அறிக்கையின்படி, "ஐக்கிய அரபு அமீரகத்தின் ஏற்றுமதி 2030 ஆம் ஆண்டளவில் 543 பில்லியன் அமெரிக்க டாலர்களை எட்டும்" மற்றும் இந்த வளர்ச்சியானது வலுவான ஆண்டுக்கான வளர்ச்சி விகிதமான 5.5 சதவீதத்தை அதிகரிக்கும் எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ரயில்வே அமைச்சகமானது புதுதில்லியில் இரண்டு நாள் "சிந்தன் ஷிவிர்" நிகழ்ச்சியை ஏற்பாடு செய்துள்ளது.

- டெல்லியில் இரண்டு நாள் சிந்தன் ஷிவிர் நிகழ்ச்சியை ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் ஏற்பாடு செய்துள்ளார்.
- இந்தியப் பொருளாதார வளர்ச்சியில் ரயில்வேயின் பங்கு, பாதுகாப்பு மற்றும் புதிய தொழில்நுட்பங்களை மேம்படுத்துவதை இந்த நிகழ்ச்சியானது நோக்கமாக கொண்டுள்ளது.
- சிந்தன் ஷிவிர் – பிரதமர் மோடியின் தொலைநோக்கு கொள்கையை 2047ஐ செயல்படுத்துவதற்கான செயல் திட்டமாகும்.

## 14 நிலையான டோஸ் கலவை(FDC) மருந்துகளின் உற்பத்தி மற்றும் விற்பனைக்கு தடை.

- இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட செயலில் உள்ள மருந்துகளைக் கொண்ட 14 நிலையான டோஸ் கலவை(FDC) மருந்துகளின் உற்பத்தி, விற்பனை மற்றும் வழங்கலை மத்திய அரசாங்கமானது தடை செய்துள்ளது.
- நிபுணர் குழு ஆணையமானது இந்த மருந்துகள் எந்த சிகிச்சை அறமும் இல்லை என்றும், இது மனிதர்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தலாம் என்றும் கண்டறியப்பட்டுள்ளது. இந்த தடைசெய்யப்பட்ட மருந்துகளானது சளி, இருமல் மற்றும் சுவாச நோய்த்தொற்றுகளுக்குப் மருந்தாக பயன்படுத்தப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## இந்திய கடற்படை மற்றும் இந்திய கடல்சார் பல்கலைக்கழகம் இடையே தொழில்நுட்ப கூட்டுறவை மேம்படுத்த புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது.

- இந்திய கடற்படைக்கும் இந்திய கடல்சார் பல்கலைக்கழகத்திற்கும் இடையே தொழில்நுட்ப ஒத்துழைப்பை மேம்படுத்த புரிந்துணர்வு ஒப்பந்தமானது ஜூன் 02,2023 அன்று புதுதில்லியில் கையெழுத்திடப்பட்டுள்ளது.
- பயிற்சி, மேம்பாடு, கூட்டு ஆராய்ச்சி, படிப்புகள், சிறப்பு மையம் (Marine Engine), INS சிவாஜி மற்றும் இந்திய கடல்சார் பல்கலைக்கழகத்தின் குழுக்களின் நேர்முக கள அளவிலான சிக்கல்களைத் தீர்ப்பது போன்ற பல்வேறுப்பட்ட ஒத்துழைப்பை மேம்படுத்த இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## முன்னாள் ராணுவத்தினருக்கு வேலைவாய்ப்பை உருவாக்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- முன்னாள் ராணுவத்தினருக்கு மற்றும் கார்ப்பரேட் பெருநிறுவனங்களில் அதிக வேலை வாய்ப்புகளை உருவாக்க மற்றும் அவர்களை பொதுவான தளத்தில் கொண்டு வரும் முயற்சியை மேற்கொள்ள முன்னாள் ராணுவத்தினர் நலத்துறை மற்றும் மீள்குடியேற்ற இயக்குனரகம் இடையே ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU) மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- திறமையான மனிதவளத்திற்கும் உள்நாட்டில் கிடைக்கும் தொழில் வாய்ப்புகளுக்கும் இடையிலான ஒரு இடைவெளியைக் இந்த ஒப்பந்தமானது குறைத்து நாட்டின் முன்னேற்றத்திற்கும், முன்னாள் ராணுவ வீரர்களின் வாழ்வையும் மேம்படுத்தும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மணிப்பூரில் நடந்த வன்முறை சம்பவங்கள் குறித்து விசாரணை நடத்த மத்திய அரசானது விசாரணை ஆணையத்தை அமைத்துள்ளது.

- மணிப்பூரில் சமீபத்தில் நடந்த வன்முறை சம்பவங்கள் குறித்து விசாரிக்க கவுகாத்தி உயர்நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதியான அஜய் லம்பா தலைமையில் ஒரு விசாரணை ஆணையத்தை மத்திய அரசு அமைத்துள்ளது.
- இந்த ஆணையமானது 3 உறுப்பினர்களின் கீழ் இயங்கும் என்றும் பல்வேறு சமூகங்களைச் சேர்ந்தவர்களை குறிவைத்து நடத்தப்படும் வன்முறை மற்றும் கலவரங்களுக்கான காரணங்கள் மற்றும் அவற்றின் தாக்கத்தை இந்த ஆணையமானது விசாரிக்கும் என மத்திய அரசு தெரிவித்துள்ளது.

## 11 பவளப்பாறைகளில் சார்ந்த மேம்பாட்டுத் திட்டங்களை (HICDP) செயல்படுத்துவதற்கான 10 ஒப்பந்தங்களில் இந்தியாவும் மாலத்தீவும் கையெழுத்திட்டன.

- பல்வேறுப்பட்ட கூட்டுறவு ஒத்துழைப்புகளை மேம்படுத்துவதற்கும், 11 பவளப்பாறைகளில்

சார்ந்த மேம்பாட்டுத் திட்டங்களை (HICDP) செயல்படுத்துவதற்கும் மற்றும் நாட்டின் பொருளாதாரத்தை இரு நாடுகளும் இணைந்து மேம்படைவதற்கான 10 ஒப்பந்தங்களில் இந்தியாவும் மாலத்தீவும் கையெழுத்திட்டன.

- 34 தீவுகளில் நீர் மற்றும் சுகாதார முன்முயற்சிகளை உடனடியாக மேற்கொள்ளுதல், 4,000 வீட்டுத் தொகுதிகள் மற்றும் வீதிகள் மற்றும் மறுசீரமைப்புக்கான அபிவிருத்தித் திட்டத்தை மேம்படுத்துதல் ஆகியவற்றிக்கு இந்த ஒப்பந்தங்களானது முக்கிய ஊக்கியாக அமையும் என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா, மாநிலங்களுக்கான உணவு பாதுகாப்புக் குறியீட்டை வெளியிட்டுள்ளார்.

- 2023 ஆம் ஆண்டு உணவுத் தரம் உயிர்களைக் காப்பாற்றும் என்ற கருப்பொருளைக் கடைப்பிடிக்கப்படும் உணவுப் பாதுகாப்பு நாளன்று(ஜூன் 7 ) , மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா, மாநிலத்திற்கான உணவு பாதுகாப்புக் குறியீட்டை வெளியிட்டுள்ளார்.
- தற்போது வெளியிட்டுள்ள இந்த தேசிய உணவுப் பாதுகாப்புக் குறியீட்டில் குஜராத் மாநிலமானது முதலிடத்தில் உள்ளது. 2021-22 மதிப்பீட்டில், மாநில உணவுப் பாதுகாப்புக் குறியீட்டில்(SFSI) பெரிய மாநிலங்களில் குஜராத் இரண்டாவது இடத்தைப் பிடித்தது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## 2023-24 காரீஃப் பயிர்களுக்கான சந்தைப்படுத்தல் குறைந்தபட்ச ஆதரவு விலைகளுக்கு(MSP) மத்திய அமைச்சரவையானது ஒப்புதல் அளித்துள்ளது.

- மாண்புமிகு பிரதமர் மோடி தலைமையிலான பொருளாதாரத்தின் விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழுவானது(CCEA), 2023-24ஆம் ஆண்டுகளுக்கான அனைத்து காரிஃப் பயிர்களுக்கும் குறைந்தபட்ச ஆதரவு விலையை (MSP) உயர்த்த மத்திய அமைச்சரவையானது ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்த ஒப்புதலானது விவசாயிகளின் விளைபொருட்களுக்கு லாபகரமான விலையை உறுதி செய்வதற்கும், அவற்றை சரியான முறையில் சந்தைப்படுத்துதலையும் ஊக்கப்படுத்தும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் காரிப் பயிர்கள் அடங்கிய விலை தர நிர்ணய பட்டியலுக்கும் மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

## ஜம்முவில் ONGC தேசியப் பேரிடர் தணிப்பு மையம் திறக்கத் திட்டம்.

- பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு மத்திய அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி மற்றும் லெப்டினன்ட் கவர்னர் மனோஜ் சின்ஹா ஆகியோர் ஜூன் 06 அன்று ஜம்முவில் ONGCயின் தேசிய பேரிடர் தணிப்பு மையம் மற்றும் யாத்ரி நிவாஸ் ஆகியவற்றிற்கு அடிக்கல் நாட்டியுள்ளனர்.
- இது நிறுவப்பட்டால் பேரிடர் ஏற்படும் காலங்களில் விரைந்து செயலாற்றவும் மக்களுக்கு உடனடியான உதவிகளை வழங்க முடியும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.
- சர்வதேச மெட்டா நிறுவனம் மற்றும் பெண்கள், குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகமானது இணைந்து Amrit Generation முன்னெடுப்பைத் தொடங்கியுள்ளன.
- மத்தியப் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சர் (MWCD) ஸ்மிருதி இரானி, சர்வதேச மெட்டா நிறுவனத்துடன் இணைந்து ஜூன் 07 அன்று அம்ரித் தலைமுறை (Amrit Generation)என்ற முன்னெடுப்பு பிரச்சாரத்தைத் தொடங்கி வைத்துள்ளார்.
- இந்த முயற்சி 14 முதல் 18 வயதுக்குட்பட்ட இளைஞர்களின் கற்பனைத்திறனை எதிர்காலத்திற்கான ஆர்வத்தையும் கனவுகளையும் வெளிப்படுத்தும் நோக்கத்துடன் இந்த முன்னெடுப்பானது ஒரு தளமாக அமையும் என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## நியாய விகாஸ் போர்டல் அறிமுகம்.

- நீதித்துறையின் மத்திய நிதியுதவித் திட்டம் (CSS), நீதித்துறை உள்கட்டமைப்புக்கானச் சட்ட வரைவுகள் மற்றும் நீதித்துறை உள்கட்டமைப்பு திட்டங்களைச் சிறப்பாக வழங்குவதற்காக வெளிப்படையான இணைய போர்ட்டல் சேவையை NRSC இன் தொழில்நுட்ப உதவியுடன், இஸ்ரோவானது நியாய விகாஸ் என்ற வலைதள வசதியை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்த போர்ட்டல் மூலம் வெளிப்படையான சேவையை பயனாளர்களுக்கு கொண்டு செல்ல முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பாட்னாவில் G20 தொழிலாளர் ஈடுபாட்டுக் குழுவின் இரண்டு நாள் உச்சி மாநாடு நடத்தத் திட்டம்.

- ஜூன் 22 மற்றும் 23 ஆம் தேதிகளில் பீகார் மாநிலத்தின்

பாட்னாவில் G20 தொழிலாளர் ஈடுபாட்டுக் குழுவின் இரண்டு நாள் உச்சி மாநாடு நடைபெற திட்டமிடப்பட்டுள்ளது. , One Earth, One Family, One Future என்ற கருப்பொருளை மேம்படுத்துவதற்கான உத்திகள் பற்றி இந்த மாநாட்டில் விவாதிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

- ஜி-20 உறுப்பு நாடுகள் மற்றும் இதர நாடுகளைச் சேர்ந்த சுமார் 250 பிரதிநிதிகள் இந்த உச்சிமாநாட்டில் பங்கேற்க உள்ளதாகவும் மாநில கலாச்சாரம், கலை மற்றும் இளைஞர் துறையானது இந்த மாநாட்டை ஏற்பாடு செய்வதற்கான ஒருங்கிணைப்பு அமைப்பாக மாற்றப்பட்டுள்ளது எனவும் பீகார் மாநில நிர்வாகம் அறிவித்துள்ளது.
- இந்தியா, பிரான்ஸ் மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகள் கடல்சார் கூட்டுப் பயிற்சியை தொடங்குகின்றன.
- இந்தியா, பிரான்ஸ் மற்றும் ஐக்கிய அரபு அமீரகமானது கடல்சார் கூட்டாண்மை பயிற்சியின் முதல் பதிப்பை ஓமன் நாட்டின் வளைகுடாவில் ஜூன் 07 அன்று தொடங்கியுள்ளது.
- இந்த முதல் பயிற்சியானது மூன்று கடற்படைகளுக்கு இடையேயான முத்தரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவதையும், கடல்சார் சூழலில் நீண்டகால மற்றும் தற்கால அச்சுறுத்தல்களை எதிர்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதையும் நோக்கமாக கொண்டு அமைந்துள்ளதாகும். இந்த பயிற்சியானது 2 நாட்கள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

## ஒருங்கிணைந்த நீர் வளங்களுக்கான 2 ஆண்டு செயல் திட்டம் அறிமுகம்.

- இரண்டு ஆண்டுகளுக்கான ஒருங்கிணைந்த நீர் வளங்கள் சம்பந்தப்பட்ட செயல் திட்டத்தை(2023-25) ஹரியானா முதல்வர் தொடங்கி வைத்துள்ளார்.
- 4 முக்கிய துறைகளின் கீழ் இத்திட்டத்தின்படி, 2 ஆண்டுகளில் 49.7 சதவீதத் தண்ணீரை சேமிக்க இலக்கு வைக்கப்பட்டுள்ளது. நீர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்தல் மற்றும் நீர் தேங்குதல் ஆகிய சவால்களை தீர்ப்பதை இந்த திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. ஹமாரி பாஷா, ஹமாரி விராசத்
- புதுதில்லியில் உள்ள இந்திய தேசிய ஆவணக் காப்பக வளாகத்தில் 75வது சர்வதேச ஆவணக் காப்பக தினத்தைச் சிறப்பிக்கும் வகையில் ஹமாரி பாஷா, ஹமாரி விராசத் என்ற தலைப்பிலான ஆசாதி கா அம்ரித் மஹோத்சவின் (AKAM) கண்காட்சியை மத்திய கலாச்சார இணை அமைச்சர் ஸ்ரீமதி மீனாட்சி லேகி ஜூன் 09 அன்று தொடங்கி வைத்துள்ளார்.
- உலகளவில் பேசப்படும் 8000 மொழிகளில் இந்தியாவில் மட்டும் சுமார் 788 மொழிகள் பேசப்படுகின்றன என்றும் அதன் பின்னணியில் ஒரே தேசமாக நமது மொழியியல் பன்முகத்தன்மையின் சிறப்பான பாரம்பரியத்தை நினைவுகூருவதற்கான முயற்சியாக இந்த கண்காட்சி அமைக்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## முதல் தேசிய பயிற்சி மாநாடு

- புதுதில்லியின் பிரகதி மைதானத்தில் உள்ள சர்வதேசக் கண்காட்சி மற்றும் மாநாட்டு மையத்தில் பிரதமர் மோடி ஜூன் 11, 2023 அன்று முதல் தேசிய பயிற்சி மாநாட்டைத் தொடங்கி வைக்க உள்ளார்.
- குடிமை பணியாளர்களுக்கான பயிற்சி நிறுவனங்களிடையேயான ஒத்துழைப்பை வளர்ப்பதற்கும், நாடு முழுவதும் உள்ள அரசு ஊழியர்களுக்கானப் பயிற்சி உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கும் இந்த தேசிய பயிற்சி மாநாடானது திறன் மேம்பாட்டு ஆணையத்தால் நடத்தப்பட உள்ளது.

## அந்தராஷ்டிரிய யோகா திவாஸ் மீடியா சம்மனின் இரண்டாவது பதிப்பை மத்திய அரசாங்கம் அறிவித்துள்ளது.

- 2023 ஆம் ஆண்டு சர்வதேச யோகா தினத்தை கொண்டாடுவதன் ஒரு பகுதியாக, தகவல் மற்றும் ஒளிபரப்புக்கான அமைச்சகமானது ஜூன் 09 அன்று அந்தராஷ்டிரிய யோகா திவாஸ் மீடியா சம்மனின் இரண்டாவது பதிப்பிற்கான ஊடக விருதை அறிவித்துள்ளது.
- இந்த நிகழ்ச்சியில், 22 இந்திய மொழிகள் மற்றும் ஆங்கிலத்தில் 11 மொழிகளுக்கான விருதுகளானது செய்தித்தாள்களில் யோகாவிற்க்கான சிறந்த ஊடக உள்ளடக்கத்திற்க்கான பிரிவின் கீழ் வழங்கப்படும் என அமைச்சகத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இந்திரா சாகர் அணையில் 525 மெகாவாட் (MW) மேம்பாடு செய்யப்பட்ட சேமிப்பகத்தை கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

- மத்தியப் பிரதேசத்தின் கந்த்வா பகுதியில் உள்ள இந்திரா சாகர் அணைக்கு அருகில் நர்மதா ஹைட்ரோ எலக்ட்ரிக் டெவலப்மென்ட் கார்ப்பரேஷன் நிறுவனமானது(NHDC) 525 மெகாவாட் அளவிலான மேம்பாடு செய்யப்பட்ட சேமிப்பகத்தை கட்டுவதற்கான திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக மத்திய மின் அமைச்சகமானது ஜூன் 09 அன்று அறிவித்துள்ளது.
- இந்த திட்டமானது இந்திரா சாகர் திட்டத்தின் ஒரு பகுதியாக அமையும்

எனவும் இந்த திட்டத்திற்கு ஓம்காரேஷ்வர் நீர்த்தேக்கங்கள் பயன்படுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த திட்டமானது மத்தியப் பிரதேசத்தில் அதிகரித்து வரும் எரிசக்தித் தேவையைப் பூர்த்தி செய்யும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

## நாட்டில் உள்ள கூட்டுறவு வங்கிகளை வலுப்படுத்துவதற்காக நான்கு முக்கிய முன்னெடுப்புகளை மத்திய அரசு அறிவித்துள்ளது.

- நமது நாட்டில் உள்ள 1,514 நகர்ப்புறத் கூட்டுறவு வங்கிகளை (UCB) வலுப்படுத்த நான்கு முக்கிய முன்னெடுப்பு முயற்சிகளை மத்திய அரசானது ஜூன் 09 அன்று அறிவித்துள்ளது.
- இந்திய ரிசர்வ் வங்கி மற்றும் மத்திய அரசால் இணைந்து அறிவிக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளில், வணிக வங்கிகளுக்கு இணையாக இந்த வங்கிகளை ஒருமுறை தீர்வு காண அனுமதிப்பது, நகர்ப்புற கூட்டுறவு வங்கிகள் புதிய கிளைகளைத் திறக்க அனுமதி வழங்குவது மற்றும் பல்வேறுப்பட்ட நியமனம் ஆகியவை இந்த முன்னெடுப்பு முயற்சிகளின் நோக்கமாகக் கொண்டு வெளியிடப்பட்டுள்ளது.

## பாதுகாப்பு உபகரனுங்களுக்காக ஒரு ஒப்பந்தத்தில் இந்திய ராணுவமானது கையெழுத்திட்டுள்ளது.



- உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட தந்திரோபாய லேன் வானொலியை வாங்குவதற்கு, பெங்களூருவை தளமாகக் கொண்ட ஒரு பாதுகாப்பு நிறுவனத்துடன் இந்திய ராணுவமானது ஒரு ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளதாக ஜூன் 09 அன்று தெரிவித்துள்ளது.
- தந்திரோபாய லேன் ரேடியோ என்பது நம்பகமான தகவல்தொடர்புகளை வழங்குவதற்கான ஒரு அதிநவீன உயர் அலைவரிசை கொண்ட கம்பியில்லாத(Wireless) ரேடியோ கருவியாகும் மற்றும் இது பாதுகாப்பு மற்றும் விண்வெளித் துறையில் புதுமைகளை வளர்ப்பதற்காகவும் தொழில்நுட்ப வளர்ச்சியை ஊக்குவிப்பதற்காகவும் ஒரு தனித்துவமான சுற்றுச்சூழல் அமைப்பை உருவாக்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## HPCL E27 மற்றும் எத்தனால் கலந்த டீசல் பற்றிய விமானம் சார்ந்த ஆய்வை அறிமுகப்படுத்தியுள்ளது.



- அனைத்து நிறுவங்களும் பெட்ரோலில் எத்தனால் கலப்பதை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்ட மற்றும் 2025 ஆம் ஆண்டுக்குள் இந்தியாவில் எத்தனால் கலப்படத்திற்கான-வழித்திட்டத்திற்கு இணங்க, எண்ணெய் சந்தைப்படுத்தல் சம்பத்தப்பட்ட நிறுவனமானது இந்தியாவில் HPCL ஆனது ஆராய்ச்சித் திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- E27 எரிபொருள் என்பது 27 சதவீதம் எத்தனால் மற்றும் புதைபடிவ எரிபொருள் அடிப்படையிலான ஒரு கலவையாகும். நாட்டின் எண்ணெய் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செலவு, எரிசக்தி பாதுகாப்பு, சிறந்த காற்றின் தரம், குறைந்த கார்பன் உமிழ்வு போன்றவற்றைக் குறைக்கும் நோக்கத்துடன் இந்த ஆய்வானது வெளியிடப்பட்டுள்ளது.

## கொச்சி மீன்பிடி துறைமுகத்தை நவீனமயமாக்குதல் மற்றும் மேம்படுத்துவதற்கான திட்டத்திற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.



- மத்திய மீன்வள அமைச்சர் ஸ்ரீ பர்ஷோத்தம் ரூபாலா மற்றும் துறைமுகங்கள் கப்பல் மற்றும் நீர்வழித்துறை அமைச்சர் திரு சர்பானந்தா சோனோவால் ஆகியோர் ஜூன் 11 அன்று விலிங்டன் தீவின் தோப்பும்பட்டியில் உள்ள கொச்சி மீன்பிடி துறைமுகத்தை நவீனமயமாக்குதல் மற்றும் மேம்படுத்துவதற்கான திட்டத்திற்கு அடிக்கல் நாட்டியுள்ளார்.
- கொச்சி மீன்பிடி துறைமுகத்தில் இயங்கும் 700 மீன்பிடி படகுகளின் பயன் மற்றும் சுமார்

10000 மீனவர்களின் நேரடி வாழ்வாதார சங்கிலி மேம்பாடு மற்றும் 30000 மீனவர்களின் மறைமுக வாழ்வாதார மேம்பாடு ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு இந்தத் திட்டம் செயல்படும் என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## UAE – இந்தியாவில் இந்த ஆண்டுக்கான 4வது பெரிய முதலீட்டாளராக உருவெடுத்துள்ளது.

- ஐக்கிய அரபு அமீரகத்திலிருந்து இந்தியாவிற்கான அந்நிய நேரடி முதலீடானது(FDI) இந்த ஆண்டு மூன்று மடங்கு உயர்ந்து இந்தியாவின் 4ஆவது பெரிய முதலீட்டாளராக உருவெடுத்துள்ளது. அதாவது 2021-22 இல் USD 1.03 பில்லியனில் இருந்து கடந்த நிதியாண்டில் USD 3.35 பில்லியனாக உயர்ந்துள்ளது என சமீபத்தில் வெளியிடப்பட்ட அரசாங்கத் தரவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- மே1-ல் நடைமுறைக்கு வந்த இரு நாடுகளுக்கிடையிலான விரிவான பொருளாதார கூட்டு ஒப்பந்தத்தில் (CEPA) இரு நாடுகளும் கையெழுத்திட்டதே இந்த முன்னேற்றத்திற்கு காரணம் எனப் பொருளாதார வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர்.

## BSF மற்றும் BGB இடையேயான தலைமை இயக்குநர் மட்டத்திலான எல்லை ஒருங்கிணைப்பு மாநாடு டெல்லியில் தொடங்கியுள்ளது.



- இந்தியாவின் எல்லைப் பாதுகாப்புப் படை (BSF) மற்றும் வங்கதேசத்தின் எல்லைக் காவலர் படை(BGB) இடையேயான 53வது தலைமை இயக்குநர் மட்டத்திலான நிலை எல்லை ஒருங்கிணைப்பு மாநாடானது டெல்லியில் ஜூன் 11 இல் தொடங்கியது.
- நான்கு நாட்கள் நடைபெறும் இந்த மாநாட்டில், இரு நாடுகளுக்கிடையேயான பல்வேறு எல்லை தாண்டிய குற்றங்களைக் கூட்டாக தடுப்பது மற்றும் எல்லைப் பாதுகாப்பிற்கான ஒருங்கிணைப்பு மற்றும் எல்லை தொடர்பான பிரச்சனைகள் குறித்து விவாதிக்க இந்த மாநாடானது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. BSF-BGB ஒருங்கிணைப்பு மாநாடானது 2022 இல் டாக்காவில் நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## டிஜிட்டல் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கான மாநாட்டை ஜூன் 12 ல் நடத்த திட்டம்.



- டிஜிட்டல் பாதுகாப்பின் வளர்ச்சி மற்றும் அதன் மேம்பாடு என்பதை தலைப்பாக கொண்ட டிஜிட்டல் பொருளாதார பணிக்குழு (DEWG) மாநாடானது புனேயில் ஜூன் 12இல் நடத்த ஜி20 அமைப்பு ஏற்பாடு செய்துள்ளது. இந்த மாநாடானது ஜூன் 12 முதல் ஜூன் 14 வரை நடைபெற உள்ளது.
- டிஜிட்டல் தளத்தின் பொது மற்றும் சிறப்பான உள்கட்டமைப்பு, டிஜிட்டல் பொதுப் பொருளாதாரத்தில் பாதுகாப்பை உறுதி செய்தல் மற்றும் டிஜிட்டல் திறன்களை மேம்படுத்துதல் ஆகிய மூன்று முக்கிய கூறுகளை நோக்கமாகக் கொண்டு இந்த மாநாடானது நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.


## முன்னாள் ராணுவத்தினருக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்க மத்திய அரசு திட்டம்.

- பாதுகாப்பு அமைச்சகத்தின் (MoD) முன்னாள் படைவீரர் நலத் துறையின் கீழ் பிரிவான இயக்குநரக பொது மீள்குடியேற்ற அமைப்பானது (DGR), கொடாக் மஹிந்திரா இன்சூரன்ஸ்(KMI ltd) என்ற தனியார் நிறுவனத்துடன் ஜூன் 12 அன்று புதுதில்லியில் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொண்டது.
- முன்னனி பெரிய மற்றும் நடுத்தர கார்ப்பரேட் நிறுவனங்களையும், முன்னாள் ராணுவ வீரர்களையும் ஒரு பொதுவான தளத்தில் கொண்டு வருவதன் மூலம் அவர்களுக்கு அதிக மற்றும் திருப்திகரமான வேலை வாய்ப்புகளை உருவாக்குவதை நோக்கமாக கொண்டு இந்த ஒப்பந்தமானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## இந்தியாவின் G20 தலைமையின் கீழ் 4வது மற்றும் இறுதி மாநாட்டை கல்வி அமைச்சகம் நடத்த திட்டமிட்டுள்ளது.

- மத்தியக் கல்வி அமைச்சகமானது மகாராஷ்டிராவின் புனேவில் ஜூன் 19 முதல் 21 வரை இந்தியாவின் G20 தலைமையின் கீழ் 4வது மற்றும் இறுதி கல்வி பணிக்குழு (EdWG) மாநாட்டை நடத்தத் திட்டமிட்டுள்ளது.
- கலப்பு கற்றலின் சூழலில் அடிப்படையின்

எழுத்தறிவு மற்றும் எண்ணற்ற தன்மையை உறுதி செய்தல் என்பதை தலைப்பாக கொண்டு இந்த மாநாடானது நடக்க உள்ளது. இந்த மாநாடானது சில குறிப்பிடத்தகக்க வளர்ச்சியைக் கல்வி துறையில் ஏற்படுத்தும் என்று எதிப்பார்க்கப்படுவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.



## உள்நாட்டிலேயே முதன்முதலில் உருவாக்கப்பட்ட விலங்குகளிலிருந்து பெறப்பட்ட திசு – இந்திய மருந்துக் கட்டுப்பாட்டு அமைப்பு ஒப்புதல்.

- பாலூட்டிகளின் உறுப்புகளிருந்து, உள்நாட்டிலேயே குறைந்த செலவில் உருவாக்கப்பட்ட திசு பொறியியல் மருந்துக்கு இந்திய மருந்துக் கட்டுப்பாட்டாளர் அமைப்பானது ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்த மருந்தானது சிறிய தழும்புகளுடன் உள்ள தோல் காயங்களை விரைவாக குணப்படுத்தும் என்றும் விலங்குகளிலிருந்து பெறப்பட்ட இது வகுப்பு D தரத்திலான உயிரியல் தொழில்நுட்ப மருந்து பிரிவில் வைக்கப்பட்டுள்ளது எனவும் இந்திய மருந்துக் கட்டுப்பாட்டாளர் அமைப்பு தெரிவித்துள்ளது.

Drugs Controller General of India

## பறவைகள் மற்றும் விலங்குகளை வெப்பத்தில் இருந்து காப்பாற்ற BSF ஆனது டானி-பானி என்ற முன்னெடுப்பை தொடங்கியுள்ளது.

- இந்தியாவின் துணை ராணுவ படைககளில் ஒன்றான எல்லைப் பாதுகாப்புப் படையானது(BSF) ராஜஸ்தானின் ஜெய்சால்மர் மாவட்டத்தில் கடும் வெயிலின் தாக்கத்திற்குள்ளான பறவைகள் மற்றும் விலங்குகளுக்கு உணவு மற்றும் தண்ணீரை ஏற்பாடு செய்யும் சிறப்பான முன்னெடுப்பை டானா-பானி என்ற பெயரில் தொடங்கியுள்ளது.
- எல்லைப் பகுதியில் உள்ள பறவைகள் மற்றும் விலங்குகளானது கடும் வெப்பத்தில் இருந்து பாதுகாப்பதை நோக்கமாக கொண்டு இந்த முன்னெடுப்பானது நடைபெறுகிறது என BSF நிர்வாகம் தெரிவித்துள்ளது.

## ராணுவத்தின் தகவல் தொழில்நுட்பத்தை மேம்படுத்த ரூ.500 கோடி மதிப்பிலான ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- பாதுகாப்பு அமைச்சகமானது இந்திய ராணுவத்தின் தகவல் தொழில்நுட்பத்தை மேம்படுத்த ஜூன் 15, 2023 அன்று புதுதில்லியில் ஹைதராபாத்தை தளமாக கொண்டு இயங்கும் ஐகாம் டெலி நிறுவனத்துடன் 1,035 உபகரண கொள்முதலுக்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- இந்த ஒப்பந்தத்தின் மூலம் 1,035 அளவிலான மற்றும் 500 கோடி ரூபாய் மதிப்பிலான 5/7.5 டன் ரேடியோ ரிலே தகவல் தொடர்பு சாதன கொள்கலன்கள் வாங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பிரான்சில் நடைபெறும் AIAF இல் இந்தியா முதல் முறையாக பங்கேற்க உள்ளது.

- பிரான்சில் நடைபெற உள்ள இந்த ஆண்டு அன்னேசி சர்வதேச அனிமேஷன் விழாவில் (AIAF ) முதல் முறையாக இந்தியா பங்கேற்கும் என மத்திய அரசு தெரிவித்துள்ளது.
- இந்த திருவிழாவின் போது சரஸ்வதி யந்திரத்தின் கருப்பொருளில் வடிவமைக்கப்பட்ட இந்திய அரங்கத்தையும் அங்கு திறந்து வைக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த விழாவானது இந்திய படைப்பாற்றலை உலகிற்கு காட்டும் ஒரு தளமாக அமையும் என தகவல் மற்றும் ஒலிபரப்பு செயலாளர் அபூர்வ சந்திரா தெரிவித்துள்ளார்.

## இந்தியாவின் மிகப்பெரிய மின் உற்பத்தி நிறுவனமானது (NTPC) ஃபோர்ப்ஸின் 2023க்கான பட்டியலில் 433 வது இடத்தைப் பிடித்துள்ளது.

- இந்தியாவின் மிகப்பெரிய பொது மின் உற்பத்தி நிறுவனமான, நேஷனல் தெர்மல் பவர் கார்ப்பரேஷன் லிமிடெட் நிறுவனமானது(NTPC), சர்வதேச ஃபோர்ப்ஸ் நிறுவனமானது சமீபத்தில் வெளியிட்டுள்ள 2023ஆம் ஆண்டுக்கான தி குளோபல் 2000 தரவுகளில், முந்தய இடத்தை விட 52 இடங்கள் முன்னேறி 433வது இடத்தைப் பிடித்துள்ளது.
- கடந்த ஆண்டு பட்டியலில் 485வது இடத்தில் இந்நிறுவனமானது இருந்தது என்பது குறிப்பிடத்தக்கதாகும் மற்றும் இந்த உயர்வானது உலகளாவிய சந்தையில் வலுவான சக்தியாக

NTPC உருவானதைக் காட்டுகிறது என்று மத்திய மின்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

## இந்தியாவின் கடல் உணவு ஏற்றுமதியானது இந்த ஆண்டு நாட்டின் வரலாற்றில் இல்லாத உச்சத்தை எட்டியுள்ளது.

- இந்தியாவின் கடல் உணவு ஏற்றுமதியின், அளவு மற்றும் மதிப்பானது 2022-23இல் நாட்டின் வரலாற்றில் இதுவரை எப்போதும் இல்லாத உச்சத்தை எட்டியுள்ளது.
- நிதியாண்டில் ரூ. 63,96,914 கோடி (USD 8.09 பில்லியன்) மதிப்புள்ள 1.7 மில்லியன் டன் அளவிலான கடல் உணவுகளை இந்தியா ஏற்றுமதி செய்துள்ளது என்பது சமீபத்திய புள்ளியில் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த உயர்வானது 2021-22 ஆம் ஆண்டில் அளவு அடிப்படையில் 26.73 சதவீதமும் மதிப்பு அடிப்படையில் 4.31 சதவீதமும் வளர்ச்சியடைந்திருப்பது தெரிய வருகிறது.

## இந்தியக் கடற்படையானது இளைஞர்களுக்காக ஜூல்லி லடாக் என்ற முன்னெடுப்பை தொடங்கியுள்ளது.



- லடாக்கில் பொது சேவையைப் பற்றிய விழிப்புணர்வை அதிகரிக்கவும், அங்குள்ள இளைஞர்கள் மற்றும் பொது மக்களுடனான இணைப்பை மேம்படுத்தவும் இந்திய கடற்படையானது ஜூல்லி லடாக் என்ற முன்னெடுப்பு திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- இந்த முன்னெடுப்பானது லடாக்கில் வடக்கு பிராந்தியத்தில், மத்திய அரசின் திட்டங்களான ஆசாதி கா அம்ரித் மஹோத்சவ் மற்றும் லடாக் பகுதியில் உள்ள பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் அக்னிபாத் திட்டம் உட்பட இந்திய கடற்படையால் வழங்கும் தொழில் வாய்ப்புகள் குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதாகும்.

## இணையத்தில் பாதுகாப்பாக இருங்கள் என்ற முன்னெடுப்பை நடத்த மத்திய அரசு திட்டம்.

- மத்திய மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகமானது(MeitY) இணையதளத்தில் பாதுகாப்பாக இருங்கள் என்ற முன்னெடுப்பை Google உடன் இணைந்து நடத்த திட்டமிட்டுள்ளது.
- பன்மொழி டிஜிட்டல் உள்ளடக்கம், இணையப் பாதுகாப்பு தொடர்பான கல்வி திட்டங்கள் மற்றும் இணையத்தில் தகவல்களை எவ்வாறு வழிநடத்துவது என்பது குறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்துவதை நோக்கமாக கொண்டு இந்த முன்னெடுப்பு தொடங்க உள்ளது.

## காற்றாலை மின்சாரத்தில் ராஜஸ்தான் முதலிடத்தில் உள்ளது.

- இந்திய அரசாங்கத்தின் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம், ஜூன் 15 அன்று புதுதில்லியில் உலகளாவிய காற்று தினத்திற்கான மாநாட்டை நடத்தியது.
- இந்தியாவில் காற்றாலை ஆற்றலை மேம்படுத்தல் மற்றும் விரைவுபடுத்துவதற்கான சாத்தியமான வழிகளைப் பற்றி விவாதிப்பதை நோக்கமாக கொண்டு இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பவன் — உர்ஜா: இந்தியாவின் எதிர்காலத்தை மேம்படுத்துதல் என்பது இந்த மாநாட்டின் கருப்பொருளாகும்.
- மேலும் இந்த மாநாட்டில், 2022-23 நிதியாண்டில் ராஜஸ்தான், குஜராத் மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்கள் அதிக காற்றாலை திறனை அடைந்து முதல் மூன்று இடங்களை பிடித்துள்ளது என மத்திய அரசால் குறிப்பிடப்பட்டுள்ளது.

## அருணாச்சலப் பிரதேசத்தின் பழமை வாய்ந்த விஹூ குஹ் திருவிழாவானது தொடங்கியது



- அருணாச்சலப் பிரசேத்தின் மிகவும் பழமை வாய்ந்த தங்சா பழங்குடியினரினால் மிகவும் பாரம்பரிய திருவிழாவாக கொண்டாடப்படும் விஹூ குஹ் திருவிழாவானது ஜூன் 15 அன்று தொடங்கியுள்ளது.
- மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் இயற்கைக்கும் இடையே உள்ள நல்லிணக்கத்தைப் போற்றும் வகையில், இந்த விழாவானது ஆண்டுதோறும் கொண்டாடப்படுகிறது.

## 2 நாள் அறிவியல்-20 மாநாடானது போபாலில் நடத்த திட்டம்.



- இந்தியாவின் ஜி-20 தலைமையின் கீழ் இரண்டு நாட்களுக்கான அறிவியல்-20 மாநாடானது போபாலில் ஜூன் 16 அன்று தொடங்கியுள்ளது. இந்த மாநாட்டிற்கு இந்திய தேசிய அறிவியல் அமைப்பின் தலைவர் அசுதோஷ் சர்மா தலைமையேற்று நடத்துவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.
- சமூகம் மற்றும் கலாச்சாரத்துடன் அறிவியலை இணைத்தல் என்பது இந்த மாநாட்டிற்கான கருப்பொருளாகும்.
- 4வது தேசிய நீர் விருதுகளை புதுதில்லியில் துணை குடியரசு தலைவர் ஜக்தீப் தன்கர் ஜூன் 17 அன்று வழங்குகிறார்.
- துணை குடியரசு தலைவர் ஜக்தீப் தன்கர் நாட்டின் நான்காவது தேசிய நீர் விருதுகளை புது தில்லியில் ஜூன் 17 அன்று வழங்குகிறார். சமீபத்தில் ஜல் சக்தி அமைச்சகமானது 2022 ஆம் ஆண்டுக்கான நான்காவது தேசிய நீர் விருதுகளுக்காக இணை வெற்றியாளர்கள் உட்பட 11 பிரிவுகளை உள்ளடக்கிய தொகுப்பில் மொத்தம் 41 வெற்றியாளர்களின் பட்டியலை வெளியிட்டுள்ளது.
- இந்த பட்டியலில் சிறந்த மாநிலப் பிரிவில் மத்தியப் பிரதேசமும் சிறந்த மாவட்ட பிரிவில் ஒடிசாவின் கஞ்சம் மாவட்டமும் சிறந்த கிராம பஞ்சாயத்து பிரிவில் தெலுங்கானா மாநிலம் பத்ராத்ரி கொத்தகுடெம் மாவட்டமும் முதல் இடங்களை பெற்றுள்ளது.

## NITI ஆயோக் மற்றும் ஐக்கிய நாடுகள் அமைப்புகளானது இந்திய அரசு – ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிலையான வளர்ச்சிக்காக ஒத்துழைப்பு செயல்பாடு திட்டம் 2023-27 இல் கையெழுத்திட்டுள்ளது.



- NITI ஆயோக் மற்றும் இந்தியாவில் உள்ள ஐக்கிய நாடுகள் சபை பிரிவில் ஜூன் 16 அன்று புது தில்லியில் இந்திய அரசு-ஐக்கிய நாடுகளின் நிலையான வளர்ச்சி ஒத்துழைப்பு செயல்பாடு 2023-2027 திட்டத்தில் கையெழுத்திட்டுள்ளன.
- பாலின சமத்துவம், மனித உரிமைகளை மேம்படுத்துதல், இளைஞர்களுக்கு அதிகாரமளித்தல் மற்றும் நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைதலுக்கான இந்திய அரசாங்கத்திற்கான ஐநா வளர்ச்சி அமைப்பின், கூட்டு இணைப்பின் மூலம் இரு தரப்பின் கூட்டுறவு மேம்படுத்தலை நோக்கமாக கொண்டு இந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## கோரக்பூரில் உள்ள கீதா அச்சகத்திற்கு காந்தி அமைதி பரிசானது அறிவிக்கப்பட்டுள்ளது.




- பிரதமர் தலைமையிலான ஜூரி அமைப்பானது 2021 ஆம் ஆண்டிற்கான காந்தி அமைதி பரிசானது கோரக்பூரில் உள்ள கீதா அச்சகத்தில் வழங்க ஜூன் 18 அன்று அறிவித்துள்ளது.
- அகிம்சை மற்றும் பிற காந்திய முறைகள் மூலம் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் மாற்றத்திற்கான சிறந்த கருத்து பங்களிப்பை மக்களிடையே பரப்பியதாக இந்த விருந்தானது வழங்கப்படுகிறது என அந்த அமைப்பு தெரிவித்துள்ளது. கலாச்சார அமைச்சகத்தால் இந்த விருதானது வழங்கப்படும் மற்றும் இந்த விருதுக்கு ஒரு கோடி ரூபாய் பணமும் பாராட்டுப் சான்றிதலும் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பீகாரில் இரண்டு நாட்கள் ஜி-20 தொழிலாளர் ஈடுபாடு உச்சி மாநாடு நடைபெறவுள்ளது



- பீகார் தலைநகர் பாட்னாவில் ஜூன் 22 மற்றும் 23 ஆகிய தேதிகளில் ஜி-20 தொழிலாளர் ஈடுபாடு உச்சி மாநாடு இரண்டு நாட்கள் நடைபெற உள்ளது. G20 உறுப்பு நாடுகளைச் சேர்ந்த சுமார் 180 பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் பங்கேற்க உள்ளனர்.
- இந்த இரண்டு நாள் மெகா நிகழ்வின் போது தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் ஜி-20 நாடுகளின் அதிகாரிகள் விவசாயம், எரிசக்தி, வேலைவாய்ப்பு, சுற்றுச்சூழல் மற்றும் அது

சார்ந்த துறைகளில் உள்ள தொழிலாளர் மற்றும் திறன் தொடர்பான பிரச்சினைகள் குறித்து கலந்து ஆலோசனை செய்ய உள்ளனர்.

## இந்தியக் கடற்படை வீரர்களின் நடைமுறை பயிற்சியை மேம்படுத்துவதற்காக கொச்சியில் ஒருங்கிணைந்த சிமுலேட்டர் அமைப்பானது இணைக்கப்பட்டுள்ளது.

- இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஸ்ரீ ராஜ்நாத் சிங் ஜூன் 21 அன்று கேரளாவின் கொச்சியில் உள்ள தெற்கு கடற்படை தளமான துருவ்இல் உள்நாட்டிலேயே கட்டமைக்கப்பட்ட ஒருங்கிணைந்த சிமுலேட்டர் வளாகத்தை (ISC) திறந்து வைத்தார்.
- இது இந்தியக் கடற்படையின் பயிற்சியை மேலும் மேம்படுத்தும் எனவும் இதன் மூலம் கடற்படை அதிகாரிகள் 70% முழுவதுமான வழிசெலுத்தல், கடற்படை செயல்பாடுகள் மற்றும் கடற்படை தந்திரங்கள் ஆகியவற்றின் நிகழ்நேர அனுபவத்தை மேற்கொள்வார்கள் எனவும் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## விண்வெளி ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டிற்காக அர்ஜென்டினாவின் நிறுவனத்துடன் இந்தியாவின் HAL ஆனது ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொண்sடுள்ளது.

- இந்திய பாதுகாப்பு மற்றும் விமானத் தயாரிப்பு நிறுவனமான ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் லிமிடெட் (HAL) ஆனது, அர்ஜென்டினாவின் ஃபேப்ரிகா அர்ஜென்டினா டி ஏவியோனஸ் (FAdeA)என்ற நிறுவனத்துடன் விண்வெளி துறையில் சாத்தியமான ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டிற்காக ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளது.
- MRO (பராமரிப்பு, பழுதுபார்ப்பு மற்றும் மாற்றியமைத்தல்) துறையில் இரு நாடுகளின் ஒத்துழைப்பின் சாத்தியக்கூறுகளை ஆராய்வதற்கும், இரு நாடுகளின் விண்வெளி பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் இந்த புரிந்துணர்வு ஒப்பந்தமானது மேற்கொள்ளப்பட்டுள்ளது என HAL தெரிவித்துள்ளது.

## முன்னாள் ராணுவ வீரர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்குவதற்காக தனியார் துறையுடன் DGR ஆனது ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.



- பாதுகாப்பு அமைச்சகத்தின் முன்னாள் படைவீரர் நலத்துறையின் கீழ் உள்ள இயக்குநரக பொது மீள்குடியேற்றம் அமைப்பானது (DGR) ஜூன் 21 அன்று புதுடெல்லியில் Adecco India Private Limited என்ற நிறுவனத்துடன், முன்னாள் ராணுவப் படைவீரர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்குவதற்காக ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை (MoU) மேற்கொண்டுள்ளது.
- IT, E-வணிகம், தொலைத்தொடர்பு, தளவாடங்கள், பாதுகாப்பு, விண்வெளி மற்றும் பாதுகாப்பு, வசதி மேலாண்மை, டிஜிட்டல் மதிப்பீட்டு சேவைகள் ஆகியவற்றில் முன்னாள் படைவீரர்களுக்கு பல்வேறு வேலை வாய்ப்புகளை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டு இந்த ஒப்பந்தமானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## வட இந்தியாவின் முதல் தோல் வங்கி புது டெல்லியில் திறப்பு.

- வட இந்தியாவின் அல்லது வட மாநிலங்களின் முதல் தோல் வங்கியானது புது டெல்லியில் உள்ள சப்தர்ஜங் என்ற மருத்துவமனையில் ஜூன் 20 அன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.
- இந்த மையத்தில், இறந்த நன்கொடையாளர்கள் தங்கள் தோலை தானமாக அளிப்பதை, தீ மற்றும் பிற காரணிகளால் ஏற்படும் காயங்களுக்கு சிகிச்சை அளிக்க உதவும் நோக்கத்தில் இது தொடங்கப்பட்டுள்ளது என சப்தர்ஜங் மருத்துவமனை தெரிவித்துள்ளது. மேலும் இந்த வசதியை மக்களிடையே எளிதாக கொண்டு செல்வதற்காக தனி இணையதளமானது விரைவில் திறக்கப்படும் எனவும் மருத்துவமனை குறிப்பிட்டுள்ளது.

## இந்தியா மற்றும் அமெரிக்க பாதுகாப்பு மேம்பாட்டுக்கான சுற்றுச்சூழல் முன்னெடுப்பான INDUS X தொடங்கப்பட்டுள்ளது.




- இந்தியா மற்றும் அமெரிக்கா இடையிலான பாதுகாப்பை மேம்படுத்துவதற்கான INDUS X என்ற சுற்றுச்சூழல் முன்னெடுப்பு மாநாடானது அமெரிக்காவின் தலைநகரமான வாஷிங்டன் டிசியில் ஜூன் 21 அன்று தொடங்கப்பட்டுள்ளது.

- ஏற்றுமதி கட்டுப்பாடு விதிமுறைகளில் சீர்திருத்தம் மேற்கொள்ளுதல் மற்றும் அரசு கல்வித்துறை, தொழில்துறை சார்ந்த தொழில்முனைவோர்கள் குறிப்பாக ஸ்டார்ட்–அப்கள் உட்பட பல்வேறு களங்களில் ஆழமான ஒத்துழைப்பை மேம்படுத்துவதை மையமாகக் கொண்டு இது தொடங்கப்பட்டுள்ளது என மத்திய அரசு தெரிவித்துள்ளது.
- மத்திய விவசாய அமைச்சர் e-KYC க்காக PM கிசான் என்ற மொபைல் செயலியை அறிமுகப்படுத்தியுள்ளார்.
- விவசாயம் மற்றும் விவசாயிகள் நலத்துறை அமைச்சரான நரேந்திர சிங் தோமர் ஜூன் 22 அன்று முக அங்கீகார அம்சத்தை(facial recognition) உள்ளடக்கிய PM கிசான் என்ற கைபேசி செயலியை அறிமுகப்படுத்தியுள்ளார்.
- இந்த செயலி மூலம் தொலைதூரத்தில் அல்லது மிகச்சிறிய கிராமத்தில் உள்ள விவசாயிகள் OTP அல்லது கைரேகை இல்லாமல் தங்கள் முகங்களை ஸ்கேன் செய்து e-KYC செய்து கொள்ளும் நோக்கத்திற்காக இந்த செயலியானது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என மத்திய அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## அமெரிக்க GE ஏரோஸ்பேஸ் நிறுவனமானது இந்தியாவின் HAL உடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.

- அமெரிக்கவிண்வெளித்துறைசார்ந்தமிகப்பெரிய நிறுவனமான, GE ஏரோஸ்பேஸ் ஆனது இந்திய விமானப்படைக்கு போர் ஜெட் என்ஜின்களை தயாரிப்பதற்காக, நாட்டின் விண்வெளி நிறுவனமான ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் நிறுவனத்துடன்(HAL) ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- இந்திய விமானப்படையின் இலகுரக போர் விமானமான Mk2 ஐ இயக்குவதற்கான என்ஜின்களை GE ஏரோஸ்பேஸ் நிறுவனமானது இந்தியாவுடன் இணைந்து F414 என்ஜின்களை தயாரிப்பதற்காக இந்த ஒப்பந்தமானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## அமெரிக்காவின் நட்சத்திர ஆர்ட்டெமிஸ் திட்டத்தில் இந்தியாவும் இணைந்து செயல்படக் கூடிய ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.

- அமெரிக்காவின் அடுத்த ஆண்டு தனது விண்வெளிப் பயணத்தைத் தொடங்க உள்ள நட்சத்திர ஆர்ட்டெமிஸ் திட்டத்தில் இந்தியாவும் இணைந்து செயல்படக் கூடிய ஒரு ஒப்பந்தத்தில் ஜூன் 2023இல் கையெழுத்திட்டுள்ளன. இந்த ஒப்பந்தமானது தற்போது இந்திய பிரதமர் அமெரிக்காவிற்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டபோது கையெழுத்திடப்பட்டுள்ளது.
- இந்த ஒப்பந்தமானது இருதரப்பு உறவுகளை புதிய உச்சத்திற்கு கொண்டு செல்லும் மற்றும் விண்வெளித் துறைக்கு ஒரு புதிய உத்வேகத்தை வழங்கும் என்றும் மத்திய அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## அங்கீகரிக்கப்பட்ட பொருளாதார வல்லுனர்களுக்காக இந்தியாவும் ஐக்கிய அரபு அமீரகமும் ஒரு ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளன.

- ஜூன் 23, 2023இல் பெல்ஜியத்தின் தலைநகரான பிரஸ்ஸல்ஸில் நடைபெற்ற உலக சுங்க அமைப்பின் (WCO) சுங்க கூட்டுறவு கூட்டத்தின் 141வது/142வது அமர்வுகளில் அங்கீகரிக்கப்பட்ட பொருளாதார வல்லுனர்களுக்காக பரஸ்பர அங்கீகார ஏற்பாட்டிற்காக இந்தியாவும் ஐக்கிய அரபு அமீரகமும் இணைந்து ஒரு ஒப்பந்தத்தில் முறையாக கையெழுத்திட்டுள்ளன.
- அதிக வர்த்தக வசதியை ஏற்படுத்துதல் மற்றும் வணிகத்தை எளிதாக்குவதை நோக்கமாகக் கொண்டும் எளிதில் பொருளாதார வல்லுநர்கள் அணுகளை ஏற்படுத்துவதையும் நோக்கமாக கொண்டு இந்த ஒப்பந்தமானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## உத்யமி பாரத் – MSME தினம் ஜூன் 27இல் விக்யான் பவனில் கொண்டாட திட்டமிடப்பட்டுள்ளது.

- சர்வதேச MSME தினம் வருவதையொட்டி, MSME அமைச்சகமானது ஜூன் 27 2023 அன்று புது தில்லியில் விஞ்ஞான் பவனில் உத்யமி பாரத்-MSME தினத்தைக் கொண்டாட திட்டமிடப்பட்டுள்ளது.
- MSME அமைச்சகமானது சிறு குறு விவசாயிகளின் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான பல்வேறு முன்னெடுப்புகளை CHAMPIONS 2.0 என்ற திட்டத்தில் இந்த தினத்தின் போது மேற்கொள்ளும் என மத்திய அரசு தெரிவித்துள்ளது.

## நாகலாந்து தனது முதலாவது HIV-1 வைரஸ் ஆராய்ச்சி ஆய்வகத்தைப் பெற்றுள்ளது.

- நாகாலாந்து மாநிலமானது தனது முதல் HIV-1 வைரஸ் ஆராய்ச்சி ஆய்வகத்தை நாகலாந்து மருத்துவமனை ஆணையமான கோஹிமாவில் (NHAK) ஜூன் 26 அன்று தொடங்கியுள்ளது.
- இந்த ஆராய்ச்சி ஆய்வகத்தை நாகலாந்து மருத்துவமனை ஆணையர் & சுகாதாரம் மற்றும் குடும்ப நலச் செயலாளர் மற்றும் நாகாலாந்து மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டு ஆணையத்தின் தலைவர் ஒய் கிகேட்டோ செமா அதிகாரப்பூர்வமாகத் தொடங்கி வைத்துள்ளார்.

## QCI மற்றும் ஒடிசா அரசானது ஒடிசா குன்வட்டா சங்கல்ப் திட்டத்தைப் புவனேஸ்வரில் தொடங்கியுள்ளது.

- ஒடிசா மாநில அரசு மற்றும் இந்திய தர ஆணையமானது, தொழில்துறை சங்கங்கள் — EEPC, OASME, ASSOCHAM, FICCI, PHDCCI, CIPET மற்றும் FHRAI உடன் இணைந்து ஒடிசா குன்வட்டா சங்கல்ப் என்ற ஒடிசாவின் தரப்பணி திட்டத்தை ஜூன் 26 அன்று புவனேஸ்வரில் தொடங்கியுள்ளது.
- பல கொள்கை வகுப்பாளர்கள், பயிற்சியாளர்கள் மற்றும் கல்வித்துறை உறுப்பினர்கள், தொழில்துறை தலைவர்கள் ஆகியோரை கொண்டு ஒடிசா மாநிலத்தில் பல்வேறு துறைகளில் தரத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு இந்தத் திட்டமானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## தொழில் மற்றும் கல்வித் துறையில் பாதுகாப்பு மற்றும் R&D-யை ஊக்குவிக்க அனுசந்தன் சிந்தன் சிவிரை DRDO ஏற்பாடு செய்துள்ளது.

- தொழில்துறை மற்றும் கல்வித்துறையில் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பான DRDO, புதுதில்லியில் அனுசந்தான் சிந்தன் ஷிவிரை ஏற்பாடு செய்துள்ளது.
- இந்த சிந்தன் சிவிரில் பாதுகாப்பு தொழில்நுட்பங்களில் உள்நாட்டு கண்டுபிடிப்புகளை ஊக்குவிக்கும் மற்றும் தன்னம்பிக்கையை வளர்க்கும் 75 தொழில்நுட்ப முன்னுரிமை விதிகளின் இந்த பட்டியலானது வெளியிடப்பட்டுள்ளது.

## மீன் நோய் அறிக்கை (Report Fish Disease)



- விவசாயிகள் மற்றும் மீனவர்கள் அடிப்படையிலான நோய் அறிக்கை முறையை வலுப்படுத்துவதற்காகவும் நாட்டில் நீர்வாழ் உயிரி நோய்களைப் பொது மக்கள் புகாரளிப்பதை மேம்படுத்தவும், மத்திய மீன்வளத்துறை அமைச்சர் ஸ்ரீ பர்ஷோத்தம் ரூபாலா, மீன் நோய் அறிக்கை (Report Fish Disease-RFD) என்ற செயலியை ஜூன் 28 அன்று அறிமுகப்படுத்தியுள்ளார். இந்த செயலியானது நீர்வாழ் விலங்கு நோய்களுக்கானத் தேசிய கண்காணிப்புத் திட்டத்தின் (NSPAAD) கீழ் ICAR-மீன் மரபணு வளங்களின் தேசியப் பணியகம் (ICAR-NBFGR) உருவாக்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.
- விவசாயிகள் மற்றும் மீனவர்கள் அடிப்படையிலான அறிக்கையிடலை மேம்படுத்தவும், அவர்களுக்கு ஏதேனும் சந்தேகம் இருப்பின் அவற்றிற்காக அறிவியல் ஆலோசனைகளைப் பெறுவதற்காகவும் நோய்களால் ஏற்படும் இழப்புகளைக் குறைக்கவும் மற்றும் விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கவும் இந்த கைபேசி செயலியானது அனைத்து மக்களுக்கும் உதவுவதை நோக்கமாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது என மத்திய அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## பசுமை ஹைட்ரஜன் சர்வதேச மாநாடு

- இந்திய அரசாங்கமானது பசுமை ஹைட்ரஜன் (ICGH-2023) பற்றிய சர்வதேச மாநாட்டை ஜூலை 5 முதல் ஜூலை 7 வரையில் புது தில்லியில் உள்ள விஞ்ஞான் பவனில் நடத்த திட்டமிட்டுள்ளது.
- உலகளாவிய அறிவியல் மற்றும் தொழில்துறை சார்ந்த சமூகங்களை ஒன்றிணைத்து, சமீபத்திய முன்னேற்றங்கள் மற்றும் அவற்றில் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களை விரிவுப்படுத்துவதை பற்றி விவாதிக்கவும், வளர்ச்சியடைந்து வரும் பசுமையான ஹைட்ரஜன் நிலப்பரப்பு பற்றி ஆராய்ந்து தீர்வுகளை வழங்குவதையும் நோக்கமாகக் கொண்டு இந்த மாநாடானது நடைபெற உள்ளது.

## சந்திரயான் 3 விண்கலமானது ஜூலை 13 ஆம் தேதி விண்ணில் ஏவப்படும் — இஸ்ரோ உறுதி.

- சந்திரயான் 3 விண்கலமானது ஜூலை 13 அன்று பிற்பகல் 2:30 மணியளவில் விண்ணில் செலுத்தப்படும் என்று அதிகாரப்பூர்வமாக இஸ்ரோ அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.
- பல்வேறு சிறப்பம்சங்களை கொண்ட இந்த சந்திராயன் 3 விண்கலமானது நிலாவின் மேற்பரப்பில் பாதுகாப்பான மற்றும் மென்மையான தரையிறக்கம், நிலாவில் அறிவியல் சோதனைகளை நடத்துதல் மற்றும் ரோவர் உலாவுதல் ஆகியவற்றை நோக்கமாக கொண்டு இந்தப் பயணத்தை விண்கலமானது தொடங்க உள்ளது.

## பரிவர்த்தனை மேம்பாட்டுக்காக இந்தியாவும் ஐக்கிய அரபு அமீரகமும் இரண்டு புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளன.



- இந்தியாவும் ஐக்கிய அரபு அமீரகமும் ஜூலை 15 அன்று எல்லை தாண்டிய பரிவர்த்தனைகளுக்கு தங்களின் உள்ளூர் நாணயங்களைப் பயன்படுத்துவதற்கும், தங்கள் பணம் மற்றும் செய்தி அனுப்பும் முறைகளை மேலும் மேம்படுத்துவதற்கும் வர்த்தக ஒத்துழைப்புக்காகவும் இரண்டு புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளன.
- இரு நாடுகளுக்கிடையேயான அனைத்து நடப்புக் கணக்கு பரிவர்த்தனைகள் மற்றும் அனுமதிக்கப்பட்ட மூலதன கணக்கு பரிவர்த்தனைகளை உள்ளடக்கி எல்லை தாண்டிய பரிவர்த்தனைகளுக்கு உள்ளூர் நாணயங்களைப் பயன்படுத்துவதை நோக்கமாக கொண்டு இந்த ஒப்பந்தமானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## புது டெல்லியில் பூமி சம்மான் 2023 ஆனது இந்திய குடியரசுத் தலைவரால் தொடங்கப்பட உள்ளது.

- டிஜிட்டல் இந்திய நில ஆவணங்கள் நவீனமயமாக்கல் திட்டத்தின் முக்கிய கூறுகளை நிறைவு செய்வதில் சிறந்து விளங்கிய, ஒன்பது மாநில செயலாளர்கள் மற்றும் அவர்களுடன் 68 மாவட்ட ஆட்சியர்களுடனான பூமி சம்மான் 2023 ஆனது ஜூலை 18 அன்று இந்திய குடியரசு தலைவர் திரௌபதி முர்மு அவர்களால் புது தில்லியில் தொடங்கப்பட உள்ளது.
- இந்த பூமி சம்மான் திட்டமானது நம்பிக்கை மற்றும் கூட்டாண்மை அடிப்படையிலான மத்திய-மாநில கூட்டுறவு கூட்டாட்சிக்கு சிறந்த எடுத்துக்காட்டு என்றும் இந்த திட்டத்தின் மூலம் மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்துவதை நோக்கமாக கொண்டு இந்த திட்டமானது மேற்கொள்ளப்பட்டுள்ளது என குடியரசு தலைவர் தெரிவித்துள்ளார்.

## அனைத்து NSO தரவுகளையும் மறு சீராய்வு செய்ய மத்திய அரசாங்கமானது புதிய குழுவை உருவாக்கியுள்ளது.



- 2019 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் அமைக்கப்பட்ட பொருளாதார புள்ளியியல் (SCES) நிலைக் குழுவை மறுசீரமைத்து, வேலை வாய்ப்புகள் மற்றும் நுகர்வு செலவுகள் குறித்த ஆய்வுகளின் உத்தியோகபூர்வ தரவுகளை மதிப்பாய்வு மற்றும் மறுசீராய்வை மேற்கொள்வதற்காக மத்திய அரசாங்கமானது ஒரு ஆராய்ச்சி குழுவை ஜூலை 2023 இல் அமைத்துள்ளது.
- சமீபத்தில் வெளியிடப்பட்ட உத்தரவில், புள்ளியியல் அமைச்சகமானது, தேசிய புள்ளியியல் அலுவலகத்தின் (NSO) கீழ் நடத்தப்பட்ட ஆய்வுகளின் பொருளாதாரக் குறிகாட்டிகளை மட்டுமே ஆய்வு செய்யும் பணியில் ஈடுபட்டிருந்த SCES-க்கு மாற்றாக இப்போது புள்ளியியல் நிலைக்குழு (SCoS) மூலம் ஆய்வு நடைபெறும் என்று குறிப்பிட்டுள்ளது.

# சர்வதேச செய்திகள்

## சிறுகோள் பட்டையை(Asteroid belt) ஆராய்வதற்காக UAE ஆனது தனது 13 ஆண்டு விண்வெளி பயண திட்டத்தை அறிவித்துள்ளது.

- ஐக்கிய அரபு அமீரகமானது (UAE) செவ்வாய் மற்றும் வியாழன் கோள்களுக்கிடையில் அமைந்துள்ள முக்கிய சிறுகோள் பாதையை ஆராய்வதற்கான ஒரு முன்னோடி விண்வெளி பயணத் திட்டத்தை தொடங்கியுள்ளது.
- MBR EXPLORER என பெயரிடப்பட்ட இந்த UAEன் லட்சிய திட்டமானது மார்ச் 2028 இல் தொடங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. நமது சூரியக் குடும்பத்தின் உருவாக்கத்தின் மர்மங்களை கண்டுப்பிடிக்க மற்றும் சிறுகோள் பாதையில் மறைந்திருக்கக்கூடிய மர்மம் பற்றிய தடயங்களைக் கண்டறிவதே இந்த திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

## உலக வானிலை அமைப்பின்(WMO) தலைவர் பதவியை UAE வென்றுள்ளது.

- ஐக்கிய அரபு அமீரகத்தின் தேசிய வானிலை ஆய்வு மையத்தின் (NCM) இயக்குநர் ஜெனரல் டாக்டர். அப்துல்லா அல் மண்டூஸ், 2023 முதல் 2027 வரையிலான நான்கு ஆண்டுகளுக்கு WMO இன் புதிய தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- "ஆசியாவைச் சேர்ந்த ஒரு GCC வானிலை ஆய்வாளர்" மற்றும் அரபு வானிலை ஆய்வாளர் ஒருவர் WMO இன் தலைவராக நியமிக்கப்பட்டது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## ஐக்கிய அரபு எமிரேட்ஸ் 2025 இல் "இயற்கை பாதுகாப்புக்கான சர்வதேச ஒன்றியத்தின் (IUCN) உலக பாதுகாப்பு கூட்டத்தை நடத்த திட்டமிட்டுள்ளது.

- 2025ஆம் ஆண்டில் "இயற்கை பாதுகாப்புக்கான சர்வதேச ஒன்றியத்தின் உலக பாதுகாப்பு கூட்டத்தை" நடத்துவதற்கான முன்னெடுப்பில் ஐக்கிய அரபு அமீரகம் வெற்றி பெற்றுள்ளது.
- இந்த நடவடிக்கையின் மூலம் "சுற்றுச்சூழலுக்கான பாதுகாப்பு, காலநிலை மாற்ற நடவடிக்கை மற்றும் நிலைத்தன்மை" ஆகியவற்றில் ஐக்கிய அரபு அமீரகமானது அதன் தலைமையின் உறுதிப்பாட்டை மேலும் உலகிற்கு உறுதிப்படுத்தியுள்ளது.

## 95 மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான கடலுக்கடியில் கேபிள் திட்டத்தில் ஜப்பான் இணைந்தது.



- இந்தோ-பசிபிக் பிராந்தியத்தின் இணைப்புகளை மேம்படுத்துவதற்காகவும் கிழக்கு மைக்ரோனேசியா தீவு நாடுகளை இணைப்பதற்காகவும் 95 மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான "கடலுக்கடியில் கேபிள் இணைப்பு திட்டத்தில் கையெழுத்திட இருந்த நாடுகளில் அமெரிக்கா மற்றும் ஆஸ்திரேலியாவுடன் தற்போது ஜப்பானும் இணைந்ததாக ஜூன் 06 அன்று ஜப்பான் அரசாங்கம் அறிவித்துள்ளது.
- Quad அமைப்பில் அமெரிக்கா, ஜப்பான், ஆஸ்திரேலியா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளின் பாதுகாப்புக் கூட்டணி கருத்திற்கொண்டும், சீனாவின் அச்சுறுத்ததல்களிலிருந்து தப்பிக்கவும் இந்த முன்னெடுப்பு அமையும் என்றும் இதில் இந்தியாவும் இணைய வாய்ப்பு உள்ளதாக பாதுகாப்பு வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

## IIT டெல்லியில் உள்ள ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்பு பூங்காவில் பாதுகாப்பு சிறப்பு வாய்ந்த "iDEX" புதுமை ஸ்டார்ட்-அப்களுக்கான கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

- IIT டெல்லியில் உள்ள ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்பு பூங்காவில் பாதுகாப்பு சிறப்பு வாய்ந்த "iDEX" புதுமை ஸ்டார்ட்-அப்களுக்கான கண்காட்சியை iDEX இன் பார்ட்னர் இன்குபேட்டர் மற்றும் FITT-IIT டெல்லி இணைந்து நடத்துகின்றன.
- இந்த நிகழ்வில் பாதுகாப்பு சிறப்புக்கான கண்டுபிடிப்புகளின்(iDEX) சுருக்கமான விளக்கக்காட்சி மற்றும் ஆக்மென்ட்டட் ரியாலிட்டி மற்றும் மெய்நிகர் உண்மை, ஆற்றல் அமைப்புகள், சிறப்பு வாய்ந்த ட்ரோன்கள் மற்றும் ட்ரோன்களை அளிப்பதற்கான அமைப்பு, விண்வெளி முன்மொழிவு அமைப்புகள் மற்றும் பிற தொடர்புடைய தொழில்நுட்பங்களில் இந்திய

ஸ்டார்ட்-அப்களின் முன்னேற்றத்தை உலகறிய செய்ய இந்த கண்காட்சி பயனுள்ளதாக அமையும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வில் ஜெர்மன் பாதுகாப்பு அமைச்சர் போரிஸ் பிஸ்டோரியஸ் கலந்து கொண்டது சிறப்பு வாய்ந்ததாகும்

### 1.6 பில்லியன் ஆண்டுகள் பழமையான புதைபடிவங்கள் கண்டுபிடிப்பு.



- சுமார் 1.6 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு பூமியின் பண்டைய நீர்வழிகளில் வாழ்ந்த உயிரினங்களின் புதைபடிவங்களானது ஆஸ்திரேலியா நாட்டின் வடக்குப் பகுதியில் உள்ள கடலின் பாறைகளில் இருந்து கண்டறியப்பட்டுள்ளது.
- இந்த கண்டுப்பிடிப்பானது 1.6 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த உயிரினங்களின் மூதாதையர்களின் யூகாரியோடிக் செயல்முறையை கண்டறிய முடியும் மற்றும் இந்த கண்டுபிடிப்பானது நமது ஆரம்பகால மூதாதையர்களைப் பற்றிய விஞ்ஞானிகளின் புரிதலை மாற்றக்கூடியதாக அமையலாம் என அறிவியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

### அமெரிக்க துணை ஜனாதிபதி கரீபியன் பகுதிகளுக்கு 100 மில்லியன் அமெரிக்க டாலர்களுக்கான உதவிகளை வழங்கவுள்ளதாக அறிவித்துள்ளார்.



- அமெரிக்க துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸ் கரீபியனில் $100 மில்லியனுக்கும் அதிகமான முதலீடு செய்யும் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளார்.
- இதன் மூலம் பரவலான ஆயுதக் கடத்தலைத் தடுக்கவும், ஹைட்டியின் மனிதாபிமான நெருக்கடியைத் தணிக்கவும் மற்றும் காலநிலை மாற்ற முயற்சிகளுக்கு ஆதரவளிக்கவும் உதவும் என அந்த அறிவிப்பில் அமெரிக்க துணை குடியரசு தலைவர் தெரிவித்துள்ளார்.

.

### உலக வங்கியானது தெற்காசியாவில் தனது முதல் பிரத்யேக சாலை பாதுகாப்பு திட்டத்தை தொடங்கியுள்ளது.

- உலக வங்கியானது தெற்காசியாவில் தனது முதல் பிரத்யேக சாலை பாதுகாப்பு திட்டத்தை வங்கதேச அரசாங்கத்துடன், டாக்காவில் ஜூன் 14 அன்று கையெழுத்திட்ட 358 மில்லியன் அமெரிக்க டாலர் நிதியுதவி ஒப்பந்தத்துடன் தொடங்கியுள்ளது என அறிவித்துள்ளது.
- சாலைப் பாதுகாப்பை மேம்படுத்தவும், சாலை விபத்துகளால் ஏற்படும் உயிரிழப்புகள் மற்றும் காயங்களைக் குறைக்கவும், அதிக ஆபத்துள்ள நெடுஞ்சாலைகள் மற்றும் மாவட்டச் சாலைகளை சரி செய்வதையும் நோக்கமாக கொண்டு இந்த திட்டமானது செயல்பட உள்ளதாக உலக வங்கி அறிவித்துள்ளது.

### நுஸ்ரத் சவுத்ரி – அமெரிக்காவின் முதல் முஸ்லிம் பெண் கூட்டாட்சி நீதிபதி என்ற அந்தஸ்தை பெற்றுள்ளார்.



- செனட்சபை மூலம் சிவில் உரிமைகள் வழக்கறிஞரான நுஸ்ரத் சவுத்ரி அமெரிக்க வரலாற்றில் முதல் முஸ்லிம் பெண் கூட்டாட்சி நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.
- மேலும் அவர் வங்கதேச – அமெரிக்க கூட்டாட்சி நீதிபதியாகவும் நியூயார்க் மாகாணத்தின் கிழக்கு மாவட்டத்திற்கான கூட்டாட்சி நீதிபதியாகவும் பணியாற்றுவார் என அமெரிக்க செனட்சபை தெரிவித்துள்ளது

### பின்லாந்து பிரதமராக பெட்டேரி ஓர்போ தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

- ஜூன் 20 அன்று, ஃபின்லாந்தின் நாடாளுமன்றமானது தீவிர வலதுசாரி ஃபின்ஸ் கட்சி உட்பட நான்கு–கட்சி கூட்டணியின் தலைமையில், பழைமைவாத கட்சியின் உறுப்பினரான பெட்டேரி ஓர்போவை பிரதமராகத் தேர்ந்தெடுத்தது.
- பின்லாந்து அதிபர் சவுலி நினிஸ்டோ ஓர்போவை பிரதமராக ஏற்றுக்கொண்டார்.

## எஸ்தோனியா – ஒரே பாலின திருமணத்தை அனுமதித்த முதல் மத்திய ஐரோப்பிய மற்றும் பால்டிக் நாடு.

- ஓரினச்சேர்க்கை திருமணத்தை சட்டப்பூர்வமாக்குவதற்கான சட்டத்திற்கு எஸ்டோனியாவின் பாராளுமன்றம் ஜூன் 21 அன்று ஒப்புதல் அளித்துள்ளது. இதன் மூலம் ஓரினச்சேர்க்கை திருமணத்தை அங்கீகரித்த முதல் மத்திய ஐரோப்பிய நாடாக இது அமைகிறது.
- மேற்கு ஐரோப்பாவின் பெரும்பகுதியில் ஓரினச்சேர்க்கை திருமணம் சட்டப்பூர்வமாக உள்ளது மற்றும் இதுவரை மத்திய ஐரோப்பிய நாடுகளில் இதற்கு அங்கீகாரம் அளிக்காத நிலையில் இந்த சட்டமானது உலக பார்வையை எஸ்டோனியா பக்கம் திருப்பியுள்ளது.

## ஐ.நா வானது கடல் வாழ் உயிரினங்களைப் பாதுகாப்பதற்கான முதல் ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டுள்ளது.

- ஐ.நா வானது கடல் மற்றும் பெருங்கடலில் உள்ள கடல்வாழ் உயிரினங்களைப் பாதுகாப்பதற்கான முதல் உடன்படிக்கையை ஜூன் 19 அன்று ஏற்றுக் கொண்டுள்ளது.
- ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டெரஸ், வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த உடன்படிக்கையை கடல் மற்றும் பெருங்கடலிற்கு பாதுகாப்பை வழங்குவதாக இது உறுதி செய்யும் என பாராட்டியுள்ளார். 193 உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளும் ஜூன் 19 அன்று மகிழ்ச்சியுடன் இந்த உடன்படிக்கைக்கு ஒப்புதல் அளித்தனர் என்பது குறிப்பிதக்கதாகும்.

## உலகளாவிய புதிய நிதி ஒப்பந்தத்திற்கான உச்சி மாநாடானது பிரான்சின் தலைநகரமான பாரிஸில் தொடங்கியுள்ளது.

- பல்வேறு நாடுகள் மற்றும் துறைகளைச் சேர்ந்த 300க்கும் மேற்பட்ட நிதி வல்லுநர்கள் பங்கேற்ற இந்த புதிய உலகளாவிய நிதி ஒப்பந்தத்திற்கான உச்சி மாநாடானது ஜூன் 22 அன்று பிரான்சின் பாரிஸில் தொடங்கியுள்ளது.
- சர்வதேச நிதிக் கட்டமைப்பை மாற்றியமைத்தல், உத்திகளுக்கான கூட்டாண்மைகளை உருவாக்குதல், நம்பிக்கையை மீட்டெடுத்தல் மற்றும் தனியார் துறைக்கு சாதகமான சூழலை உருவாக்குதல் உள்ளிட்ட பல சுற்று அட்டவணைகள் மூலம் காலநிலை மாற்றம் தொடர்பான நிதி சிக்கல்களை தீர்ப்பதை நோக்கமாக கொண்டு இந்த மாநாடானது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## போர்க்கப்பல்களை இந்தியாவிலேயே தயாரிப்பதற்காக இந்தியாவும் பிரான்சும் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளது.

- இந்தியா மற்றும் பிரான்சின் பாதுகாப்பு பொதுத்துறை நிறுவனங்களானது (DPSUs), உலகத்தின் பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்காக முறையே கொல்கத்தா மற்றும் மும்பையில் நீர்மூழ்கிக் கப்பல்கள் மற்றும் போர் கப்பல்கள் மற்றும் அவற்றின் பாகங்களை இரு நாடுகளும் இணைந்து தயாரிப்பதற்காக புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளன.
- இந்த புரிந்துணர்வு ஒப்பந்தங்களானது பிரதமர் மோடியின் "மேக் இன் இந்தியா" திட்டத்தை மேலும் வலுப்படுத்துவதாக அமைகிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மும்பையை தளமாகக் கொண்ட மொசகண்டாக் கப்பல் காட்டும் நிறுவனத்துடன் பிரெஞ்சு கடற்படைக் குழுவுடன் இணைந்து "ஸ்கார்பீன் வகை நீர்மூழ்கிக் கப்பல்களை" தயாரிக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.



## இலகுரக போர் விமான எஞ்சினை உருவாக்குவதற்காக, DRDO ஆனது பாரிஸில் ஒரு அலுவலகத்தை அமைக்க இந்தியா திட்டமிட்டுள்ளது

- இந்திய பிரதமர் மோடி மற்றும் பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரான் ஜூலை 14 அன்று, ஏற்பட்ட சந்திப்புக்குப் பிறகு இந்தியாவும் பிரான்ஸூம் இணைந்து இலகுரக போர் விமான இயந்திரத்தை உருவாக்குவதற்காக இந்திய DRDO அமைப்பானது பிரான்ஸின் தலைநகரமான பாரிஸில் ஒரு பிராந்திய அலுவலகத்தை அமைக்க திட்டமிட்டுள்ளது.
- பிரான்ஸ் பாதுகாப்பு துறை சார்ந்த நிறுவனமான Safran மற்றும் இந்தியாவின் DRDO-க்கும் இடையே இந்த முன்னெடுப்பு திட்டத்திற்கான வரைபடம் தயாரிக்கப்படும் என இந்திய பிரதமர் தெரிவித்துள்ளார்.

## நைஜீரியாவில் உணவுப் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த நெருக்கடி கால அவசர நிலையானது அறிவிக்கப்பட்டுள்ளது.

- நைஜீரியாவில் ஏற்பட்டுள்ள பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்காக, அந்நாட்டு அதிபர் போலா டினுபு ஜூலை 14 2023 அன்று நெருக்கடி கால அவசர நிலையை அறிவித்துள்ளார்.
- விவசாயத்தை மேம்படுத்துதல், உணவுச் செலவைக் குறைத்தல் மற்றும் வேலை வாய்ப்புகளை உருவாக்குதல் ஆகிய முக்கிய இலக்குகளை கொண்ட தீர்மானத்தை ஜனாதிபதி டினுபு அந்நாட்டு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றியுள்ளார். இந்த ஆண்டு(2023 இல்) கிட்டத்தட்ட 25 மில்லியன் நைஜீரியர்கள் உணவுப் பாதுகாப்பின்மையால் அதிக ஆபத்தில் உள்ளனர் என்று ஐநாவின் ஜனவரி மாத அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஐஐடி-டெல்லி ஆனது UAE இல் தனது புதிய வளாகத்தை அமைக்க திட்டமிட்டுள்ளது.

- இந்தியத் தொழில்நுட்ப நிறுவனம், டெல்லி கிளையானது தனது முதல் உலகளாவிய பிராந்திய வளாகத்தை UAE இன் அபுதாபியில் அமைப்பதற்காக ஜூலை 15 அன்று ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தைப் பிரதமர் மோடி முன்னிலையில் இரு நாடுகளும் மேற்கொண்டுள்ளது.
- இந்த ஒப்பந்தம் மூலம் இந்திய தொழில் நுட்ப திறனானது உலகளவில் முன்னோக்கிய பார்வைக்கு கொண்டு செல்லும் என இந்திய பிரதமர் குறிப்பிட்டுள்ளார். மேலும் முதுகலை பட்டப் படிப்புகளானது(PG) அடுத்த ஆண்டு ஜனவரியில் இருந்தும், இளங்கலை(UG) பட்டப்படிப்புகள் செப்டம்பர் 2024 முதல் தொடங்கும் என குறிப்பிட்டுள்ளது.

## UAE இன் உடனடி கட்டணத் தளத்துடன் இந்தியாவின் ஒருங்கிணைந்த கட்டண இடைமுகத்தை இணைப்பதற்காக இந்தியாவும் ஐக்கிய அரபு அமீரகமும் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.

- எல்லை தாண்டிய பரிவர்த்தனைகளுக்கு உள்ளூர்(இந்திய ரூபாய் மற்றும் UAE திர்ஹம்) நாணயங்களைப் பயன்படுத்துதல் மற்றும் அவற்றின் பணம் செலுத்துதல் அமைப்புகளை ஒன்றோடொன்று இணைக்கும் ஒத்துழைப்புகாக இந்தியாவும் ஐக்கிய அரபு அமீரகமும் சில புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளன.
- இந்த ஒப்பந்தமானது இரு நாடுகளுக்கு இடையேயான வர்த்தகத்திற்கு பெரும் ஊக்கத்தை அளிப்பது மட்டுமில்லாமல் மேம்பட்ட பொருளாதார ஒத்துழைப்புக்கு வழி வகுக்கும் என்றும் இது சர்வதேச நிதி தொடர்புகளை எளிதாக்கும் என்றும் மத்திய ரிசர்வ் வாங்கி ஆளுநர் தாஸ் குறிப்பிட்டுள்ளார்.

# பொருளாதாரச் செய்திகள்

## 2023ல் மலேசியப் பொருளாதாரமானது 4.5% வளர்ச்சி அடையும் – IMF ஆய்வறிக்கை.

- 2023ஆம் ஆண்டில் மலேசியப் பொருளாதாரமானது 4.5% வளர்ச்சி அடையும் என சர்வதேச நாணய நிதியமானது(IMF) தனது சமீபத்திய ஆய்வறிக்கையில் அறிவித்துள்ளது.
- "ஏப்ரல் 2022 இல் மலேசியப் பொருளாதாரம் மீண்டும் திறக்கப்பட்டதைத் தொடர்ந்து, அதன் வளர்ச்சி 2022 இல் 8.7% ஐ எட்டியது குறிப்பிடத்தக்கது, இது உள்நாட்டு தேவை மற்றும் வலுவான ஏற்றுமதி கட்டமைப்பின் செயல்திறன் ஆகியவற்றால் உந்தப்பட்டது. மேலும் "2023 ஆம் ஆண்டில் மலேசியாவின் பணவீக்கமானது 3.3% ஆக உயரும்" என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## நிதிச் சேர்க்கை டாஷ்போர்டு-ANTARDRIHSTI அறிமுகம்.

- ஜூன் 5 ஆம் தேதியன்று, ரிசர்வ் வங்கியின் ஆளுநர் சக்திகாந்த தாஸ், "நிதிச் சேர்க்கை டாஷ்போர்டு – ANTARDRIHSTI" ஐ அறிமுகப்படுத்தியுள்ளார்.
- இந்த அமைப்பானது நிதிச்சுமை தொடர்புடைய அளவுருக்களைக் கைப்பற்றுவதன் மூலம் நிதிச் சேர்க்கையின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கும் அதை கண்காணிப்பதற்கும் தேவையான நுண்ணறிவை வழங்கும் என குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த டாஷ்போர்டானது தற்போது ரிசர்வ் வங்கியின் உள் பயன்பாட்டு அமைப்பை கருத்தில் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளதால், பல பங்குதாரர் அணுகுமுறையின் மூலம் அதிக நிதி உள்ளடக்கத்தை மேலும் எளிதாக்கும் என இது எதிர்பார்க்கப்படுகிறது.

## நிதியாண்டு 2024க்கான இந்தியாவின் GDP வளர்ச்சி 6.3% ஆக குறையும் என உலக வங்கி அறிவிப்பு.

- 2025-2026ஆம் நிதியாண்டில், கடன் வாங்கும் செலவுகள் அதிகரித்தல் மற்றும் அதிக பணவீக்கம் ஆகியவற்றின் காரணமாக, 2023-24 நிதியாண்டில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 6.3% ஆகக் குறையும் என்று உலக வங்கி தனது சமீபத்திய ஆய்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.
- இது முந்தைய 6.6% மதிப்பீட்டிலிருந்து 0.3 சதவீதப் புள்ளி கீழ்நோக்கிய திருத்தம் என்பது குறிப்பிடத்தக்கதாகும். ஆயினும்கூட, வேகமாக வளரும் பொருளாதாரங்களில் இந்தியா தொடர்ந்து நிலைத்து இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாக அந்த ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ரூபே முன்கூட்டியே பணம் செலுத்தக்கூடிய FOREX அட்டைகளை வழங்க வங்கிகளுக்கு ரிசர்வ் வங்கி அனுமதி அளித்துள்ளது.

- வெளிநாடுகளில் பயணம் செய்யும் இந்தியர்களுக்கு அதிக கட்டண விருப்ப சலுகைகளை வழங்கும் முயற்சியில், இந்திய ரிசர்வ் வங்கியானது(RBI) அனைத்து இந்திய வங்கிகளுக்கும் ரூபே முன்கூட்டியே பணம் செலுத்தக்கூடிய FOREX அட்டைகளை(RuPay Prepaid FOREX Cards) வழங்க முடிவு செய்துள்ளது.
- இந்த கார்டுகளை ஏடிஎம்கள், விற்பனை செய்யும் இடம்(PoS) இயந்திரங்கள் மற்றும் வெளிநாடுகளில் உள்ள இணையதள வணிகர்கள் ஆகியவற்றில் பயன்படுத்தலாம் என RBI அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- இந்தியாவின் தொழில்துறை உற்பத்தியானது 4.2% ஆக இந்த ஆண்டில் உயர்வு.
- இந்த ஆண்டின் ஏப்ரல் மாதத்தில் நமது நாட்டின் தொழில்துறை உற்பத்தியானது வளர்ச்சியடைந்து 4.2 சதவீதமாக உயர்ந்துள்ளது என்று மத்திய புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகமானது ஜூன் 12 அன்று வெளியிடப்பட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.
- இந்த உற்பத்தி வளர்ச்சியானது தொடர்ந்து வளர்ந்தால் நாட்டின் இந்த ஆண்டிற்குள் GDPயானது ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டதை விட உயரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இதற்கிடையே சுரங்க உற்பத்தியும் 5.1 சதவிகிதம் உயர்ந்துள்ளதால், இந்தியாவின் தொழில்துறை உற்பத்தியின் குறியீடு (IIP) விரிவடைந்துள்ளது என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## இந்தியப் பொருளாதார வளர்ச்சியானது நடப்பு 2023-24 நிதியாண்டில் 6.3 சதவீதமாக வளர்ச்சியடையும் என ஃபிட்ச் ரேட்டிங்ஸ் தனது ஆய்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

- புகழ்பெற்ற சர்வதேச கடன் மதிப்பீட்டு நிறுவனமான ஃபிட்ச் ரேட்டிங்ஸ், ஜூன் 22 அன்று இந்திய GDP பொருளாதார வளர்ச்சியானது

நடப்பு 2023-24 நிதியாண்டில் முன்னறிவித்த 6 சதவீதத்தில் இருந்து உயர்ந்து 6.3 சதவீதமாக வளர்ச்சியடையும் என தனது ஆய்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

- இந்த வளர்ச்சி மாற்றமானது இந்த ஆண்டின் முதல் காலாண்டில் வலுவான பொருளாதார வெளிப்பாட்டின் காரணமாக மாறியுள்ளது என ஃபிட்ச் ரேட்டிங் நிறுவனம் அந்த அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளது.

## IFFCO ஆனது நானோ திரவ யூரியாவை அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்வதற்கான ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.



- இந்திய விவசாயிகள் உர கூட்டுறவு அமைப்பானது (IFFCO) ஜூன் 22 அன்று கலிபோர்னியாவைச் சேர்ந்த கபூர் எண்டர்பிரைசஸ் இன்க் என்ற நிறுவனத்துடன் நானோ திரவ யூரியாவை அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்வதற்கான ஒரு ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளது.
- இந்தியாவின் IFFCO இதுவரை 25 க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு 5 லட்சத்திற்கும் அதிகமான நானோ திரவ யூரியா பாட்டில்களை ஏற்றுமதி செய்து சாதனை படைத்துள்ளது.

## பேங்க் ஆஃப் பரோடா ஆனது "மகிளா சம்மான் சேமிப்புச் சான்றிதழ் (MSSC) திட்டத்தை" அறிமுகப்படுத்தியுள்ளது.

- இந்தியாவின் இரண்டாவது மிகப்பெரிய பொதுத்துறை வங்கியான பேங்க் ஆஃப் பரோடா, "பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கான குறுசிறு சேமிப்புத் திட்டமான மகிளா சம்மான் சேமிப்புச் சான்றிதழ்(MSSC) திட்டத்தை" ஜூலை 2023 இல் அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்த திட்டமானது பெண்கள் மற்றும் குழந்தைகளின் எதிர்காலத்தைக் கருதி அவர்களுக்காக மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்களால் 2023-24 நிதியாண்டில் (மத்திய பட்ஜெட்டில்) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.
- கனரா வங்கி, பாங்க் ஆஃப் இந்தியா மற்றும் தபால் அலுவலகத்திற்குப் பிறகு இந்த வசதியை அறிமுகப்படுத்தும் மூன்றாவது நிதி நிறுவனம் இது என்பது முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

## திட்டங்கள்

### ஸ்ரீ சர்பானந்தா சோனோவால் "சாகர் சம்ரித்தி" என்ற திட்டத்தைத் தொடங்கி வைத்துள்ளார்.

- துறைமுக அமைச்சர் (MoPSW) மற்றும் ஆயுஷ் அமைச்சரான ஸ்ரீ சர்பானந்தா சோனோவால், அமைச்சகத்தின் திறனை மேம்படுத்துவதற்காக ஜூன் 09 அன்று இணையதள அகழ்வாராய்ச்சி கண்காணிப்பு அமைப்பை "சாகர் சம்ரிதி" என்று பெயரிடப்பட்ட திட்டத்தின் கீழ் தொடங்கி வைத்துள்ளார்.
- இந்த இணையதள அகழ்வாராய்ச்சி கண்காணிப்பு அமைப்பானது MoPSW அமைச்சகத்தின் 'கழிவு முதல் செல்வம்' பிரச்சாரத்தை விரைவுபடுத்துவதை நோக்கமாகக் கொண்டு செயல்படும் என அமைச்சகம் தெரிவித்துள்ளது.

### பெண் தொழில்முனைவோரை மேம்படுத்துவதற்கான திட்டத்தில் UNDP மற்றும் DAY-NULM ஆனது இணைந்து செயல்பட உள்ளது.

- பெண்களை தொழில்முனைவோர் துறையில் அதிகாரம் அளித்தல் மற்றும் அவர்களின் மேம்பாட்டிற்காக தீன்தயாள் அந்த்யோதயா யோஜனா – தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்துடன்(DAY-NULM) ஐக்கிய நாடுகளின் வளர்ச்சி அமைப்பானது(UNDP) ஒரு கூட்டு முயற்சியில் இணைந்துள்ளது.
- குறிப்பாக டிஜிட்டல் பொருளாதாரம், மின்சார இயக்கம், கழிவு மேலாண்மை, உணவு பேக்கேஜிங், பொருளாதாரப் பராமரிப்பு மற்றும் பல துறைகளில் தங்கள் சொந்த நிறுவனங்களைத் தொடங்குதல், விரிவாக்குதல் மற்றும் மேம்படுத்துதல் ஆகியவற்றிற்கு இது ஒரு கூட்டாண்மை ஆதரவை வழங்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மத்திய அமைச்சர் அனுராக் தாக்கூர் "பாரத் இன் பாரிஸ்" என்ற முன்னெடுப்பைத் தொடங்கி வைத்துள்ளார்.

- மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் அனுராக் சிங் தாக்கூர் ஜூன் 23 அன்று புதுதில்லியில் உள்ள ஜவஹர்லால் நேரு மைதானத்தில் பாரத் இன் பாரிஸ் என்று முன்னெடுப்பு பிரச்சாரத்தைக் கொடியசைத்து தொடங்கி வைத்துள்ளார்.
- பாரீஸ் ஒலிம்பிக் போட்டிகளை ஊக்குவிப்பதற்காக இந்தியா முழுவதும் பல்வேறு விளையாட்டுகளை ஊக்குவிக்கும் வகையில், இந்திய ஒலிம்பிக் சங்கமானது (IOA) இந்த முன்னெடுப்பைத் தொடங்கியுள்ளது. 2024 ஆம் ஆண்டுக்கான ஒலிம்பிக் போட்டியானது ஜூலை 26 முதல் ஆகஸ்ட் 11 ஆம் தேதி வரை பிரான்சில் தலைநகரமான பாரிஸில் நடைபெறவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

### சாகர் சமாஜிக் சஹயாக்

- துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் அமைச்சகத்தின் கீழ் உள்ள கார்ப்பரேட் சமூக ஆணையத்தின் பொறுப்புகளுக்கான (CSR) புதிய வழிகாட்டுதலை 'சாகர் சமாஜிக் சஹாயோக்' என்ற பெயரில் கப்பல் மற்றும் நீர்வழிகள் மற்றும் ஆயுஷ் துறை அமைச்சர் ஸ்ரீ சர்பானந்த சோனோவால் தொடங்கி வைத்துள்ளார்.
- இந்த புதிய வழிகாட்டுதல்களானது CSR நடவடிக்கைகளை நேரடியாக மேற்கொள்ள துறைமுகங்கள் மற்றும் அது சம்பத்தப்பட்ட துறை நிறுவனங்களுக்கு அதிகாரம் அளிக்கிறது. மேலும் இந்த புதிய CSR வழிகாட்டுதல்களானது, உள்ளூர் சமூகங்களின் பிரச்சினைகளை மிகவும் கூட்டாண்மையுடனும் விரைவான முறையிலும் தீர்க்க வழிவகை செய்கிறது.

### சாம்பியன்ஸ் 2.0

- MSME அமைச்சகத்தின் பல்வேறு முன்முயற்சிகளை ஊக்குவிப்பதற்காகவும் கிளஸ்டர் திட்டங்கள் மற்றும் தொழில்நுட்ப மையங்களின் ஜியோ-தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதற்காகவும் சாம்பியன்ஸ் 2.0 என்ற வலைத்தளம் மற்றும் கைபேசி செயலியை மத்திய MSME அமைச்சர் ஸ்ரீ நாராயண் ரானே அறிமுகப்படுத்தியுள்ளார்.
- இந்த முன்னெடுப்பானது தொழில் முனைவோர்கள் மற்றும் சிறு குறு நடுத்தர நிறுவங்களின் வளர்ச்சியை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்வதை நோக்கமாக கொண்டு தொடங்கப்பட்டுள்ளது என மத்திய அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## அலையாத்தி காடுகள் மற்றும் சதுப்பு நிலங்களைப் புதுப்பிக்க இரண்டு திட்டங்கள் அறிமுகம்.

- நாடு முழுவதும் உள்ள அலையாத்தி காடுகள் மற்றும் சதுப்பு நிலங்களுக்கு புத்துயிர் அளிக்கும் வகையில், பிரதமர் மோடி ஜூன்5 அன்று "அம்ரித் தரோஹர் மற்றும் மிஷ்டி" என்ற இரண்டு திட்டங்களைத் தொடங்கி வைத்துள்ளார்.
- இந்த அம்ரித் தரோஹர் யோஜனா தொடங்கப்பட்டால், தற்போதுள்ள ராம்சார் தளங்கள் பொதுமக்களின் பங்கேற்பின் மூலம் பாதுகாக்கப்படும் என்றும் இந்த தளங்கள் ஆயிரக்கணக்கான மக்களுக்கு பசுமை வேலை வாய்ப்புகளின் ஆதாரமாகவும், சுற்றுச்சூழல் சுற்றுலா மையங்களாகவும் அமையும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஒரு மாணவர் ஒரு மரம் பிரச்சாரம் 2023" நடத்தத் திட்டம்.

- கல்வி மற்றும் வெளியுறவுத்துறை இணை அமைச்சர் டாக்டர் ராஜ்குமார் ரஞ்சன் சிங் ஜூன் 5 அன்று, அகில இந்திய தொழில்நுட்பக் கல்வி அமைப்பின்(AICTE) "ஒரு மாணவர் ஒரு மரம் பிரச்சாரம் 2023" என்ற முன்னெடுப்பானது தொடங்கப்படும் என அறிவித்துள்ளார்.
- அதே சமயத்தில் 'இளங்கலை மட்ட அளவில் "சுற்றுச்சூழல் கல்விக்கான வழிகாட்டுதல்கள் மற்றும் பாடத்திட்டக் கட்டமைப்பை"' வெளியிட்டுள்ளார். இந்த பிராச்சாரமானது "மிஷன் லைஃப் முன்னெடுப்பு(Mission LiFE) குறித்த விழிப்புணர்வை மக்களிடையே கொண்டு சேர்க்கும் என தெரிவித்துள்ளார்.

SIVARAJAVEL IAS ACADEMY

## நீருக்கடியில் இலக்கை தகர்ப்பதற்கான டார்பிடோ சோதனையில் கடற்படை வெற்றி.

- ஜூன் 6 அன்று இந்தியாவால் 'மேட் இன்' இந்தியா திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட அதிக எடை கொண்ட டார்பிடோவைப் பயன்படுத்தி "நீருக்கடியில் இலக்கை அழிக்க நடத்திய சோதனையில் இந்திய கடற்படை வெற்றி கண்டது.
- 'சீ ஸ்கிம்மிங்' எனப்படும் இந்த ஏவுகணையானது, கடலில் மிதக்கும் இலக்கை கீழே இருந்து தாக்கி அழிக்கும் வல்லமை கொண்டது. இந்த ஏவுகணை கிட்டத்தட்ட 300 கிமீ தூரம் வரை சென்று இலக்கை தாக்கும் திறன் கொண்டது என இந்தியக் கடற்படை தெரிவித்துள்ளது.

## பன்னாட்டு அமைதி காக்கும் கூட்டுப் பயிற்சி எக்ஸ் கான் குவெஸ்ட் 2023 இல் இந்திய ராணுவக் குழு பங்கேற்பு



- மங்கோலியாவில் நடைபெறும் பன்னாட்டு அமைதி காக்கும் கூட்டுப் பயிற்சி எக்ஸ் கான் குவெஸ்ட் 2023ல் இந்திய ராணுவக் குழு பங்கேற்கிறது.மங்கோலியாவின் ஜனாதிபதி உக்னாகின் குரேல்சுக் இப்பயிற்சியை தொடங்கி வைத்துள்ளார்.
- இந்திய ராணுவத்தைக் கர்வால் ரைபிள்ஸ் பிரிவின் ஒரு குழு பிரதிநிதித்துவப்படுத்துகிறது. 14 நாள் பயிற்சியானது, பங்கேற்கும் நாடுகளின் இயங்குதன்மையை மேம்படுத்துதல், அனுபவத்தைப் பகிர்ந்துகொள்வது மற்றும் ஐக்கிய நாடுகளின் அமைதி காக்கும் நடவடிக்கைகளுக்கு சீருடை அணிந்த பணியாளர்களுக்கு பயிற்சி அளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## இந்தியா மற்றும் மங்கோலிய ராணுவத்தினருக்கு இடையேயான கூட்டு ராணுவப் பயிற்சியான 'Nomadic Elephant 2023' ஆனது தொடங்கியுள்ளது.

- இந்தியாவுக்கும் மங்கோலியாவுக்கும் இடையிலான கூட்டு ராணுவப் பயிற்சியின் 15வது பதிப்பான 'Nomadic Elephant 2023' ஆனது மங்கோலியாவில் உள்ள உலான்பாதரில் ஜூலை 17 அன்று தொடங்கியுள்ளது. இந்த கூட்டு ராணுவ பயிற்சியானது ஜூலை 17 முதல் 31 ஆம் தேதி வரை நடைபெற உள்ளது.
- Nomadic Elephant என்றக் கூட்டு ராணுவ பயிற்சியானது இந்தியா மற்றும் மங்கோலியா இடையிலான வருடாந்திரக் கூட்டு பயிற்சியாகும். கடந்த பதிப்பானது அக்டோபர் 2019 இல் பக்லோவில் உள்ள சிறப்புப் படைகள் பயிற்சி பள்ளியில் நடைபெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## 62 வறட்சி—சகிப்புத்தன்மை கொண்ட வாஸ்குலார் தாவர இனங்களை புதிய ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது



- இந்தியாவின் பல்லுயிர் பெருக்கப் பகுதியான மேற்குத் தொடர்ச்சி மலையில் 62 வறட்சி—தாங்கும் வாஸ்குலார் தாவர இனங்கள் உள்ளன, அவை விவசாயத்தில் குறிப்பாக தண்ணீர் பற்றாக்குறை உள்ள பகுதிகளில் பயன்படுத்தப்படலாம் என்று புதிய ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது
- 62 இனங்களின் பட்டியலில், 16 இந்திய இனங்கள், மேலும் 12 மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதிகளுக்கு பிரத்தியேகமானவை, இது உலகளாவிய DT ஹாட்ஸ்பாட் என்ற WG இன் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகிறது. ஆய்வின்படி, பாறைகள் தவிர, பகுதியளவு நிழலிடப்பட்ட காடுகளில் உள்ள மரத்தின் டிரங்குகளும் டிடி இனங்களுக்கு முக்கியமான வாழ்விடங்களாக இருப்பது கண்டறியப்பட்டது.

## கச்சா எண்ணெய் அகழ்வு மற்றும் சுத்திகரிப்பின் போது வெளியேற்றப்படும் கழிவுநீரை மீட்டெடுக்க உதவும் பசுமை சஞ்சீவி



- கச்சா எண்ணெய் அகழ்வு மற்றும் சுத்திகரிப்பின் போது வெளியேற்றப்படும் கழிவு நீரை மீட்டெடுக்க உதவும் பொருள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தாவர அடிப்படையிலான உயிர்மப்பொருள், பயோசர்பாக்டான்ட் மற்றும் என்பிகே உரம் ஆகியவற்றைக் கொண்ட கலவையாக இந்தப் பசுமை சஞ்சீவி உருவாக்கப்படுகிறது.
- இந்த அதிசயக் கலவை நீர் உருவாக்கத்தில் இருந்து சுற்றுச்சூழல் மாசுபடுவதைத் தடுக்க உதவுவதுடன், பசுமைப் புரட்சியை பராமரிக்க பயன்படுத்த உதவுகிறது. இது தொடர்ந்து வளர்ந்து வரும் உணவுத் தேவையை பூர்த்தி செய்ய பயிர் உற்பத்தியை அதிகரிக்கவும் உதவுகிறது.

## இந்தியாவின் நட்சத்திர ஏவுகணை அக்னி பிரைம் சோதனை ஓட்டத்தில் வெற்றி.

- புதிய தலைமுறை பாலிஸ்டிக் ஏவுகணையான அக்னி பிரைம் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பால் (DRDO) ஜூன் 07 அன்று மாலை ஒடிசா கடற்கரையில் உள்ள டாக்டர் ஏபிஜே அப்துல் கலாம் தீவில் வெற்றிகரமாக பறக்கும் சோதனையில்(Flight test) வெற்றி பெற்றுள்ளது.
- இந்த ஏவுகணையானது இந்தியாவின் நட்சத்திர ஏவுகணைகளில் (Most Capable) ஒன்றாகும். இது இரட்டை வழிசெலுத்தல் மற்றும் வழிகாட்டுதல் அமைப்புடன் இயங்கக்கூடிய ஒரு பாலிஸ்டிக் ஏவுகணையாகும். இது அக்னி ஏவுகணை வரிசைகளில் ஆறாவது ஏவுகணை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## ககன்யான் திட்டத்துக்கான குழு மீட்பு மாதிரிகளை உருவாக்க டாடா எல்க்ஸி நிறுவனமானது இஸ்ரோவுடன் இணைந்துள்ளது.

- டாடா எல்க்ஸி நிறுவனமானது ககன்யான் திட்டத்திற்கான "குழுவினரின் பாதுகாப்பான மீட்பு சேவைக்காக" இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்துடன் (ISRO) கூட்டு சேர்ந்துள்ளது. அதாவது விண்வெளிப் பயணத்தின் போது "மீட்புக் குழுப் பயிற்சிக்காக குழு அமைப்பின் பாதுகாப்பு உபகரணங்களை (CMRM) வடிவமைத்து உருவாக்கியுள்ளது.
- இஸ்ரோவின் ககன்யான் திட்டமானது, மூன்று நாள் பணிக்காக ஒரு குழுவினரை 400 கிலோமீட்டர் சுற்றுப்பாதையில் செலுத்தி, பின் வேலை நிறைவு செய்த பின்னர் இந்தியப்

பெருங்கடல் நீரில் தரையிறக்கும் பொது அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான அமைப்பை இந்த நிறுவனம் உருவாக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நரம்பியல் மற்றும் புற்றுநோய்க்கான மருந்து தயாரிக்கும் இந்தியாவின் முதல் கேனாபிஸ் ஆராய்ச்சித் திட்டம் அறிமுகம்.

- CSIR மற்றும் IIM ஜம்மு இணைந்து நாட்டின் நரம்பியல் மற்றும் புற்றுநோய்க்கான மருந்து தயாரிப்பதற்காக முதன்முதல் கேனாபிஸ்-ஐ பயன்படுத்தவதற்கான ஆராய்ச்சி திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்த திட்டமானது “நரம்பியல், வலிப்பு மற்றும் புற்றுநோய்களுக்கான ஏற்றுமதியில் தரமான மருந்தை உற்பத்தி செய்வதற்கான சிறந்த ஆற்றலை மேம்படுத்துவதை நோக்கமாக கொண்டு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது” என மத்திய அமைச்சர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

## வைக்கிங் நோய் நியண்டர்தால்களிடமிருந்து பெறப்பட்ட மரபணுவிலிருந்து பெற்றிருக்கலாம் என சமீபத்திய அறிக்கையில் கண்டுபிடிப்பு.

- வடக்கு ஐரோப்பாவில் கிட்டத்தட்ட 60 வயதிற்கு மேற்பட்ட பல ஆண்கள் மிகக்கொடூரமான வைக்கிங் நோயால் பாதிக்கப்படுகின்றனர். அதாவது இந்த நோய் ஏற்பட்டுள்ளவர்களுக்கு கை மற்றும் கால் விரல்கள் வளைந்த நிலையில் காணப்படுதல் மற்றும் அதிக கோப நிலை ஏற்படுதல் ஆகியவை அறிகுறிகளாக அமையும்.
- கரோலின்ஸ்கா பல்கலைகழத்தை சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் மூலக்கூறு உயிரியல் மற்றும் பரிணாமம் தொடர்பாக நடத்திய ஆய்வில் இந்த நோயினை பெற்றவர்களின் முன்னோர்கள் நியண்டர்தால்களிடமிருந்து மரபணுவை பெற்றிருக்கலாம் என்பதை கண்டறிந்துள்ளனர்.

## உள்நாட்டு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஒமிக்ரான்—நுண்கிருமிக்கென்று முன்னெச்சரிக்கைத் தடுப்பூசி தயாரிக்கப்பட்டுள்ளது

- உள்நாட்டு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஒமிக்ரான்—நுண்கிருமிக்கென்று எம்ஆர்என்ஏ அடிப்படையிலான முன்னெச்சரிக்கை தடுப்பூசி தயாரிக்கப்பட்டுள்ளது என்று மத்திய உயிரி தொழில்நுட்பத்துறை அறிவித்துள்ளது.
- கொவிட் சுரக்ஷா இயக்கத்தின் ஆதரவுடன் ஜென்னோவா உயிரிமருந்துகள் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டுள்ள இந்தத் தடுப்பூசியை உயிரி தொழில்நுட்ப தொழில்துறை ஆராய்ச்சிக் கவுன்சில் அமலுக்கு கொண்டுவந்துள்ளது. இதன் அவசரகால பயன்பாட்டுக்கு இந்திய மருந்துக் கட்டுப்பாட்டு தலைமை அலுவலகம் ஒப்புதல் அளித்துள்ளது.

# விளையாட்டுச் செய்திகள்

## ஆசிய U20 தடகள சாம்பியன்ஷிப்பில் "சுனில் குமார்" டெகாத்லான் பிரிவில் தங்கம் வென்றுள்ளார்.

- தென் கொரியாவின் யெச்சியோனில் ஜூன் 06 அன்று நடைபெற்ற ஆசிய U20 தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவை சேர்ந்த தடகள வீரரான சுனில் குமார் "7003 புள்ளிகள்" பெற்று, ஆண்களுக்கான டெகாத்லானில் தங்கம் வென்றுள்ளார்.
- இவரைத் தவிர, பூஜா 1.82 மீட்டர் உயரம் தாண்டி பெண்களுக்கான உயரம் தாண்டுதல் பிரிவில் வெள்ளியையும், புஷ்ரா கான் பெண்களுக்கான 3000 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் வெள்ளியையும் வென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## Bahnen-Tournee 2023:சைக்கிள் ஓட்டுதல் போட்டியில் இந்தியாவிற்கு வெண்கலப் பதக்கம்.

- ஜெர்மனியின் டுடென்ஹோஃபெனில் பகுதியில் நடைப்பெற்ற UCI வகுப்பு 1 நிகழ்வு-இறுதிப் போட்டி "Bahnen-Tournee 2023" சைக்கிள் ஓட்டுதல் போட்டியில், ஆண்கள் பிரிவின் கீழ் இந்திய சைக்கிள் பங்கேற்பாளரான "எஸோவ் ஆல்பன்" வெண்கலப் பதக்கத்தை வென்றுள்ளார்.
- இந்த சாதனையின் மூலம் "உலக சைக்கிள் ஓட்டுதல் சாம்பியன்ஷிப்பில் பதக்கம் வென்ற முதல் இந்தியர்" என்ற பெருமையையும் பெற்றார்.

## பெண்களுக்கான டென்னிஸ் போட்டியில் உஸ்மானியா பல்கலைக்கழகத்தை வீழ்த்தி புனே பல்கலைக்கழகம் முதல் தங்கப் பதக்கத்தை வென்றுள்ளது.




- லக்னோவின் ஏகானா சர்வதேச டென்னிஸ் மைதானத்தில் நடைபெற்ற மகளிருக்கான டென்னிஸ் போட்டியில் "சாவித்ரிபாய் பூலே புனே பல்கலைக்கழகமானது 2-0 என்ற கோல் கணக்கில் உஸ்மானியா பல்கலைக்கழகத்தை வீழ்த்தி முதல் தங்கப் பதக்கத்தை வென்றுள்ளது.
- அதேநேரத்தில் "ஜெயின் பல்கலைக்கழகத்தின் பெண் டென்னிஸ் வீராங்கனைகள் 2-0 என்ற கோல் கணக்கில் மெட்ராஸ் பல்கலைக்கழகத்தை" வீழ்த்தி வெண்கலப் பதக்கத்தை வென்றுள்ளனர்.

## தேசிய சர்க்யூட் ஸ்குவாஷ் போட்டியில் வீர் சோத்ராணி, அனாஹத் சிங் சாம்பியன் பட்டம் வென்றனர்



- மகாராஷ்டிராவின் வீர் சோத்ராணி மற்றும் டெல்லியின் அனாஹத் சிங் ஆகியோர் தேசிய சர்க்யூட் ஸ்குவாஷ் போட்டியில் ஆண்கள் மற்றும் பெண்கள் ஒற்றையர் பிரிவில் சாம்பியன் பட்டங்களை வென்றனர். இந்த போட்டிக்கு ரூபிகான் கன்ஸ்யூமர் ஹெல்த்கேர் மற்றும் ஹெச்பிட்ஸ் இணைந்து நிதியுதவி வழங்குகின்றன.
- சோத்ராணி 11-9, 11-8, 11-6 என்ற நேர் செட் கணக்கில் சூரஜ் சந்தை தோற்கடித்தார், அனாஹட் 11-7, 11-8, 11-3 என்ற செட் கணக்கில் ஊர்வாஷியை வீழ்த்தி சீனியர் சாம்பியன் ஆனார்.

## ஜூனியர் ஹாக்கி ஆசிய கோப்பையில் இந்தியா நான்காவது முறையாக சாம்பியன் பட்டம் வென்றுள்ளது.

- ஓமனின் சலாலாவில் உள்ள சுல்தான் கபூஸ் யூத் காம்ப்ளக்ஸ் மைதானத்தில் ஜூன் 1 அன்று இரவு நடைபெற்ற 2023ஆம் ஆண்டுக்கான ஆடவர் ஜூனியர் ஆசிய கோப்பையின் இறுதிப் போட்டியில் இந்திய ஹாக்கி அணியானது 2-1 என்ற கோல் கணக்கில் பாகிஸ்தான் அணியை வீழ்த்தியது.

- இந்திய அணியானது இந்த ஆண்டில் வென்றதன் மூலம், ஆடவர் ஜூனியர் ஆசிய கோப்பை வரலாற்றில் "அதிக வெற்றி பெற்ற நாடு என்ற அந்தஸ்தை பெற்றுள்ளது.

## UWW தரவரிசை தொடர் மல்யுத்தப் போட்டியில் இந்தியாவின் மன்ஜீத்க்கு வெண்கலம்.

- ஜூன் 1 அன்று நடைபெற்ற UWW தரவரிசை தொடர் மல்யுத்த போட்டியில் இந்தியாவை சேர்ந்த மன்ஜீத் ஆண்களுக்கான 55 கிலோ பிரிவில் வெண்கலம் வென்றுள்ளார்.
- இந்திய வீரர் கஜகஸ்தானின் யெர்சின் அபியரை VPO1 வழியாக 14-9 என்ற கணக்கில் தோற்கடித்து வெண்கலம் வென்றுள்ளார்.



## ஜூடோ சாம்பியன்ஷிப் 2023 போட்டியில் தசீம் ஃபயாஸ் வெள்ளிப் பதக்கம் வென்றுள்ளார்.

- ஸ்ரீநகரைச் சேர்ந்த இளம் ஜூடோ வீரரான தசீம் ஃபயாஸ், அனைத்திந்திய பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான "ஜூடோ சாம்பியன்ஷிப் 2023" போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்றுளார்.
- இந்த போட்டியில் "காஷ்மீர் பள்ளத்தாக்கைப்" பிரதிநிதித்துவப்படுத்தும் தசீம் தனது அபரிவிதமான முழு திறமையையும் உறுதியையும் வெளிப்படுத்தியுள்ளார். இறுதிப் போட்டியில் அவர் தோல்வியடைந்தாலும், அவரது சிறப்பான ஆட்டமானது அனைவரின் மனதையும் கவர்ந்துள்ளது என ஜம்மு & காஷ்மீர் ஜூடோ விளையாட்டு கழகம் தெரிவித்துள்ளது.

## ஃபிளாண்டர்ஸ் கோப்பை 2023 தடகளப் போட்டியில் இந்தியாவின் முன்னணி ஓட்டப்பந்தய வீரர் இரண்டு தங்கப் பதக்கங்களை வென்றுள்ளார்.



- ஜூன் 2023ல் பெல்ஜியத்தில் உள்ள மெர்க்செமில் நடைபெற்ற "சர்வதேச ஆன்ட்வெர்ப் தடகள காலா" என உலகளவில் அனைவராலும் அறியப்படும் "ஃபிளாண்டர்ஸ் கோப்பை 2023" தடகளப் போட்டியில் ஆடவருக்கான 100 மற்றும் 200 மீட்டர் ஓட்டப் பந்தய போட்டிகளில் தலா ஒரு தங்கப் பதக்கத்தை இந்தியாவின் முன்னனணி ஓட்டப்பந்தய வீரரான "அம்லன் போர்கோஹைன்" வென்றுள்ளார்.
- போர்கோஹைன் 10.70 வினாடிகளில் எல்லையைக் கடந்து போட்டியின் அதிவேக வீரராக உருவெடுத்துள்ளார் மற்றும் இவர் 100 மீட்டர் தேசிய சாதனையை 10.25 வினாடிகளில் கடந்தும், 200 மீட்டரில் 20.96 வினாடிகளில் கடந்து ஹாஃப்மேன் 21.42 ஐ விட முன்னரே வெற்றி கோட்டினை கடந்து சாதனை படைத்துள்ளார்.

## 20 வயதுக்குட்பட்டோருக்கான(U-20) ஆசிய தடகள சாம்பியன்ஷிப் 2023 போட்டியில் இந்தியாவிற்கு மூன்று பதக்கங்கள்.

- ஜூன் 4,2023 அன்று தென் கொரியாவின் யெச்சியோனில் நடைப்பெற்ற 20 வயதுக்குட்பட்டோருக்கான "ஆசிய தடகள சாம்பியன்ஷிப் போட்டியில்" இந்தியா இரண்டு தங்கம் உட்பட மொத்தம் மூன்று பதக்கங்களை வென்றுள்ளது.
- ஆடவர் வட்டு எறிதல் போட்டியில் "பாரத்ப்ரீத் சிங்" மற்றும் பெண்களுக்கான 400 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் "ரெசோனா மல்லிக் ஹீனா" ஆகியோர் இந்த போட்டியில் தங்கப் பதக்கங்களை வென்றுள்ளனர். பெண்களுக்கான 5,000 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் 17 நிமிடங்கள் 17.11 வினாடிகளில் கடந்து இந்தியாவின் மூன்றாவது பதக்கமான வெண்கலப் பதக்கத்தை "ஆன்டிமா பால்" வென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## தாய்லாந்து ஓபனில் அஹ்ன் சே யங் தனது "4வது மகளிர் ஒற்றையர் சூப்பர் தொடர் பட்டத்தை" வென்றுள்ளார்.

- தாய்லாந்து ஓபன் பேட்மிண்டனில் உலக தரவரிசையில் 2ஆவது இடத்தில் உள்ள சிறந்த வீராங்கனையான தென் கொரியவை சேர்ந்த அன் சே யங், சீனாவின் ஹி பிங்ஜியாவோவை 21-10, 21-19 என்ற கணக்கில் தோற்கடித்து, இந்த ஆண்டு தொடருக்கான மகளிர் ஒற்றையர் சூப்பர் தொடர் பட்டத்தை வென்றுள்ளார்.
- இது மகளிர் ஒற்றையர் சூப்பர் தொடரின் 4வது வெற்றி மற்றும் தொடர்ச்சியாக ஏழாவது இறுதிப் போட்டி என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

## 2023 ஆம் ஆண்டுக்கான UWW தரவரிசை தொடர் போட்டியில் இந்திய மல்யுத்த வீராங்கனையான "மனிஷா" தங்கம் வென்றுள்ளார்.

- ஜூன் 3 ஆம் தேதி கிர்கிஸ்தானின் பிஷ்கெக்கில் நடந்த "2023 ஆம் ஆண்டுக்கான UWW தரவரிசை தொடர் போட்டியில்" இந்திய போட்டியாளர்கள் மூன்று பதக்கங்களுடன் போட்டியை நிறைவு செய்தனர்.
- ரீத்திகா தனது சிறந்த ஆட்டத்தின் மூலம் இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளார் சரிதா மோர் வெண்கலப் பதக்கத்தை வென்றுள்ளார். அதே சமயத்தில் இந்தத் தொடரில் இந்தியாவின் எண்ணிக்கை 1 தங்கம், 1 வெள்ளி மற்றும் 2 வெண்கலம் உட்பட 4 பதக்கங்களுடன் போட்டி நிறைவு பெற்றது.

## ISSF ஜூனியர் உலகக் கோப்பை 2023ல் இந்தியாவுக்கு இரண்டாவது தங்கப் பதக்கம்.

- ஜெர்மனியின் சுஹல் நகரில் நடைபெற்ற ISSF உலகக் கோப்பை இளையோருக்கான(Junior) 10 மீட்டர் காற்று அழுத்த கலப்பு அணிக்கான இறுதிப் போட்டியில் இந்திய துப்பாக்கி சுடுதல் வீரர்களான "அபினவ் ஷா மற்றும் கௌதமி பானோட்" ஆகியோர் வென்று இந்தியாவிற்கான 2வது தங்கத்தை பெற்று தந்துள்ளனர்.
- ஜூன்4,2023 அன்று நடைபெற்ற இந்த ஆட்டத்தில் இந்திய அணியானது 17-7 என்ற புள்ளிக் கணக்கில் பிரான்ஸ் நாட்டின் ஜோடியான "ஓசியன் முல்லர் மற்றும் ரொமைன் ஆஃப்ரேரை" வீழ்த்தியுள்ளது. இந்தியா தற்போது வரை இந்த ஆண்டுக்கான ISSF உலகக் கோப்பையில் இரண்டு தங்கப் பதக்கங்கள் மற்றும் ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப் பதக்கங்களைப் பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## ISSF ஜூனியர் உலகக் கோப்பை 10 மீட்டர் காற்றழுத்தத் துப்பாக்கி சுடுதல் பிரிவில் தனுஷ் ஸ்ரீகாந்த் தங்கம் வென்றுள்ளார்.

- 2023 ஆம் ஆண்டுக்கான சர்வதேச துப்பாக்கி சுடுதல் விளையாட்டு கூட்டமைப்பின்(ISSF) உலகக் கோப்பை இளையோருக்கான(Junior) போட்டியில் ஆடவர் 10 மீட்டர் காற்றழுத்த துப்பாக்கி சுடுதல் பிரிவின் கீழ் "தனுஷ் ஸ்ரீகாந்த்" வெற்றியடைந்து, இந்தியாவுக்கு தங்கத்தைப் பெற்று தந்துள்ளார்.
- தனுஷ் தனது இறுதிப் போட்டியில் 24 சுடுதல்களின் மூலம் 249.4 புள்ளிகளைப் பதிவுசெய்து இந்தப் பதக்கத்தை பெற்றுள்ளார்.

## U-20 ஆசிய தடகள சாம்பியன்ஷிப் போட்டியின் ஆண்களுக்கான குண்டு எறிதல் போட்டியில் இந்தியா தங்கம் வென்றுள்ளது.

- தென் கொரியாவில் தற்போது நடைபெற்று வரும் 20 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய தடகள சாம்பியன்ஷிப் 2023 போட்டியில் ஆடவர் குண்டு எறிதல் போட்டியில் சித்தார்த் சவுத்ரி தங்கம் வென்றுள்ளார்.
- ஆண்களுக்கான குண்டு எறிதல் போட்டியில் 19.52 மீட்டர் தூரம் எறிந்து இந்தியாவின் சித்தார்த் சவுத்ரி தங்கம் வென்றுள்ளார்.
- 2023ஆம் ஆண்டுக்கான மகளிர் ஜூனியர் ஆசிய ஹாக்கி கோப்பையில் இந்திய அணி வெற்றி பெற்றுள்ளது.
- ஜப்பானில் உள்ள ககாமிகஹாராவில் ஜூன் 11 இல் நடைபெற்ற 2023ஆம் ஆண்டுக்கான மகளிர் ஜூனியர் ஆசிய ஹாக்கி கோப்பையில் இந்திய ஹாக்கி அணி கொரியாவின் ஹாக்கி அணியை வீழ்த்தி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுள்ளது.
- பெண்கள் ஜூனியர் ஆசிய கோப்பையை இந்தியா வெல்வது இதுவே முதல்முறை என்பது குறிப்பிடத்தக்கது. இந்தியா சார்பில் நீலம்(40') மற்றும் அன்னு(21') ஆகியோர் வெற்றிக்கான இலக்கை எட்டுவதற்கு உறுதுணையாக இருந்தனர்.

## 2023ஆம் ஆண்டுக்கான "ICC உலக டெஸ்ட் சாம்பியன் போட்டியில்" ஆஸ்திரேலிய அணி வெற்றி.



- லண்டனின் ஓவலில் நடைபெற்றப் பரபரப்பான WTC இறுதிப்போட்டியில் இந்தியாவை எதிர்த்து, 209 ரன்கள் வித்தியாசத்தில் அபார வெற்றிப் பெற்று ஆஸ்திரேலிய அணியானது 2023ஆம் ஆண்டுக்கான ICC உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் கோப்பையை வென்றுள்ளது.
- இந்த வெற்றியின் மூலம் ICC கீழ் நடத்தப்படும் அனைத்து வகையானப் போட்டிகளையும் வென்று கோப்பையைக் கைப்பற்றிய ஒரே நாடு என்ற அந்தஸ்தை ஆஸ்திரேலியா பெற்றது. தற்போது ஆஸ்திரேலியா இந்த வெற்றியை பதிவு செய்ததன் மூலம் "9 ICC கோப்பைகளை" தன்னகத்தே வைத்துள்ளது என்பது இதன் சிறப்பாகும்.

### பிரெஞ்ச் ஓபனில் நோவக் ஜோகோவிச் தனது 23வது கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை வென்றுள்ளார்.



- பிரெஞ்ச் ஓபனின் இறுதிப் போட்டியில் நோவக் ஜோகோவிச் 7—6 (1), 6—3, 7—5 என்ற நேர் கணக்கில் நார்வேயின் காஸ்பர் ரூட்டை தோற்கடித்து தனது மூன்றாவது ரோலண்ட் கரோஸ் பட்டம் மற்றும் 23வது கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை வென்றுள்ளார்.
- மேலும் இந்த வெற்றியின் மூலம் ஒவ்வொரு கிராண்ட்ஸ்லாம் போட்டிகளையும் மூன்று முறை வென்ற முதல் மனிதர் என்ற அந்தஸ்த்தை பெற்று உலக சாதனை படைத்துள்ளார்.
-

### டென்மார்க் மாஸ்டர்ஸ் 2023ல் கலப்பு இரட்டையர் பிரிவில் இந்திய ஜோடி சாம்பியன் பட்டத்தை வென்றுள்ளது.



- இந்திய அணியின் கலப்பு இரட்டையர் ஜோடி பிரிவில் ரோகன் கபூர் மற்றும் சிக்கி ரெட்டி ஆகியோர் ஜூன் 11 அன்று நடைபெற்ற டென்மார்க் மாஸ்டர்ஸ் 2023 போட்டியில் வெற்றி பெற்று பட்டத்தை வென்றுள்ளனர்.
- ரோஹன் மற்றும் ரெட்டி ஜோடியானது, டென்மார்க்கின் மேட்ஸ் வெஸ்டர்கார்ட் மற்றும் கிறிஸ்டின் புஷ் ஆகியோரை 21-16, 21-17 என்ற நேர் புள்ளிகளின் கணக்கில் தோற்கடித்து இந்த பட்டத்தை வென்றுள்ளது. மேலும் இந்த பட்டமானது இந்திய ஜோடிக்கு கிடைத்த மூன்றாவது பட்டமாகும்.

### முர்ரே 2023 ஆம் ஆண்டுக்கான சர்பிடன் பட்டத்தைக் கைப்பற்றினார்.



- ஆண்டி முர்ரே ஜூன் 11 அன்று நடைபெற்ற லெக்ஸஸ் சர்பிடன் கோப்பையில் சொந்த மண்ணில் வெற்றி பெற்று, சீசனின் இரண்டாவது ஏடிபி சேலஞ்சர் டூர் பட்டத்தை கைப்பற்றியுள்ளார்.
- இந்த ஏடிபி சேலஞ்சர் டூர் 125 புல்-மைதானத்தில் நடைப்பெற்ற போட்டியில், மழையால் குறுக்கிடப்பட்ட இறுதிப் போட்டியில் முன்னாள் உலக நம்பர் 1 வீரரான “ஜூரிஜ் ரோடியோனோவை” 6-3, 6-2 என்ற நேர் புள்ளி கணக்கில் தோற்கடித்துள்ளார்.

### உருகுவே தனது வரலாற்றின் 20 வயதுக்குட்பட்டோருக்கான முதல் உலகக் கோப்பையை வென்றுள்ளது.



- ஜூன் 11 அன்று இத்தாலியை 1-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி உருகுவே நாட்டின் கால்பந்து அணியானது தனது முதல் 20 வயதுக்குட்பட்டோருக்கான உலகக் கோப்பையை வென்றுள்ளது.
- உருகுவேயின் லூசியானோ ரோட்ரிக்ஸ் என்ற வீரர் 86வது நிமிடத்தில் தனது மற்றும் அணியின் முதல் கோலை பதிவு செய்து நாட்டின் வெற்றிக்கு அடித்தளமிட்டார் என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாக பார்க்கப்படுகிறது. இந்த மாபெரும் வெற்றியானது, கடந்த போட்டிகளில் ஐரோப்பிய அணிகளின் நான்கு தொடர்ச்சியான வெற்றிகளின் தொடர்ச்சியை முடிவுக்குக் கொண்டுவருவதாக அமைந்துள்ளது.

### ஆசிய கான்டினென்டல் மகளிர் செஸ் சாம்பியன்ஷிப்பில் இந்தியா வெற்றி.

- ஜூன் 11இல் கஜகஸ்தானில் நடைப்பெற்ற ஆசிய கான்டினென்டல் மகளிர் செஸ் சாம்பியன்ஷிப்பில் திவ்யா தேஷ்முக் வெற்றி பெற்றுள்ளார்.
- ஒன்பது சுற்றுகள் கொண்ட இந்த கான்டினென்டல் போட்டியில், இந்திய வீராங்கனையான திவ்யா போட்டியின் இரண்டாம் நிலை வீராங்கனையாகத் தொடங்கி எட்டு நாள் போட்டியை 7.5 புள்ளிகளுடன் முடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

### இந்தோனேசியா ஓபன் போட்டி ஜகார்த்தாவில் தொடங்கியது.

- இந்தோனேசியா ஓபன் பேட்மிண்டன் போட்டியானது ஜகார்த்தாவில் ஜூன் 13 அன்று தொடங்கியுள்ளது. இந்தோனேஷியா ஓபன் என்பது மலேசிய ஓபன் மற்றும் இங்கிலாந்து

ஓபனுக்குப் பிறகு ஒவ்வொரு ஆண்டிற்கான சீசனின் மூன்றாவது பேட்மிண்டன் உலக கூட்டமைப்புக்கான சூப்பர் 1000 நிகழ்வு அல்லது தொடர் ஆகும். இந்தப் போட்டியானது ஜூன் 13 இல் தொடங்கி ஜூன் 18இல் முடிவடைகிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

- பிவி சிந்து மற்றும் எச்எஸ் பிரணாய் ஆகியோர் உள்ளிட்ட இந்திய முன்னணி வீரர்கள் ஜூன் 13 அன்று நடைபெறும் போட்டியின் தொடக்க சுற்றில் அதிரடியாக விளையாட உள்ளதாக இந்திய விளையாட்டுத் துறை தெரிவித்துள்ளது.



## உலக ஸ்குவாஷ் சாம்பியன்ஷிப் போட்டி சென்னையில் தொடங்கியது.

- உலகக் கோப்பை ஸ்குவாஷ் சாம்பியன்ஷிப் போட்டியானது தமிழகத்தில் உள்ள சென்னையில் ஜூன் 13 அன்று தொடங்கியுள்ளது. இந்த விளையாட்டை ஜூன் 12 அன்று எக்ஸ்பிரஸ் அவென்யூ(EA) வணிக வளாகத்தில் தமிழக மாநில இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்துள்ளார்.
- இந்த உலகக் கோப்பையானது சென்னையில் நடப்பது மகிழ்ச்சி மற்றும் திருப்தி அளிக்கிறது என்று ஸ்குவாஷ் சாம்பியன்ஷிப் போட்டிக்கான அதிபர் ஜீனா வூல்ரிட்ஜ் தெரிவித்துள்ளார் மற்றும் இந்திய அணியானது இந்த உலகக் கோப்பையில் எதிரணியைச் சிறப்பாக எதிர்கொள்ளும் என்று இந்தியப் பயிற்சியாளர் கிறிஸ் வாக்கர் தெரிவித்துள்ளார்.



## கேஎஸ்எஸ்எம் துப்பாக்கி சுடுதல் சாம்பியன்ஷிப் போட்டியில் வருண் தோமர் காற்றழுத்த துப்பாக்கி பிரிவில் தங்கம் வென்றார்.

- சமீபத்தில் ஜூனியர் உலக சாம்பியன்ஷிப் பதக்கம் வென்ற வருண் தோமர், ஜூன் 15 அன்று நடைபெற்ற குமார் சுரேந்திர சிங் நினைவு துப்பாக்கி சுடுதல் சாம்பியன்ஷிப் போட்டியில் ஆண்களுக்கான 10 மீட்டர் காற்றழுத்த துப்பாக்கி பிரிவில் தங்கம் வென்றுள்ளார்.
- மேலும் இந்த இறுதிப் போட்டியில் ஆறு துப்பாக்கிச் சுடும் வீரர்களைக் கொண்ட இராணுவ துப்பாக்கிச் சுடுதல் பிரிவிலிருந்து சாகர் டாங்கி 219.4 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளார்.



## தேசிய மாநிலங்களுக்கு இடையேயான சாம்பியன்ஷிப் போட்டியில் அஞ்சலி 400 மீட்டர் ஓட்டத்தில் தங்கம் வென்றுள்ளார்.

- அஞ்சலி தேவி ஜூன் 16 அன்று நடைபெற்ற தேசிய மாநிலங்களுக்கு இடையேயான சாம்பியன்ஷிப் போட்டியில் பெண்களுக்கான 400 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் தங்கப் பதக்கத்தை வென்றுள்ளார்.
- இவருக்கு ஏற்பட்ட தீவிரமான காயம் நீங்கிய பிறகு கிட்டத்தட்ட நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு இந்த பாதைக்குத் திரும்பிய ஹரியானாவை சேர்ந்த இவர் மீண்டும் இந்த போட்டியில் தங்கப் பதக்கம் வென்றதை தொடர்ந்து ஆசிய விளையாட்டு போட்டிகளில் இந்திய அணிக்காக விளையாடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

## தேசிய மாநிலங்களுக்கு இடையேயான தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் மஞ்சு ராணி தங்கம் வென்றுள்ளார்.

- புகழ்பெற்ற தேசிய சாதனையாளரான பஞ்சாபின் மஞ்சு ராணி, இந்த ஆண்டுக்கான தேசிய மாநிலங்களுக்கு இடையேயான தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் பெண்களுக்கான 35 கிமீ பந்தய நடைப் போட்டியில் தங்கம் வென்றுள்ளார்.

- 3:21:31 என்பது இவரது விகிதமாகும். 24 வயதான இவர், மிக கடுமையான சூழ்நிலையில் 3 மணி மற்றும் 21 நிமிடங்கள் போட்டியிட்டு இந்த வெற்றிக்காக போராடினார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.




## வில்வித்தைக்கான உலகக் கோப்பை 2023 – இந்திய ரிகர்வ் ஆண்கள் அணி வெண்கலப் பதக்கம் வென்றது.




- ஜூன் 15 அன்று கொலம்பியாவின் மெடலின் நகரில் நடைபெறும் இந்த ஆண்டுக்கான வில்வித்தை உலகக் கோப்பை போட்டியில் பகுதி – 3இல் இந்தியாவின் ரிகர்வ் ஆண்கள் அணி வெண்கலப் பதக்கத்தை வென்றுள்ளது.
- தீரஜ் பொம்மதேவரா(நான்காம் தரவரிசை), துஷார் ஷெல்கே மற்றும் மிருணாள் சவுகான் ஆகியோர் அடங்கிய இந்த இந்திய ரிகர்வ் அணியானது, சீனாவை 5-3 என்ற கோல் கணக்கில் தோற்கடித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## வில்வித்தை உலகக் கோப்பை 2023 இல் இந்திய வில்வித்தை வீரர் தங்கம் வென்றார்.



- கொலம்பியாவின் மெடலின் நகரில் நடைபெற்ற இந்த ஆண்டுக்கான வில்வித்தை உலகக் கோப்பை தொகுதி 3ல் ஆடவர் பிரிவின் கீழ் தனிநபர் இறுதிப் போட்டியில் இந்திய வில்வித்தை வீரரான அபிஷேக் வர்மா தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.
- ஜூன் 18 அன்று நடைபெற்ற இறுதி போட்டியில் அபிஷேக் 148-146 என்ற புள்ளிக்கணக்கில் அமெரிக்காவின் வீரரான ஜேம்ஸ் லூட்ஸை தோற்கடித்து இந்திய பதக்க பட்டியலில் இரண்டாவது தங்கத்தை பெற்று தந்துள்ளார் என்பது குறிப்பிடதக்கதாகும்.

## நாட்டிங்ஹாம் ஓபன் இறுதிப் போட்டியில் ஆண்டி முர்ரே 2வது முறையாக “புல்-கோர்ட்” பட்டத்தை வென்றுள்ளார்.



- நாட்டிங்ஹாம் ஓபன் இறுதிப் போட்டியில் உலக புகழ்பெற்ற ஆண்டி முர்ரே 6-4, புள்ளி கணக்கில் ஆர்தர் கசாக்ஸை தோற்கடித்து இரண்டாவது நேராக புல்-கோர்ட் பட்டத்தை 2023 விம்பிள்டனுக்கு முன்னதாகவே வென்றுள்ளார்.
- இந்த வெற்றியின் மூலம் மீண்டும் விம்பிள்டன் போட்டியிலும் சிறப்பாக விளையாடி சாம்பியன் பட்டத்தைப் பெறுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

## இந்தியா 2-0 என்ற கோல் கணக்கில் 2வது முறையாக இன்டர்காண்டினென்டல் கோப்பையை வென்றுள்ளது.


- ஒடிஷாவின் தலைநகரமான புவனேஸ்வரில் உள்ள கலிங்கா மைதானத்தில் நடந்த இறுதிப் போட்டியில் லெபனான் நாட்டின் அணியை 2-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி இந்திய அணியானது வரலாற்றின் இரண்டாவது முறையாக இன்டர்காண்டினென்டல் கோப்பையை வென்றுள்ளது.
- 2019ல் நடந்த இந்தப் போட்டியின் முந்தைய பதிப்பில் இந்தியா நான்காவது இடத்தைப் பிடித்துள்ளது மற்றும் இந்த ஆட்டத்தில் 46வது நிமிடத்தில் சுனில் சேத்ரி இந்திய அணியின் கோலை அடித்ததன் மூலம் நட்சத்திர ஆட்டத்தை துவங்கி வைத்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## இந்தோனேசியா ஓபன் ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்திய ஜோடி சாம்பியன் பட்டம் வென்றுள்ளது.



- ஜூன் 18 2023இல் நடைபெற்ற இந்தோனேசியா ஓபன் போட்டியில் ஆடவர் இரட்டையர் பட்டத்தை சிராக் ஷெட்டி மற்றும் சாத்விக்சாய்ராஜ் ரங்கிரெட்டி ஆகியோர் பெற்றுள்ளனர்.
- இந்த ஜோடியானது மலேசியாவின் சோ வூய் யிக் மற்றும் ஆரோன் சியா ஆகியோருக்கு எதிரான போட்டியில் வரலாற்று வெற்றி பெற்றனர் மேலும் இதன் மூலம் இந்த ஜோடியானது BWF உலக தரவரிசையில் 3வது இடத்திற்கு முன்னேறியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## ஸ்குவாஷ் உலகக் கோப்பையை எகிப்து அணியானது வென்றுள்ளது.



- ஜூன் 17 அன்று தமிழகத்தின் சென்னையில் உள்ள எக்ஸ்பிரஸ் அவென்யூ மாலில் நடந்த SDAT-WSF ஸ்குவாஷ் உலகக் கோப்பை போட்டியில் எகிப்தின் அணியானது வென்றுள்ளது.
- இந்த இறுதிப் போட்டியில் நான்காவது இடத்தில் உள்ள மலேசியாவை 2-1 என்ற புள்ளிகள் கணக்கில் வீழ்த்தி இந்த கோப்பையை எகிப்து கைப்பற்றியது. மேலும் கடந்த 2011-ம் ஆண்டு நடைபெற்ற உலகக் கோப்பையை எகிப்து வென்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## பர்மிங்காம் கிளாசிக் போட்டியில் வீனஸ் வில்லியம்ஸ் வெற்றி பெற்றுள்ளார்



- ஜூன் 19 இல் நடைபெற்ற பர்மிங்காம் கிளாசிக் டென்னிஸ் போட்டியில் உலக தரவரிசையில் 697-வது இடத்தில் உள்ள வீனஸ் வில்லியம்ஸ், 48-வது இடத்தில் உள்ள கமிலா ஜியோர்ஜியை தோற்கடித்தார். நான்கு ஆண்டுகளில் முதல் 50 வீரர்களுக்கு எதிராக வில்லியம்ஸ் வெற்றிப் பெற்றது இதுவே முதல் முறையாகும்.
- ஏழு முறை கிராண்ட்ஸ்லாம் சாம்பியனான வீனஸ் 43 7-6 (5), 4-6, 7-6 (6) என்ற கணக்கில் ஜியோர்ஜியை தோற்கடித்தார். இந்தப் போட்டி மூன்று மணி நேரம் 17 நிமிடங்கள் நீடித்தது.

## ஆசிய வாள்வீச்சு சாம்பியன்ஷிப் போட்டி – வெண்கலப் பதக்கம் வென்ற முதல் இந்திய வீராங்கனை

- ஒலிம்பிக் வீராங்கனை பவானி தேவி,சீனாவில் நடைபெற்ற ஆசிய வாள்வீச்சு சாம்பியன்ஷிப் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்ற முதல் இந்திய வீராங்கனை என்ற பெருமையை பெற்றார்
- இவர் அரையிறுதியில் உஸ்பெகிஸ்தானின் சைனாப் தயிபெகோவாவிடம் 15-14 என்ற கணக்கில்அரையிறுதியில் போராடி தோல்வியடைந்து வெண்கலப் பதக்கத்தை உறுதி செய்தார்.



## தைபே ஓபன் பேட்மிண்டன் போட்டி தொடக்கம்.

- தைபே ஓபன் பேட்மிண்டன் போட்டியானது ஒருங்கிணைந்த சீனாவின் தைவானில் உள்ள தைபேயில் ஜூன் 20 அன்று தொடங்கியுள்ளது.
- தைபே ஓபன் பேட்மிண்டன் போட்டி ஜூன் 20-ம் தேதி ஒருங்கிணைந்த சீனாவில் உள்ள தைவானில் தொடங்குகிறது. எச்.எஸ்.பிரணாய் இந்தப் போட்டியில் இந்தியாவின் அணியை முன்னின்று வழிநடத்துவார் என இந்திய விளையாட்டு துறை தெரிவித்துள்ளது.

## இருநூறு சர்வதேச கால்பந்து போட்டிகளில் விளையாடிய முதல் வீரர்.

- ஜூன் 20 அன்று ஐஸ்லாந்துக்கு எதிரான போர்ச்சுகலின் ஐரோப்பிய சாம்பியன்ஷிப் தகுதிச் சுற்றில் விளையாடியதன் மூலம் கிறிஸ்டியானோ ரொனால்டோ 200 சர்வதேச போட்டிகளில் விளையாடிய முதல் கால்பந்து வீரர் என்ற சாதனையை பெற்றுள்ளார்.
- 2003 ஆம் ஆண்டு சர்வதேச அரங்கில் அறிமுகமான இவர் 200 சர்வதேச போட்டிகளில் விளையாடிய முதல் கால்பந்து வீரர் மற்றும்

சர்வதேச அளவில் அதிக கோல் அடித்தவர் என்ற சாதனையும் படைத்துள்ளார்.

### இந்தியப் பெண்கள் அணியானது 31 ரன்கள் வித்தியாசத்தில் வங்கதேசத்தை வீழ்த்தி ஆசிய கோப்பையை வென்றுள்ளது.



- ஜூன் 21 அன்று நடைபெற்ற இறுதிப் போட்டியில் வங்கதேசத்தை 31 ரன்கள் வித்தியாசத்தில் இந்திய அணி வென்றதன் மூலம், 23 வயதுக்குட்பட்டோருக்கான மகளிர் ஆசியக் கோப்பை டி20 பட்டத்தை இந்தியா யு-23 அணி பெற்றுள்ளது.
- இந்த வெற்றியின் மூலம் மகளிருக்கான இந்திய அணியானது உலக அரங்கிற்கு தங்களது திறமையை காட்டியுள்ளது.

### ராயன் ரஸ்மி ஆசிய யு-21 ஸ்னூக்கர் சாம்பியன்ஷிப் போட்டியில் வெண்கலம் வென்றுள்ளார்.

- ஈரானின் தலைநகராமான தெஹ்ரானில் நடைபெற்ற 21 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய ஸ்னூக்கர் சாம்பியன்ஷிப் அரையிறுதி போட்டியில் ஈரானின் வீரரான மிலாட் பவுராலி தரேச்சியிடம் 3-4 என்ற கணக்கில் தோல்வியடைந்து இந்திய அணியின் ராயன் ரஸ்மி வெண்கலப் பதக்கத்துடன் வெளியேறினார்.
- 2023ஆம் ஆண்டுக்கான இந்த சாம்பியன்ஷிப் போட்டியில் பாகிஸ்தானின் அஹ்சன் ரம்ஜான் 5-2 என்ற கணக்கில் அபார வெற்றியைப் பதிவு செய்து ஆசிய ஸ்னூக்கர் சாம்பியன் பட்டத்தை வென்றுள்ளார்

### சிறப்பு ஒலிம்பிக் விளையாட்டு போட்டியில் நீச்சல் பிரிவில் இந்தியாவிற்கான முதல் தங்கப் பதக்கத்தை மாதவ் மதன் பெற்றுத் தந்துள்ளார்.

- ஜெர்மனியின் பெர்லினில் நடைபெற்ற சிறப்பு ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியில் மாதவ் மதன் என்ற வீரர் நீச்சல் பிரிவில் 00:18.26 வினாடிகளில் முடித்து நாட்டின் முதல் தங்கப் பதக்கத்தைப் பெற்று தந்துள்ளார்.
- இந்தப் போட்டியில் மாதவ் மதன் தங்கப்பதக்கத்தையும் மற்றொரு இந்திய வீரர் கிரித்பாய் சங்கர்பாய் சவுகான் வெண்கலப் பதக்கத்தையும் வென்று இந்தியாவின் பதக்க எண்ணிக்கையை அதிகரிக்க உதவினார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

### இத்தாலியில் நடைபெற்ற ISSF உலகக் கோப்பை சிறு துப்பாக்கி போட்டியில் இந்திய வீரர் வெண்கலப் பதக்கம் வென்றுள்ளார்.



- ஜூலை 16 அன்று இத்தாலியின் லோனாடோவில் நடைபெற்ற ISSF உலகக் கோப்பை சிறு துப்பாக்கி 2023 – ஆடவர் போட்டியில் இந்திய துப்பாக்கி சுடுதல் வீரர் பிருத்விராஜ் தொண்டைமான் வெண்கலப் பதக்கம் வென்றுள்ளார்.
- பிருத்வியின் இந்த வெண்கலம் தான் லோனாட்டோ துப்பாக்கிச் சுடுதல் போட்டியில் இந்தியாவுக்கு கிடைத்த ஒரேப் பதக்கம் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இந்த இறுதி போட்டியில் இங்கிலாந்தின் நாதன் ஹேல்ஸ்(முதல்) 49 புள்ளிகளுடன் தங்கப் பதக்கத்தையும், சீனக் குடியரசின் குய் யிங்(இரண்டாவது) 48 புள்ளிகளுடன் வெள்ளிப் பதக்கத்தையும் வென்றுள்ளனர்.

### ISSF இளையோருக்கான உலக சாம்பியன்ஷிப் போட்டியில் இந்திய துப்பாக்கித் சுடும் வீரர்கள் தங்கப் பதக்கம் வென்றுள்ளனர்.



- ஜூலை 16 அன்று நடைபெற்ற 2023 ஆம் ஆண்டுக்கான ISSF இளையோர் உலக சாம்பியன்ஷிப் போட்டியில் 10 மீட்டர் ஏர் பிஸ்டல் ஆண்கள் மற்றும் பெண்களுக்கான பிரிவுகளில் துப்பாக்கி சுடும் வீரர்களான ஷூபம் பிஸ்லா மற்றும் சைன்யம் ஆகியோர் இந்தியாவிற்காக தங்கப் பதக்கங்களை வென்றுள்ளனர்.
- ISSF இளையோர் உலக சாம்பியன்ஷிப் போட்டிகள், கொரியா குடியரசின் சாங்வான்

பகுதியில் நடைப்பெற்ற வருகின்றன. மேலும் இந்தியா இரண்டு தங்கப் பதக்கங்களுடன் பதக்கப் பட்டியலில் முதலிடத்தில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## அல்காரஸ் ஜோகோவிச்சை வீழ்த்தி தனது முதல் விம்பிள்டன் பட்டத்தை வென்றுள்ளார்.



- ஏழு முறை சாம்பியனான செர்பியாவின் நோவக் ஜோகோவிச்சை ஜூலை 16 அன்று தோற்கடித்து, தனது முதல் விம்பிள்டன் பட்டத்தை ஸ்பெயினின் கார்லோஸ் அல்கராஸ் வென்று சாதனை படைத்து 24வது கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை வென்றுள்ளார்.
- உலகின் முதல் நிலை வீரரான அல்கராஸ் 1-6, 7-6 (8/6), 6-1, 3-6, 6-4 என்ற புள்ளிகளுடன் நான்கு மணி நேரம் 42 நிமிடங்களுக்குப் பிறகு வெற்றியை பெற்றுள்ளார். கடந்த ஆண்டு அவர் யுஎஸ் ஓபன் பட்டத்தைத் தொடர்ந்து 20 வயதான ஸ்பானியருக்கு இந்த வெற்றியானது இரண்டாவது பெரிய வெற்றியாகும்.

# விருதுகள்

## RINL நிறுவனத்திற்கு மதிப்புமிக்க "கிரீன்டெக் பாதுகாப்பு விருது 2023" வழங்கப்பட்டுள்ளது.

- RINLநிறுவனமானது 2022-23 ஆம் ஆண்டிற்கான பணியிடப் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கான முயற்சியில் சிறந்த பங்களிப்பு அளித்ததை சிறப்பிக்கும் வகையில் பாதுகாப்புச் சிறப்புப் பிரிவின் கீழ் மதிப்புமிக்க "கிரீன்டெக் பாதுகாப்பு விருது 2023" ஐப் பெற்றுள்ளது.
- இந்த விருதை RINL நிறுவனத்தின் சார்பாக அந்நிறுவனத்தின் கூடுதல் பொறுப்பு இயக்குநர் ஸ்ரீ எ.கே பக்ச்சி, அசாம் மாநிலத்தின் முன்னாள் ஆளுநரான ஸ்ரீ ஜகதீஷ் முகியிடமிருந்து 21ஆவது வருடாந்திர கிரீன்டெக் விருதுகள் வழங்கும் விழாவில் மே 30 அன்று பெற்றுள்ளார்.

## இந்திய குடியரசு தலைவர் திரௌபதி முர்முவுக்கு சுரினாம் நாட்டின் உயரிய சிவிலியன் விருது வழங்கப்பட்டுள்ளது.



- சுரினாம் நாட்டின் தலைநகரான பரமரிபோவில், இந்திய குடியரசு தலைவர் திரௌபதி முர்முவுக்கு, நாட்டின் உயரிய சிவிலியன் கவுரவ விருது – "The Grand Order of the Chain of the Yellow Star" வழங்கப்பட்டுள்ளது.
- சுரினாம் குடியரசுத் தலைவர் சந்திரிகாபெர்சாத் சந்தோகி இந்த உயரிய விருதை நம் நாட்டின் குடியரசு தலைவருக்கு வழங்கி கௌரவப்படுத்தினார் மற்றும் இந்த விருதைப் பெறும் முதல் இந்திய குடியரசு தலைவர் திரௌபதி முர்மு என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## வாழ்நாள் சாதனைக்கான ஐரோப்பிய கட்டுரை பரிசை இந்திய எழுத்தாளர் பெற்றுள்ளார்.

- புகழ்பெற்ற இந்திய எழுத்தாளர் அருந்ததி ராய் அவர்களுக்கு வாழ்நாள் சாதனைக்கான "45வது ஐரோப்பிய கட்டுரை பரிசை" சார்லஸ் வெய்லன் அறக்கட்டளை அறிவித்துள்ளது.
- அருந்ததி ராய் 2021இல் "ஆசாதி" என்ற தலைப்பில் எழுதிய கட்டுரைகளின் பிரெஞ்சு மொழிபெயர்ப்பிற்காக இந்த பரிசு வழங்கப்பட்டுள்ளதாக வெய்லன் அறக்கட்டளை தெரிவித்துள்ளது.

## விஸ்தாரா – தொடர்ந்து மூன்றாவது முறையாக 'இந்தியா மற்றும் தெற்காசியாவின் சிறந்த விமான நிறுவனத்திற்கான' விருதைப் பெற்றுள்ளது.

- சர்வதேச ஸ்கைட்ராக்ஸ் நிறுவனத்தின் 2023 ஆம் ஆண்டுக்கான உலக விமான போக்குவரத்துக்கான விருதுகளில் கடந்த ஆண்டை விட நான்கு இடங்கள் முன்னேறி உலகளவில் 16வது இடத்தை விஸ்தாரா பிடித்துள்ளது.
- டாடா சன்ஸ் மற்றும் சிங்கப்பூர் ஏர்லைன்ஸின் கூட்டு முயற்சியால் கட்டமைக்கப்பட்ட இந்த விஸ்தாரா நிறுவனமானது, தொடர்ந்து மூன்றாவது முறையாக 'இந்தியா மற்றும் தெற்காசியாவின் சிறந்த விமான நிறுவனத்திற்கான' விருதை பெற்றுள்ளது என்பது இந்தியாவின் விமான போக்குவரத்து துறையின் சிறப்பை உலக அரங்கிற்கு எடுத்து காட்டுகிறது.

## தேசிய புளோரன்ஸ் நைட்டிங்கேல் விருதுகளானது இந்திய குடியரசு தலைவர் முர்மு அவர்களால் வழங்கப்பட்டுள்ளது.



- 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டிற்கான இராணுவ செவிலியர் சேவையை போற்றுவதற்காக பிரிகேடியர் அமிதா தேவ்ராணி மற்றும் மேஜர் ஜெனரல் ஸ்மிதா தேவ்ராணி ஆகியோருக்கு இந்திய நாட்டின் குடியரசு தலைவர் திரௌபதி முர்மு "கைவிளக்கேந்திய காரிகை" என்று போற்றப்படும் தேசிய புளோரன்ஸ் நைட்டிங்கேல் விருதுகளை வழங்கியுள்ளார். இந்த விருதானது கிட்டத்தட்ட 30 செவிலியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.
- இந்த விருதானது 1973 ஆம் ஆண்டு சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்தால் நிறுவப்பட்டது மற்றும் செவிலியர்கள்

மற்றும் நர்சிங் வல்லுநர்கள் சமூகம் ஆற்றிய சிறந்த சேவைகளை போற்றுதல் மற்றும் அங்கீகரிப்பதற்காக இந்த விருதுகளானது வழங்கப்படுகிறது.

## பெண்களின் சில சிறப்புமிக்க பணிகளுக்காக உயரிய விருதுகளானது வழங்கப்பட்டுள்ளது.

- மகாராஷ்டிராவின் புனேவில் உள்ள ஸ்வாச் வேஸ்ட் பிக்கர் கூட்டுறவு நிறுவனத்தின் இணை நிறுவனரான லக்ஷ்மி நாராயணனுக்கு, தனது அமைப்பின் மூலம் சமூகத்தில் நல்ல மற்றும் நேர்மறையான மாற்றத்தை ஏற்படுத்தியதற்காக யஷஸ்வினி சமூக ஆர்வலர் விருதானது வழங்கப்பட்டது.
- சாங்லியைச் சேர்ந்த டாக்டர் சுனிதா போர்டே அவர்களுக்கு, கதைகள் சுருக்கங்கள் மற்றும் நாவல்களில் தனது இலக்கியத் திறனுக்காக மதிப்புமிக்க யஷஸ்வினி சாகித்ய இலக்கிய விருதைப் பெற்றுள்ளார்.

## பல்வேறு புலமைக்காக சாகித்ய அகாடமி விருதுகளானது வழங்கப்பட்டுள்ளது.

- சாகித்ய அகாடமி அமைப்பானது ஜூன் 24 அன்று இந்த ஆண்டுக்கான தனது பால் சாகித்ய புரஸ்கார் விருது பெற்ற 22 பேர் மற்றும் யுவ புரஸ்கார் விருது பெற்ற 20 பேரின் பட்டியலை அறிவித்துள்ளது.
- ஹிந்தி மொழிப் பிரிவில், சூர்யநாத் சிங் தனது ‘கொடுக் ஆப்‘ என்ற சிறுகதைத் தொகுப்பிற்காக பால் சாகித்ய புரஸ்கார் விருதும் மராத்தி மொழியில், ஏக்நாத் அவ்ஹாத் தனது ‘சந்த் தேய் ஆனந்த்‘ படத்திற்காக பால் சாகித்ய புரஸ்கார் விருதும் வழங்கப்பட்டுள்ளது.

## அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்துக்கு சிறந்த மாநில பல்கலைக்கழக விருதானது வழங்கப்பட்டுள்ளது.

- தமிழ் நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்துக்கு சிறந்த மாநில பல்கலைக்கழக விருதை தமிழக பால்வளத்துறை அமைச்சர் டி. மனோ தங்கராஜ் ஜூன் 23 அன்று வழங்கியுள்ளார்.
- சென்னை கிண்டியில், தொழில் மற்றும் வர்த்தக சங்கக் கூட்டமைப்பானது மிகப்பெரிய செய்தி தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் நிறுவனத்துடன் இணைந்து தமிழ்நாடு உயர்கல்வியின் உச்சி மாநாட்டில் இந்த விருதானது வழங்கப்பட்டுள்ளது.

## கிரேட்டா விக்ரேதா கௌரவ் சம்மான் சமரோஹ் 2023 விருதை வென்றுள்ளது.

- மத்திய சுகாதார அமைச்சகத்தின் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறைக்கு FY22-23 இல் “அதிக ஒற்றை ஏல கொள்முதல்” பிரிவில் ஜூன் 26 அன்று கிரேட்டா விக்ரேதா கௌரவ் சம்மான் சமரோஹ் 2023 விருதானது வழங்கப்பட்டுள்ளது.
- இந்த விருது வழங்கும் நிகழ்ச்சியை வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் அரசு இ-மார்க்கெட்ப்ளேஸ் தொகுப்பானது ஏற்பாடு செய்துள்ளது. மேலும் சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகமானது மேக் இன் இந்தியா திட்டத்தை செயல்படுத்துவதில் முன்னணியில் உள்ளது என்றும் அந்த நிகழ்ச்சியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## REC நிறுவனத்திற்கு GeM மூலம் கோல்டன் விருது வழங்கப்பட்டுள்ளது.



- சமீபத்தில் புது டெல்லி வனிஜ்யா பவனில் நடைபெற்ற ‘க்ரேட்டா-விக்ரேதா கௌரவ் சம்மான் சமரோ’ நிகழ்ச்சியில், 2022-23 நிதியாண்டிற்க்கான ‘அதிக ஒற்றை ஏலக் கொள்முதல்’ பிரிவில், REC லிமிடெட் நிறுவனமானது GeM (அரசு இ-மார்க்கெட்பிளேஸ்) மூலம் கோல்டன் விருதைப் பெற்றுள்ளது.
- இந்த கோல்டன் விருதானது வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் மாண்புமிகு ஸ்ரீ பியூஷ் கோயல் அவர்களால் வழங்கப்பட்டுள்ளது.

## ராண்ட் கிராஸ் ஆஃப் தி லீஜியன் ஆஃப் ஹானர் விருது

பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரானால் , பிரான்சின் உயரிய சிவிலியன் மற்றும் ராணுவ கவுரவமான கிராண்ட் கிராஸ் ஆஃப் தி லீஜியன் ஆஃப் ஹானர் விருதை பெற்ற முதல் இந்திய பிரதமர் என்ற பெருமையை பிரதமர் நரேந்திர மோடி பெற்றுள்ளார் .

மேலும் தென்னாப்பிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலா, கிங் சார்லஸ்

- அப்போதைய வேல்ஸ் இளவரசர், முன்னாள் அதிபர் போன்ற முக்கிய உலகத் தலைவர்களின் வரிசையில் சேர்ந்தார். ஜேர்மனி ஏஞ்சலா மெர்க்கல், பௌட்ரோஸ் பூட்ரோஸ்-காலி, ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் பொதுச் செயலாளர் உள்ளிட்டோர் அடங்குவர்.

SIVARAJAVEL IAS ACADEMY

# அறிக்கைகள்

## உணவுப் பாதுகாப்புக் குறியீடு 2022-23 இல் ஜம்மு & காஷ்மீர் முதல் இடத்தைத் தொடர்ந்து மூன்றாவது முறையாக பெற்றுள்ளது.

- இந்த ஆண்டுக்கான உணவுப் பாதுகாப்புக் குறியீட்டில் யூனியன் பிரதேசம் (UT) பிரிவில் ஜம்மு மற்றும் காஷ்மீர் ஆனது, முதல் இடத்தைப் பிடித்துள்ளது என்பது ஒரு குறிப்பிடத்தக்க சாதனையாக பார்க்கப்படுகிறது.
- ஜம்மு மற்றும் காஷ்மீர் ஆனது 2021 மற்றும் 2022ஐ தொடர்ந்து 2023 ஆம் ஆண்டிலும் தொடர்ச்சியாக மூன்றாவது விருதைப் பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். அதே சமயத்தில் நாட்டிலேயே அதிகபட்சமாக Eat Right Mela மாவட்டங்களைக் கொண்ட பகுதியில் ஜம்மு மற்றும் காஷ்மீர் ஆனது முதல் பரிசை வென்றுள்ளது.

## NIRF 2023 தரவரிசை வெளியிடப்பட்டுள்ளது.




- 2023 ஆம் ஆண்டிற்கான தேசிய நிறுவனங்கள் கட்டமைப்பின் (NIRF) தரவரிசையை மத்திய கல்வி அமைச்சகமானது ஜூன்5 அன்று வெளியிட்டுள்ளது.
- இந்திய தொழில்நுட்பக் கழகம் (IIT) மெட்ராஸ் ஒட்டுமொத்தப் பிரிவின் கீழ் சிறந்தக் கல்வி நிறுவனமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. பெங்களூருவில் உள்ள இந்திய ஆராய்ச்சி நிறுவனம்(IISC) இரண்டாவது இடத்தையும், IIT டெல்லி மூன்றாவது இடத்தையும் பெற்றுள்ளது.

## மாசடைந்த நாடுகள் பட்டியலில் இந்தியா 4வது இடத்தில் உள்ளது

- ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தின் ஜூன் 2023 தரவுகளின்படி, நேபாளம் நாடானது உலகிலேயே மிகவும் மாசடைந்த நாடுகள் பட்டியலில் முதலிடத்தில் உள்ளது. உலகில் மிகவும் “மோசமாக மாசடைந்த நாடுகள்” பட்டியலில் இந்தியாவுக்கு 4வது இடம் வழங்கப்பட்டுள்ளது.
- இந்த அறிவிக்கை தெற்காசியாவில் வசிப்பவர்கள் ஒரு நாளைக்கு சராசரியாக “ஒரு கன மீட்டருக்கு 99.73 மைக்ரோ கிராம்” நுண்துகள்களை சுவாசிப்பதாக தெரிவித்துள்ளது. இது வழக்கமான அளவை விட “20 மடங்கு அதிகம்” என்பது குறிப்பிடத்தக்கதாகும்.
- டிஜிட்டல் பணப் பரிவர்த்தனைகளின் உலக தரவரிசையில் இந்தியா முதலிடம்.
- MyGov India இன் சமீபத்திய தரவுகளின்படி, 2022 ஆம் ஆண்டளவில் “89.5 மில்லியன் டிஜிட்டல் பரிவர்த்தனைகளுடன்” ஐந்து டிஜிட்டல் கட்டண நாடுகளின் பட்டியலில் இந்தியா முதலிடத்தில் உள்ளது.
- இந்த தரவுகளின்படி, 2022 ஆம் ஆண்டில், உலகளாவிய நிகழ்நேர டிஜிட்டல் பரிவர்த்தனைகளில் 46 சதவீதத்தை இந்தியா கொண்டுள்ளது. இந்த சதவீதமானது மற்ற நான்கு முன்னணி நாடுகளை விட இந்தியாவில் டிஜிட்டல் கட்டண பரிவர்த்தனைகள் அதிகமாகும் என MyGov India தனது அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளது.

## ஜம்மு மாவட்டமானது ஜம்மு காஷ்மீரின் மாவட்ட நல்லாட்சி குறியீட்டில் முதலிடத்தில் உள்ளது.

- ஜம்மு மற்றும் காஷ்மீர் மாநிலத்தில் ஜம்மு மாவட்டமானது 10க்கு 6.37 மதிப்பெண்கள் பெற்று மாவட்ட நல்லாட்சி குறியீட்டின் தரவரிசையில் முதலிடத்தைப் பிடித்துள்ளது.
- விவசாயம் உள்ளிட்ட 10 துறைகளில் 58 குறிகாட்டிகளைக் கொண்டு இந்த குறியீட்டை DGGI கணக்கீட்டுள்ளது. இந்த மாவட்ட நல்லாட்சி குறியீட்டின் 3வது பதிப்பை தலைமைச் செயலாளர் டாக்டர் அருண் குமார் மேத்தா ஜூன் 16 அன்று வெளியீட்டுள்ளார்.

## 2023 ஆம் ஆண்டிற்கான உலகின் மிகவும் சிறப்பாக வாழக்கூடிய நகரங்களின் தரவரிசை பட்டியலில் “வியன்னா” முதலிடம் பிடித்துள்ளது.

- 2023 ஆம் ஆண்டிற்கான உலகின் மிகவும் சிறப்பாக வாழக்கூடிய நகரங்களின் தரவரிசை பட்டியலானது ஜூன் 21 அன்று பொருளாதார புலனாய்வு பிரிவு (EIU) ஆல் வெளியிடப்பட்டது, இந்த பட்டியலில் ஆஸ்திரியாவின் வியன்னா முதலிடத்தை பெற்றுள்ளது.
- இந்த பட்டியலானது உலகெங்கிலும் உள்ள 173 நகரங்களின் கல்வி, சுகாதாரப் பாதுகாப்பு,

நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மை, சுற்றுச்சூழல் மற்றும் உள்கட்டமைப்பு உள்ளிட்ட பல குறிப்பிடத்தக்க காரணிகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும் இதில் பல ஆண்டுகளாக வியன்னா முதல் இடத்தைப் பிடித்துள்ளது அதை தொடர்ந்து டென்மார்க்கில் உள்ள கோபன்ஹேகன், மெல்போர்ன் மற்றும் சிட்னி ஆகிய நகரங்கள் 2வது, 3வது மற்றும் 4வது இடங்களில் உள்ளன.

## உலகில் வாழத் தகுதியற்ற நகரங்களில் 7வது இடத்தில் டாக்கா உள்ளது.

- பொருளாதார புலனாய்வு பிரிவு(EIU) சமீபத்தில் வெளியிட்ட உலகளாவிய வாழ்வாதாரக் குறியீடு 2023 இன் படி, டாக்கா நகரமானது தொடர்ந்து இரண்டாவது முறையாக உலகின் 7வது குறைந்த மக்கள் வாழக்கூடிய நகரமாக அதாவது உலகில் வாழத் தகுதியற்ற நகரங்களில் டாக்கா 7வது இடத்தில் உள்ளது.
- இந்த பட்டியலானது உலகெங்கிலும் உள்ள 173 நகரங்களின் கல்வி, சுகாதாரப் பாதுகாப்பு, நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மை, சுற்றுச்சூழல் மற்றும் உள்கட்டமைப்பு உள்ளிட்ட பல குறிப்பிடத்தக்க காரணிகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது. இதில் 166 ஆவது இடத்தை டாக்கா பிடித்துள்ளது.

## கியூஎஸ் உலக பல்கலைக்கழக தரவரிசையில் ஐ.ஐ.டி பம்பாய் உலகளவில் 149 வது இடத்தை வகிக்கிறது.

- QS (Quacquarelli Symonds) உலக பல்கலைக்கழக தரவரிசையின்படி, IIT பம்பாய் ஆனது இந்தியாவில் முதலாவது இடத்தையும், உலகளவில் 149வது இடத்தையும் பிடித்துள்ளது.
- கடந்த ஆண்டு 172வது இடத்தில் இருந்த இந்நிறுவனம், இந்த ஆண்டு 149வது இடத்திற்கு முன்னேறியுள்ளது குறிப்பிடத்தக்கது

## ஆற்றல் மாற்றக் குறியீட்டில் இந்தியாவிற்கு உலகளவில் 67 வது இடம்.

- உலகப் பொருளாதார மன்றத்தால் ஜூன் 28 அன்று வெளியிடப்பட்ட அதன் ஆற்றல் மாற்றக் குறியீட்டில் இந்தியாவானது உலகளவில் 67 வது இடத்தில் தரவரிசைப்படுத்தபட்டுள்ளது. மேலும் இந்தியாவை அனைத்து பரிமாணங்களிலும் ஆற்றல் மாற்ற வேகம் கொண்ட ஒரே பெரிய பொருளாதாரம் என்று குறிப்பிட்டுள்ளது.
- 120 நாடுகளைக் கொண்ட இந்த பட்டியலில் ஸ்வீடன் ஆனது முதலிடத்திலும், டென்மார்க், நார்வே, பின்லாந்து, சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகள் அடுத்தடுத்த அதாவது முதல் ஐந்து இடங்களைப் பிடித்துள்ளன.

# முக்கிய தினங்கள்

## உலகப் பெருங்கடல் தினம் 2023




- கடல் மற்றும் பெருங்கடலின் முக்கியத்துவம் மற்றும் அதை பாதுகாக்கும் வழிகள் பற்றிய விழிப்புணர்வை உலகம் முழுவதும் உள்ள மக்களிடையே ஏற்படுத்த ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 8 அன்று உலகப் பெருங்கடல் தினமானது கடைபிடிக்கப்படுகிறது.
- இந்த தினமானது 2008 இல் ஐக்கிய நாடுகள் பொது சபையால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. 'Planet Ocean: Tides are Changing' என்பது இந்த ஆண்டுக்கான கருப்பொருளாகும்.

## உலக மூளைக் கட்டி தினம் 2023




- உலகின் ஆபத்தான நோய்களில் ஒன்றான மூளைக் கட்டி நோயைப் பற்றி தனிநபர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த ஆண்டுதோறும் ஜூன் 8 அன்று உலக மூளைக் கட்டி தினமானது கடைப்பிடிக்கப்படுகிறது. மூளையைச் சுற்றி வளரும் அசாதாரண வளர்ச்சியானது மூளைக் கட்டி எனப்படுகிறது

## .குழந்தை தொழிலாளர் தடுப்பு தினம் 2023




- குழந்தைகள் கடினமான மற்றும் போக்கற்ற தொழில்களில் ஈடுபடும் அவல நிலையை உலகிற்கு எடுத்துரைப்பதற்காகவும் குழந்தைத் தொழிலாளர்களுக்கு எதிரான உலகளாவிய இயக்கத்திற்கு ஒரு ஊக்கியாக மக்களின் செயல்பாடுகளை ஒன்றிணைப்பதற்காகவும் குழந்தை தொழிலாளர் தடுப்பு தினமானது ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 12 அன்று அனுசரிக்கப்படுகிறது.
- இந்த தினமானது முதன்முதலில் சர்வதேச தொழிலாளர் அமைப்பால் (ILO) 2002 ஆம் ஆண்டில் அனுசரிக்கப்பட்டது. Social Justice for All. End Child Labour! என்பது இத்தினத்தில் இந்த ஆண்டிற்க்கான கருப்பொருளாகும்.

## உலக இரத்த கொடையாளர் தினம் 2023




- தானாக முன்வந்து இரத்த தானம் செய்பவர்களின் தன்னலமற்ற செயல்களுக்கு மதிப்பளிக்கவும், உலகில் இரத்த தட்டுப்பாட்டை மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தவும் ஒவ்வொரு ஆண்டும் உலக இரத்த கொடையாளர் தினமானது ஜூன் 14இல் கடைபிடிக்கப்படுகிறது.
- இந்த தினமானது அதிகாரப்பூர்வமாக 2005 இல் உலக சுகாதார அமைப்பால் முதன்முதலில் கொண்டாடப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் கடைப்பிடிக்கப்படுகிறது. Give blood, give plasma, share life, share often என்பது இந்த ஆண்டிற்க்கான

கருப்பொருளாகும்.

## முதியோர் வன்கொடுமை விழிப்புணர்வு தினம் 2023




- மன, உடல் மற்றும் உணர்ச்சி ரீதியான வன்கொடுமை ஆகியவற்றிலிருந்து முதியோர்களை பாதுகாப்பதை நோக்கமாக கொண்டு ஒவ்வொரு ஆண்டும் முதியோர் வன்கொடுமை விழிப்புணர்வு தினமானது ஜூன் 15 அன்று அனுசரிக்கப்பதுகிறது. மேலும் இந்த தினமானது 2011 இல் ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையால் அதிகாரப்பூர்வமாக நிறுவப்பட்ட தினமாகும்.
- வட்டத்தை மூடுதல்: முதியோர் கொள்கை, சட்டம் மற்றும் சாட்சிய அடிப்படையிலான பதில்களில் பாலின அடிப்படையிலான வன்முறையை (GBV) நிவர்த்தி செய்தல்(Closing the Circle: Addressing Gender-Based Violence (GBV) in Older Age Policy, Law, and Evidence-based Responses) என்பது இந்த ஆண்டிற்கான கருப்பொருளாகும்.

## பாலைவனமாதல் மற்றும் வறட்சியை எதிர்ப்பதற்கான உலக தினம் 2023

- பல்வேறு இடங்களானது பாலைவனமாக்குதலை தடுப்பதற்கான சர்வதேச முயற்சிகள் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இந்த பாலைவனமாக்கல் மற்றும் வறட்சியை எதிர்த்துப் போராடுவதற்கான உலக தினமானது ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 17 அன்று அனுசரிக்கப்படுகிறது.
- "அவளுடைய நிலம். அவளுடைய உரிமைகள்" (Her Land. Her Rights) என்பது இந்த ஆண்டுக்கான கருப்பொருளாகும்

## ஆட்டிஸ்டிக் பெருமை தினம் 2023.




- ஆட்டிசம் ஸ்பெக்ட்ரம் கோளாறு பற்றிய விழிப்புணர்வை பொது மக்களிடையே ஏற்படுத்தவும், இந்த நோயினால் பிறந்தவர்களுக்கு எதிரான பாகுபாட்டை நிறுத்துவதன் அவசியத்தை உலகிற்கு புரியவைக்கவும் ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 18 ஆம் நாள் "ஆட்டிஸ்டிக் பெருமை தினமாக" அனுசரிக்கப்படுகிறது.
- "கதையை மாற்றுதல்: வீட்டில், வேலையில், கலைகளில் மற்றும் கொள்கை வகுப்பில் பங்களிப்புகள்"(Changing the Narrative: Contributions at Home, at Work, in the Arts and in Policymaking) என்பது இந்த ஆண்டிற்கான கருப்பொருளாகும்.

## உலக அகதிகள் தினம் 2023

- மோதல் மற்றும் துன்புறுத்தலுக்குப் பிறகு அகதிகளின் பாதுகாப்பை வலுப்படுத்துவது மற்றும் அவர்களின் வாழ்க்கையை மறுதொடக்கம் செய்வதில் அவர்களுக்கு ஆதரவளிப்பு முயற்சியை உலகிற்கு எடுத்துரைப்பதாக ஒவ்வொரு ஆண்டும் ஜூன்20 அன்று உலக அகதிகள் தினமானது கடைபிடிக்கப்படுகிறது.
- hope away from home என்பது இந்த ஆண்டிற்க்கான கருப்பொருளாகும்.

## 9வது சர்வதேச யோகா தினம்-2023




- ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை (UNGA) 2015ஆம் ஆண்டு முதல் ஜூன் 21ஆம் தேதியை சர்வதேச யோகா தினமாகக் கொண்டாடி வருகிறது.
- நியூயார்க்கில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகத்தில் நடைபெறும் யோகா தின நிகழ்ச்சிக்கு பிரதமர் நரேந்திர மோடி தலைமை தாங்குகிறார்
- 2023ஆம் ஆண்டின் கருப்பொருள் – "Yoga For Vasudhaiva Kutumbakam'.

## உலக நீர் வரைவியல் தினம் 2023

- நீர் வரைவியல் பற்றிய புரிதல் மற்றும் விழிப்புணர்வை மக்களுக்கிடையே ஏற்படுத்தவும் ஆறுகள், ஏரிகள், கடல்கள் மற்றும் பெருங்கடல்கள் பற்றிய மேம்பட்ட படிப்பில் இந்த ஹைட்ரோகிராஃபி பிரிவின் முக்கியத்துவத்தையும் போற்றுவதற்காக உலக நீர் வரைவியல் தினமானது ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 21 அன்று கடைபிடிக்கப்படுகிறது.
- "ஹைட்ரோகிராஃபி – கடலின் டிஜிட்டல் இரட்டைக்கு அடிகோலுகிறது" என்பது இந்த ஆண்டிற்க்கான கருப்பொருளாகும்.

## சர்வதேச ஒலிம்பிக் தினம் 2023




- 1894 ஆம் ஆண்டு ஜூன் 23 ஆம் தேதி பாரிஸில் உள்ள சோர்போனில், சர்வதேச ஒலிம்பிக் ஆணையமானது நிறுவப்பட்டதை நினைவுக்கூறும் வகையில் சர்வதேச ஒலிம்பிக் தினமானது ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 23 அன்று உலகம் முழுவதும் கடைப்பிடிக்கப்படுகிறது.
- 'நாம் போகலாம்' (LET'S MOVE) என்பது இந்த ஆண்டிற்கான ஒலிம்பிக் தினத்தின் கருப்பொருள் ஆகும். இது உலகெங்கிலும் உள்ள மக்களை தினசரி உடல் செயல்பாடுகளுக்கு நேரம் ஒதுக்குவதை நோக்கமாகக் கொண்டு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

## ஐக்கிய நாடுகளின் பொது சேவை தினம் 2023





- டிசம்பர் 20, 2002 அன்று, ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையானது 57/277 என்ற தீர்மானத்தின் மூலமும் உலகில் பொது சேவையின் முக்கியத்துவத்தை வெளிக்கொணரவும் அதை உயர்த்தவும் ஜூன் 23 ஆம் நாளை பொது சேவை தினமாக அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.
- 2023 ஆம் ஆண்டுக்கான இந்த தினத்திற்கென்று ஒரு குறிப்பிட்ட கருப்பொருள் எதுவும் தேர்ந்தெடுக்கப்படவில்லை. இந்த நாளானது சமூகத்திற்கான பொது சேவையின் மதிப்பு மற்றும் நல்லொழுக்கத்தை மக்களுக்கு கொண்டு செல்கிறது.

## சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் தினம் 2023

- 2030 நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைவதில் இத்தகைய நிறுவனங்களின் மகத்தான பங்களிப்பைப் பற்றிய விழிப்புணர்வை உலக மக்களிடையே ஏற்படுத்த ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையானது ஜூன் 27 ஆம் தேதியை "சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில்கள் தினமாக" அறிவித்துள்ளது.
- "Future-ready MSMEs for India@100" என்பது இந்த ஆண்டிற்கான கருப்பொருளாகும்

## தேசிய புள்ளியியல் தினம் 2023




- புள்ளிவிவரங்கள் மற்றும் பொருளாதார திட்டமிடல் துறைகளில், பேராசிரியர் (காலமான) பிரசாந்தா சந்திர மஹலானோபிஸ் செய்த குறிப்பிடத்தக்க பங்களிப்புகளை நினைவு கூறுதல் மற்றும் அங்கீகரிக்கும் வகையில், இந்திய அரசாங்கமானது ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 29 ஆம் தேதியை தேசிய புள்ளிவிவர தினமாக கடைப்பிடிக்கிறது.
- "நிலையான வளர்ச்சி இலக்குகளை கண்காணிப்பதற்கான தேசிய காட்டி கட்டமைப்புடன் மாநில காட்டி கட்டமைப்பை சீரமைத்தல்" என்பது இந்த ஆண்டிற்க்கான புள்ளியியல் தினத்தின் கருப்பொருளாகும்.

## சர்வதேச வெப்ப மண்டல தினம் 2023




- வெப்ப மண்டலப் பகுதிகளானது எதிர்கொள்ளும் தனித்துவமான சவால்கள் மற்றும் வாய்ப்புகள் குறித்து உலகளவில் விழிப்புணர்வை ஏற்படுத்துதல் மற்றும் வெப்ப மண்டலத்தின் அசாதாரண வகைகளை ஏற்று கொண்டு அங்கீகரிப்பதற்காக சர்வதேச வெப்ப மண்டல தினமானது ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 29 அன்று அனுசரிக்கப்படுகிறது.
- இது வெப்பமண்டலங்களடங்கிய பகுதிகள் முழுவதும் முன்னேற்றத்தை எடுத்துசெல்வதற்கும் பிராந்தியத்தின் பன்முகத்தன்மை மற்றும் திறனை ஒப்புக்கொள்வதற்கும் இந்த நாளானது ஒரு வாய்ப்பை வழங்குகிறது.

# நியமனம்

## பர்மிங்காமின் முதல் இந்திய வம்சாவளி லார்ட் மேயர் நியமிக்கப்பட்டார்.

- பிரிட்டன் கவுன்சிலரான “சமன் லால்” பர்மிங்காமின் லார்ட் மேயராக பதவியேற்ற “முதல் பிரிட்டிஷ்-இந்திய சீக்கியர்” என்பது குறிப்பிடத்தகக்கதாகும்.
- பஞ்சாபின் ஹோஷியார்பூரில் பிறந்த இவர் 1964 இல் இங்கிலாந்திற்கு குடிபெயர்ந்து அரசியல்வாழ்வில் ஈடுப்பட்டு கவுன்சிலர் ஆனார்.

## மத்திய குடிமைப்பணி ஆணையத்தின் உறுப்பினராக திரு பித்யுத் பிஹாரி ஸ்வைன் பொறுப்பேற்பு

- மத்திய குடிமைப்பணி ஆணையத்தின் உறுப்பினராக திரு பித்யுத் பிஹாரி ஸ்வைன் ஜூன் 1ல் பொறுப்பேற்றுக்கொண்டார். அவருக்கு UPSC தலைவரான டாக்டர் மனோஜ் சோனி பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.
- கடந்த 2021-ஆம் ஆண்டு மத்திய குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்துறை அமைச்சக செயலாளராக பொறுப்பேற்ற பித்யுத் பிஹாரி ஸ்வைன், 2023 மே மாதம் வரையில் அப்பொறுப்பை வகித்துள்ளார்.

## உலக வானிலை அமைப்பின் (WMO) வரலாற்றில் முதல் பெண் தலைவராக அர்ஜென்டினாவைச் சேர்ந்த செலஸ்டே சாலோ நியமனம்.

- உலக வானிலை அமைப்பின் (WMO) வரலாற்றில் முதல் பெண் பொதுச் செயலாளராக அர்ஜென்டினாவைச் சேர்ந்த “செலஸ்டி சாலோ” நியமிக்கப்பட்டுள்ளார்.
- சமீபத்தில் ஜெனிவாவில் நடைபெற்ற “ஐ.நா காலநிலை மற்றும் வானிலை அமைப்பின்” தேர்தலில் காங்கிரஸில் சாலோ பெரும் வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றுள்ளார். சாலோ 2014 முதல் அர்ஜென்டினா நாட்டின் “தேசிய வானிலை சேவையின்” இயக்குநராக பணியாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

## இந்தியாவின் உளவு அமைப்பான “ரா”வின் தலைவராக ரவி சின்ஹா நியமனம்



- ஐபிஸ் அதிகாரி ரவி சின்ஹா இந்தியாவின் உளவு அமைப்பான “ரா” வின் தலைவராக நியமித்து அமைச்சரவையின் நியமனக் குழு ஒப்புதல் அளித்துள்ளது. இவர் தற்போது அமைச்சரவை செயலகத்தின் சிறப்பு செயலாளராக பணியாற்றி வருகிறார்.
- தற்போதைய “ரா“தலைவரான சமந்த் கோயல் ஜூன் 30 அன்று தனது நான்கு ஆண்டு காலப் பணியை நிறைவு செய்ய உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ரிசர்வ் வங்கியின் துணை ஆளுநராக சுவாமிநாதன் ஜானகிராமன் நியமனம்

- சுவாமிநாதன் ஜானகிராமன் இந்திய ரிசர்வ் வங்கியின் துணை ஆளுநராக 3 ஆண்டுகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.
- இன்று வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி,ஜானகிராமன் பெயரை அமைச்சரவையின் நியமனக் குழு அங்கீகரித்துள்ளது.
- ஜானகிராமன் தற்போது பாரத ஸ்டேட் வங்கியின் நிர்வாக இயக்குநராக பணியாற்றிவருகிறார்.

### தேசிய யோகா ஒலிம்பியாட் ஆனது மத்திய பிரதேசத்தில் ஏற்பாடு செய்ய திட்டம்.

- தேசிய யோகா ஒலிம்பியாட் ஆனது மத்திய பிரதேசத்தில் உள்ள ஜபல்பூரில் 9 வது சர்வதேச யோகாவின் முக்கிய மாநாட்டை ஜூன் 21 அன்று நடத்த மத்திய அரசானது திட்டமிட்டுள்ளது.
- இந்த தேசிய யோகா ஒலிம்பியாட் போட்டியை போபாலில் கவர்னர் மங்கு பாய் படேல் ஜூன் 18 அன்று தொடங்கி வைத்துள்ளார். மேலும் தேசிய யோகா ஒலிம்பியாட் ஆனது தேசிய தலைநகர் டெல்லிக்கு வெளியே நடத்துவது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

### கேரளா ஸ்டார்ட்-அப் திட்டத்தின் (KSUM) முதல் முடிவிலி மையம் துவக்கம்.

- கேரள முதல்வர் பினராயி விஜயன் ஜூன் 18 அன்று துபாயில் கேரளா ஸ்டார்ட் – அப் திட்டத்தின் (KSUM) முதல் முடிவிலி மையத்தைத் திறந்து வைத்துள்ளார்.
- புதிய ஸ்டார்ட் – அப் நிறுவனங்களின் மூலம் சுற்றுச்சூழல் அமைப்பை வலுப்படுத்துவதற்காக உலகம் முழுவதும் ஒரே இலக்குகளை அமைப்பதை நோக்கமாக கொண்டு இந்த மையமானது வடிவமைக்கப்பட்டுள்ளது.

### இந்தியா மற்றும் மாலத்தீவு இடையேயான கூட்டு ராணுவப் பயிற்சி தொடக்கம்.



- இந்திய ராணுவம் மற்றும் மாலத்தீவு தேசிய பாதுகாப்புப் படைகளுக்கு இடையேயான "எக்ஸ் எகுவெரின்" என்ற கூட்டு ராணுவப் பயிற்சியின் 12வது பதிப்பானது ஜூன்11, 2023 அன்று தொடங்கியுள்ளது.
- இந்த கூட்டு ராணுவப் பயிற்சியானது ஜூன் 11 முதல் 24 வரை உத்தரகண்ட் மாநிலத்தில் உள்ள சௌபதியாவில் நடைப்பெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஈகுவெரின் என்பது "நண்பர்கள்" எனப்பொருள்படும் நம்பகத்தன்மையான வார்த்தையை முதன்மையாக கொண்டு இந்த பயிற்சியானது இந்தியாவிலும் மாலத்தீவிலும் மாறி மாறி நடத்தப்படும் இருதரப்பு வருடாந்திர பயிற்சி என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

### ஆயுஷ் சுகாதார சேவைகள் மற்றும் ஆராய்ச்சிக்கான புதிய மையமானது கோவாவில் திறக்கப்பட்டுள்ளது.

மத்திய ஆயுஷ் அமைச்சகமானது கோவாவில் உள்ள ரிபந்தர் என்னும் பகுதியில் சுகாதார மற்றும் ஆயுஷ் ஆராய்ச்சி சேவைகளுக்காக ஒரு புதிய மையத்தை ஜூலை 2023 இல் தொடங்கியுள்ளது.

அம்மாநிலத்தில் உள்ள பொதுமக்களுக்கு உயர்தர சுகாதார சேவைகளை மலிவு விலையில் வழங்குவதையும், பாரம்பரிய மருத்துவத்தில் ஆராய்ச்சியை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு இந்த மையமானது தொடங்கப்பட்டுள்ளது என ஆயுஷ் அமைச்சகம் தெரிவித்துள்ளது. மேலும் ஒரு நூலகம், அருங்காட்சியகம் மற்றும் கடல் சார்ந்த மருந்துகளை ஆய்வு செய்வதற்காக இந்த ஆய்வகமானது தொடங்கப்பட்டுள்ளது.

SIVARAJAVEL
IAS ACADEMY

## உத்தரகாண்டின் ஹரேலா திருவிழாவானது தொடங்கியுள்ளது.

- இந்து நாட்காட்டியின் மாதமான ஷ்ரவணில் கொண்டாடப்படும் மழைக்காலத்தின் (பருவமழை) தொடக்கத்தைக் குறிப்பதற்காக இந்த ஷ்ரவன் ஹரேலா திருவிழாவானது கொண்டாடப்படுகிறது. ஹரேலா என்றால் பசுமை நாள் என்பதை குறிப்பதாகும்.
- மேலும் இந்த விழாவில் விவசாயிகள் தங்கள் வயல்களில் பாரம்பரிய விதைப்பு சுழற்சியை தொடங்குவார்கள். ஒவ்வொரு ஆண்டும் இது ஜூலை 16 மற்றும் 17 ஆம் நாட்களில் கொண்டாடப்படுகிறது.

# 2023 ஜூன் மாத வினா விடைகள்

1) சமீபத்தில் ____ மாவட்டத்தில் அமைந்துள்ள வெம்பக்கோட்டையில் தங்கத் தகடு மற்றும் தங்க ஆபரணம் கண்டுபிடிக்கப்பட்டது

A. திருநெல்வேலி

B. விருதுநகர்

C. விழுப்புரம்

D. திண்டுக்கல்

2) 1971 வங்காளதேச விடுதலைப் போருக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஒரு புதிய கேலரி எங்கு திறக்கப்பட்டது?

A. புது தில்லி

B. டாக்கா

C. கொல்கத்தா

D. மும்பை

3) இந்தியா-ஐரோப்பிய ஒன்றிய இணைப்பு உச்சி மாநாடு ____ இல் நடைபெற்றது

A. ஜம்மு காஷ்மீர்

B. புது தில்லி

C. லக்னோ

D. மேகாலயா

4) பின்வரும் அறிக்கைகளைக் கருத்தில் கொள்க

1) வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகத்தால் PM தெரு வியாபாரிகளின் ஆத்மா நிர்பர் நிதி (PM SVANidhi) தொடங்கப்பட்டது.

2) கோவிட்-19 லாக்டவுன் காரணமாக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள தங்கள் வாழ்வாதாரத்தை மீண்டும் தொடங்க தெரு வியாபாரிகளுக்கு மலிவு விலையில் வேலை மூலதனக் கடன்களை வழங்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

மேலே கொடுக்கப்பட்ட கூற்றுகளில் எது / எவை சரியானது/சரியானவை?

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

C) இரண்டு கூற்றுகளும் சரி

D) இரண்டு கூற்றுகளும் தவறு

5) பின்வரும் அறிக்கைகளைக் கருத்தில் கொள்க

1) இந்திய அளவில் இயற்கை எரிவாயு மற்றும் CBG துறையில் முதலீடு மற்றும் பங்களிப்பை மதிப்பிடுவதை கோபர்தன் நோக்கமாகக் கொண்டுள்ளது.

2) இந்தியாவில் CBG/இயற்கை எரிவாயு ஆலைகளை அமைப்பதற்கான செயல்முறையை நெறிப்படுத்த இது ஒரு வலை களஞ்சியமாக செயல்படும்.

மேலே கொடுக்கப்பட்ட கூற்றுகளில் எது/ எவை சரியானது/சரியானவை?

A. 1 மட்டும் சரி

B. 2 மட்டும் சரி

C. இரண்டு கூற்றுகளும் சரி

D. இரண்டு கூற்றுகளும் தவறு

6) கர்னாலி நதி __ என்றும் அழைக்கப்படுகிறது

A. ககாரா

B. காங்டாக்

C. கோசி

D. பிரம்மபுத்திரா

7) இந்தியா 2030 ஆம் ஆண்டளவில் ____ இன் மிகப்பெரிய ஏற்றுமதியாளராக இருக்கும்

A. ஐக்கிய அரபு எமிரேட்ஸ்

B. சவூதி அரேபியா

C. ஈரான்

D. இலங்கை

8) சிந்தன் ஷிவிர் ___ ஆல் செயல்படுத்தப்பட்டது

A. கலாச்சார அமைச்சகம்

B. ரயில்வே அமைச்சகம்

C. கல்வி அமைச்சகம்

D. நிதி அமைச்சகம்

9) இந்தியாவும் ____ பவளப்பாறை அடிப்படையிலான மேம்பாட்டுத் திட்டங்களும் (HICDP) தொடர்பான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.

A) மாருஷியஸ்

B) இந்தோனேசியா

C) பிஜி

D) மாலத்தீவுகள்

10) தேசிய போசான் வார விழா ____ இல் கொண்டாடப்பட்டது

A. நேபாளம்

B. இந்தோனேசியா

C. வியட்நாம்

D. இலங்கை

11) MBR எக்ஸ்ப்ளோரர் என்பது ____ இன் விண்வெளி ஆய்வுப் பணியாகும்.

A. சவூதி அரேபியா

B. ஐக்கிய அமெரிக்கா

C. ஐக்கிய அரபு எமிரேட்ஸ்

D. ரஷ்யா

12) உலக வானிலை அமைப்பின் (WMO) தலைவர் பதவியை ____ வென்றுள்ளார்.

A. இந்தியா

B. இந்தோனேசியா

C. பங்களாதேஷ்

D. ஐக்கிய அரபு எமிரேட்ஸ்

13) ____ 2025 இல் "இயற்கை பாதுகாப்புக்கான சர்வதேச ஒன்றியம் (IUCN) உலகப் பாதுகாப்புக் கூட்டத்தை" நடத்த திட்டமிட்டுள்ளது.

A. ஐக்கிய அமெரிக்கா

B. ஐக்கிய இராச்சியம்

C. ஐக்கிய அரபு எமிரேட்ஸ்

D. இந்தியா

14) ANTARDRIHSTI போர்ட்டல்____ஐ எளிதாக்கும் நோக்கத்துடன் தொடங்கப்பட்டது

A. பெண்கள் அதிகாரமளித்தல்

B. நிதி சேர்த்தல்

C. யுனிவர்சல் ஹெல்த் கேர்

D. அமைப்புசாரா துறை தொழிலாளர்களுக்கு காப்பீடு

15) அம்ரித் தரோஹரும் மிஷ்டியும் ____ புத்துயிர் பெறுவதை நோக்கமாகக் கொண்டுள்ளனர்

A. இந்தியாவில் காடு மற்றும் ஈரநிலங்கள்

B. இந்தியாவின் உயிர் பன்முகத்தன்மை

C. கடலோர சுற்றுச்சூழல் அமைப்பு

D. இமயமலை சுற்றுச்சூழல் அமைப்பு

16) 62 வறட்சியைத் தாங்கும் வாஸ்குலர் தாவர இனங்கள் சமீபத்தில் ____ இல் கண்டுபிடிக்கப்பட்டது

A. கிழக்கு தொடர்ச்சி மலைகள்

B. அந்தமான் நிக்கோபார் தீவுகள்

C. இமயமலை

D. மேற்கு தொடர்ச்சி மலைகள்

17) சுரினாமின் உயரிய சிவிலியன் விருது ____க்கு வழங்கப்பட்டது

A. அமித் ஷா

B. திரௌபதி முர்மு

C. நரேந்திர மோடி

D. ராஜ்நாத் சிங்

18) 2023 ஆம் ஆண்டிற்கான தேசிய நிறுவன கட்டமைப்பின் (NIRF) தரவரிசையில் ____ முதல் இடம்

A) ஐஐடி மெட்ராஸ்

B) ஐஐடி அகமதாபாத்

C) ஐஐடி அலகாபாத்

D) ஐஐஎஸ்சி பெங்களூர்

19) மிகவும் மாசுபட்ட நாடுகளின் பட்டியலில் இந்தியா ____ இடத்தில் உள்ளது

A. 2வது

B. 3வது

C. 4வது

D. 5வது

20) Bahnen-Tournee 2023 எந்த விளையாட்டுடன் தொடர்புடையது?

A. நீளம் தாண்டுதல்

B. ஈட்டி எறிதல்

C. குத்துச்சண்டை

D. சைக்கிள் ஓட்டுதல்

21) வீர் சோத்ராணி எந்த விளையாட்டுடன் தொடர்புடையவர்?

A. டென்னிஸ்

B. ஸ்குவாஷ்

C. பூப்பந்து

D. மட்டைப்பந்து

22) மன்ஜீத் எந்த விளையாட்டுடன் தொடர்புடையவர்?

A. குத்துச்சண்டை

B. மல்யுத்தம்

C. ஸ்குவாஷ்

D. மட்டைப்பந்து

23) மனிஷா எந்த விளையாட்டுடன் தொடர்புடையவர்?

A. குத்துச்சண்டை

B. மல்யுத்தம்

C. ஸ்குவாஷ்

D. மட்டைப்பந்து

24) உலக பால் தினம் ___ அன்று அனுசரிக்கப்படுகிறது

A. 1 ஜூன்

B. 2 ஜூன்

C. 3 ஜூன்

D. ஜூன் 4

25) தெலுங்கானா மாநிலம் உருவான தினம் ___ அன்று கொண்டாடப்படுகிறது

A. 1 ஜூன்

B. 2 ஜூன்

C. 3 ஜூன்

D. ஜூன் 4

26) உலக சைக்கிள் தினம் ___ அன்று உலகம் முழுவதும் அனுசரிக்கப்படுகிறது.

A. 1 ஜூன்

B. 2 ஜூன்

C. 3 ஜூன்

D. ஜூன் 4

27) ஆக்கிரமிப்பால் பாதிக்கப்பட்ட அப்பாவி குழந்தைகளின் சர்வதேச தினம் ___ அன்று அனுசரிக்கப்படுகிறது.

A. 1 ஜூன்

B. 2 ஜூன்

C. 3 ஜூன்

D. ஜூன் 4

28) உலக சுற்றுச்சூழல் தினம்____ அன்று கொண்டாடப்படுகிறது

A. 2 ஜூன்

B. 3 ஜூன்

C. ஜூன் 4

D. ஜூன் 5

29) உலக உணவு பாதுகாப்பு தினம்____ அன்று அனுசரிக்கப்படுகிறது.

A. ஜூன் 5

B. ஜூன் 6

C. ஜூன் 7

D. ஜூன் 8

30) இந்தியாவின் "முதல் நிகர பூஜ்ஜிய கார்பன் கிராமம்" ___ இல் உருவாக்கப்படும்

A. குஜராத்

B. மகாராஷ்டிரா

C. தமிழ்நாடு

D. கர்நாடகா

31) கண்ணாடி இழை உள்கட்டமைப்பு திட்டம் ___ இல் தொடங்கப்படும்

A. கர்நாடகா

B. கேரளா

C. ஆந்திரப் பிரதேசம்

D. தெலுங்கானா

32) உலக பெருங்கடல் தினம்____ அன்று அனுசரிக்கப்படுகிறது

A) ஜூன் 07

B) ஜூன் 08

C) ஜூன் 09

D) ஜூன் 10

33) பின்வரும் கூற்றுகளைக் கருத்தில் கொள்க

1) கடலுக்கடியில் கேபிள் திட்டம் இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் இணைப்பை மேம்படுத்துவதையும், கிழக்கு மைக்ரோனேசியாவின் தீவு நாடுகளை இணைப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

 ஜப்பான், அமெரிக்கா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள் இந்தத் திட்டத்தில் இணைந்துள்ளது

மேலே கொடுக்கப்பட்ட கூற்றுகளில் எது சரியானது/ சரியானவை?

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

C) இரண்டு கூற்றுகளும் சரி

D) இரண்டு கூற்றுகளும் தவறு

34) தேசிய உணவு பாதுகாப்பு குறியீட்டில் ____ முதலிடம் பிடித்துள்ளது.

A) குஜராத்

B) ராஜஸ்தான்

C) தமிழ்நாடு

D) கர்நாடகா

35) உலக வளர்ச்சி அறிக்கை ____ ஆல் வெளியிடப்பட்டது

A) IMF

B) உலக பொருளாதார மன்றம்

C) உலக வங்கி

D) UNDP

36) ONGC தேசிய பேரிடர் தணிப்பு மையத்தை ____ இல் திறக்க திட்டமிட்டுள்ளது.

A) உத்தரகாண்ட்

B) உத்தரப்பிரதேசம்

C) ஜம்மு காஷ்மீர்

D) ஆந்திரப் பிரதேசம்

37) உலக மூளைக் கட்டி தினம் ____ அன்று அனுசரிக்கப்படுகிறது

A. ஜூன் 07

B. ஜூன் 08

C. ஜூன் 09

D. ஜூன் 10

38) அக்னி பிரதம ஏவுகணை தொடர்பான பின்வரும் அறிக்கைகளைக் கவனி

1) அக்னி பிரைம் என்பது ஒரு பாலிஸ்டிக் ஏவுகணை ஆகும், இது இரட்டை வழிசெலுத்தல் மற்றும் வழிகாட்டுதல் அமைப்புடன் செயல்படும் திறன் கொண்டது.

2) அக்னி ஏவுகணை வரிசையில் இது ஆறாவது ஏவுகணை என்பதால் அக்னி பிரைம் குறிப்பிடத்தக்கது.

மேலே கொடுக்கப்பட்ட கூற்றுகளில் எது சரியானது/ சரியானது?

A. 1 மட்டும் சரி

B. 2 மட்டும் சரி

C. இரண்டு கூற்றுகளும் சரி

D. இரண்டு கூற்றுகளும் தவறு

39) அம்ரித் தலைமுறை என்பது ___ இன் முயற்சியாகும்

A. உள்துறை அமைச்சகம்

B. பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம்

C. கலாச்சார அமைச்சகம்

D. நிதி அமைச்சகம்

40) 6 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு பூமியின் “பண்டைய நீர்வழிகளில் வாழ்ந்த உயிரினங்களின் புதைபடிவங்களானது எங்கு கண்டறியப்பட்டது?

A. அமெரிக்கா

B. ஆஸ்திரேலியா

C. இங்கிலாந்து

D. இந்தியா

41) உலக அங்கீகாரத்தின் மதிப்பை ஊக்குவிக்கவும் அதன் உன்னத பணியை மதிக்கவும் ஒவ்வொரு ஆண்டும் ___அன்று உலக அங்கீகார தினமானது அனுசரிக்கப்படுகிறது.

A. ஜூன் 08

B. ஜூன் 09

C. ஜூன் 10

D. ஜூன் 11

42) இந்த ஆண்டுக்கான உணவுப் பாதுகாப்புக் குறியீட்டில் யூனியன் பிரதேசம் (UT) பிரிவில் ___ ஆனது, முதல் இடத்தைப் பிடித்துள்ளது

A. அந்தமான் நிக்கோபார் தீவுகள்

B. ஜம்மு மற்றும் காஷ்மீர்

C. புதுச்சேரி

D. புதுதில்லி

43) சாகர் சம்ரிதியின் நோக்கம்

A. கப்பல் போக்குவரத்து அமைச்சகத்தின் திறனை மேம்படுத்துதல்

B. கடலோரப் பகுதிகளில் சாலைகள் அமைத்தல்

C. துறைமுக முன்னணி வளர்ச்சி

D. சதுப்புநில சுற்றுச்சூழல் அமைப்பை மேம்படுத்துதல்

44) உலகளாவியடிஜிட்டல்பணப்பரிவர்த்தனைகளில் பின்வரும் நாடுகளில் எது முதலிடத்தில் உள்ளது?

A. சீனா

B. ஐக்கிய அரபு எமிரேட்ஸ்

C. அமெரிக்கா

D. இந்தியா

45) இந்தியாவின் தேசிய ஆவணக் காப்பகம் எங்கு அமைந்துள்ளது?

A. சென்னை

B. கொல்கத்தா

C. மும்பை

D. புது தில்லி

46) பின்வருவனவற்றைக் கருத்தில் கொள்க

1) நாட்டின் எண்ணெய் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செலவு குறைவு

2) எரிசக்தி பாதுகாப்பு

3) சிறந்த காற்றின் தரம்

4) குறைந்த கார்பன் உமிழ்வு

மேற்கண்டவற்றில் எத்தனால் கலந்த எரிபொருள் பயன்படுத்துவதனால் ஏற்படும் நன்மைகள் யாவை?

A. 1,2&4 மட்டும் சரி

B. 2,3&4 மட்டும் சரி

C. 12,&3 மட்டும் சரி

D. 1,2,3&4

47) குழந்தை தொழிலாளர்களுக்கு எதிரான உலக தினம் ____ அன்று அனுசரிக்கப்படுகிறது.

A. ஜூன் 11

B. ஜூன் 12

C. ஜூன் 13

D. ஜூன் 14

48) பின்வருவனவற்றில் சர்பிடன் பட்டத்தை வென்றவர் யார்?

A. ரோஜர் பெடரர்

B. ஆண்டி முர்ரே

C. நோவக் ஜோகோவிச்

D. ரஃபேல் நடால்

49) பின்வருவனவற்றில் பிரெஞ்சு ஓபன் டென்னிஸ் வென்றவர் யார்?

A. ரோஜர் பெடரர்

B. ஆண்டி முர்ரே

C. நோவக் ஜோகோவிச்

D. ரஃபேல் நடால்

50) 2023 மகளிர் ஜூனியர் ஆசிய ஹாக்கி கோப்பையை எந்த நாட்டு அணி வென்றது?

A. தென் கொரியா

B. சீனா

C. இந்தியா

D. ஜப்பான்

51) _____ இந்தியாவில் 4வது பெரிய முதலீட்டாளராக உருவெடுத்துள்ளது

A. US

B. UK

C. ஐக்கிய அரபு எமிரேட்ஸ்

D. ரஷ்யா

52) இந்தியாவின் G20 தலைமையின் கீழ் 4வது மற்றும் இறுதி கல்வி பணிக்குழு (EdWG) மாநாடு எங்கு அமைந்துள்ளது

A. புனே

B. மும்பை

C. புதுச்சேரி

D. புது தில்லி

53) பாலூட்டிகளின் உறுப்புகளிருந்து, உள்நாட்டிலேயே குறைந்த செலவில் உருவாக்கப்பட்ட திசு பொறியியல் மருந்துக்கு _____ அமைப்பானது ஒப்புதல் அளித்துள்ளது.

A. இந்திய மருந்துக் கட்டுப்பாட்டாளர்

B. மத்திய சுகாதார அமைமைச்சு

C. மத்திய மருந்துகள் மற்றும் உரக்கட்டுப்பாட்டு அமைச்சு

D. மத்திய மருத்துவர்கள் சங்கம்

54) "எக்ஸ் எகுவெரின்" என்பது இந்தியா எந்த நாட்டிற்கும் இடையே நடைபெற்ற கூட்டு இராணுவ பயிற்சி ஆகும்

A. இங்கிலாந்து

B. மாலத்தீவு

C. சீனா

D. இந்தோனேஷியா

55) உலக இரத்த கொடையாளர் தினம் எந்த ஆண்டு முதல் கொண்டாடப்படுகிறது

A. 2002

B. 2004

C. 2005

D. 2007

56) உலக காற்று தினம் 2023 என்று அனுசரிக்கப்படுகிறது

A. ஜூன் 13

B. ஜூன் 14

C. ஜூன் 15

D. ஜூன் 16

57) U-17 ஆசிய மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டியில் _____ தங்கம் வென்றது

A. இந்தியா

B. சீனா

C. ஜப்பான்

D. உஸ்பெகிஸ்தான்

58) 2023 ஆம் ஆண்டின் G 20 மாநாடு எங்கு நடைப்பெற்றது?

A. இந்தோனேஷியா

B. இந்தியா

C. அமெரிக்கா

D. ஜெர்மனி

59) பின்வரும் கூற்றுகளைக் கருத்தில் கொள்க

1) இந்திய சட்ட செயலி 6 மொழிகளில் பயன்படுத்தலாம்

2) இது குடிமக்கள் தங்கள் வீட்டிலிருந்தே சட்ட உதவியைப் பெறும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது

மேற்கண்ட கூற்றுகளில் எது/ எவை சரியானவை/ சரியானது?

A. 1 மட்டும் சரி

B. 2 மட்டும் சரி

C. இரண்டு கூற்றுகளும் சரி

D. இரண்டு கூற்றுகளும் தவறு

60) Y-Break என்பதன் நோக்கம்

A. மன அழுத்தத்தை குறைத்தல்

B. கிராமப்புற இளைஞர்களின் திறன் மேம்படுத்தல்

C. பெண்களுக்கு ஊக்கத்தொகை வழங்குதல்

D. கலாச்சார சின்னங்களை பாதுகாத்தல்

61) பறவைகள் மற்றும் விலங்குகளைப் பாதுகாப்பதற்கான டானா பானி முயற்சி _____ ஆல் செயல்படுத்தப்படுகிறது

A) பி.எஸ்.எஃப்

B) இந்திய ராணுவம்

C) அசாம் ரைபிள்ஸ்

D) இந்திய விமானப்படை

62) முதியோர் துஷ்பிரயோகம் ____ அன்று கவனிக்கப்படுகிறது

A) ஜூன் 13

B) ஜூன் 14

C) ஜூன் 15

D) ஜூன் 16

63) உலக வங்கி தெற்காசியாவில் தனது முதல் பிரத்யேக சாலை பாதுகாப்பு திட்டத்தை ____ அரசாங்கத்துடன் தொடங்குவதாக அறிவித்துள்ளது.

A) நேபாளம்

B) இந்தியா

C) பங்களாதேஷ்

D) மியான்மர்

64) அன்னேசி இன்டர்நேஷனல் அனிமேஷன் திருவிழா ___ இல் நடைபெறுகிறது

A) பிரான்ஸ்

B) ஜெர்மனி

C) இத்தாலி

D) ஐக்கிய அமெரிக்கா

65) இந்தியாவில் அதிக காற்றாலை உற்பத்தி திறன் கொண்ட முதல் மாநிலம் எது?

A. குஜராத்

B. இராஜஸ்தான்

C. தமிழ் நாடு

D. ஆந்திர பிரதேசம்

66) விஹு குஹ் என்ற பாரம்பரிய திருவிழா எந்த மாநிலத்தில் நடைபெற்றது.

A. அருணாசலப் பிரதேசம்

B. அஸ்ஸாம்

C. நாகாலாந்து

D. மேகாலயா

67) இந்தியாவின் ஜீ 20 அறிவியல்-20 மாநாடு எங்கு நடைபெற உள்ளது?

A. போபால்

B. லக்னோ

C. புவனேஸ்வர்

D. மும்பை

68) 4வது தேசிய நீர் விருது பெற்ற சிறந்த மாநிலம் எது?

A. மகாராஷ்டிரா

B. மத்திய பிரதேசம்

C. தமிழ் நாடு

D. கேரளா

69) வாழ்நாள் சாதனைக்கான ஐரோப்பிய கட்டுரைப் பரிசைப் பெற்ற இந்திய எழுத்தாளர் யார்?

A. அருந்ததி ராய்

B. சல்மான் ருஷ்டி

C. விக்ரம் சேத்

D. கிரண் தேசாய்

70) வருண் தோமர் எந்த விளையாட்டுடன் தொடர்புடையவர்?

A. நீளம் தாண்டுதல்

B. துப்பாக்கி சுடுதல்

C. தடகளம்

D. ஹாக்கி

71) பாலைவனமாதல் மற்றும் வறட்சியை எதிர்ப்பதற்கான உலக தினம் என்று அனுசரிக்கப்படுகிறது

A. ஜூன் 15

B. ஜூன் 16

C. ஜூன் 17

D. ஜூன் 18

72) ஆட்டிஸ்டிக் பெருமை தினம் என்று அனுசரிக்கப்படுகிறது

A. ஜூன் 15

B. ஜூன் 16

C. ஜூன் 17

D. ஜூன் 18

73) 2021 ஆம் ஆண்டிற்கான காந்தி அமைதிப் பரிசு பெற்றது யார்?

A. ஜோ பிடன்

B. பாரக் ஒபாமா

C. இம்மானுவேல் மாக்ரோன்

D. கீதா அச்சகம்

74) எக்ஸ் கான் குவெஸ்ட் 2023 பன்னாட்டு அமைதி காக்கும் கூட்டுப் பயிற்சி எங்கு நடைப்பெற்றது?

A. சீனா

B. இந்தோனேஷியா

C. இந்தியா

D. மங்கோலியா

75) அபிஷேக் வர்மா எந்த விளையாட்டுடன் தொடர்புடையவர்?

A. தடகளம்

B. வில்வித்தை

C. ஈட்டி எறிதல்

D. துப்பாக்கி சுடுதல்

76) நாட்டிங்ஹாம் ஓபன் போட்டியில் பட்டம் வென்றவர் யார்?

A. நோவாக் ஜோக்கொவிச்

B. ரோஜர் பெடரர்

C. ரஃபேல் நடால்

D. ஆண்டி முர்ரே

77) சர்வதேச யோகா தினம் என்று அனுசரிக்கப்படுகிறது

A. ஜூன் 20

B. ஜூன் 21

C. ஜூன் 22

D. ஜூன் 23

78) உலக நீர் வரைவியல் தினம் என்று அனுசரிக்கப்படுகிறது

A. ஜூன் 20

B. ஜூன் 21

C. ஜூன் 22

D. ஜூன் 23

79) வட இந்தியாவின் முதல் தோல் வங்கி எங்கு அமைக்கப்பட்டுள்ளது?

A. கொல்கத்தா

B. புது தில்லி

C. மும்பை

D. புனே

80) INDUS X மாநாடானது எங்கு நடைப்பெற்றது?

A) நியுயார்க்

B) சிக்காகோ

C) வாஷிங்டன்

D) லண்டன்

81) 2023 ஆம் ஆண்டிற்கான உலகின் மிகவும் சிறப்பாக வாழக்கூடிய நகரங்களின் தரவரிசை பட்டியலில் ______ முதலிடம் பிடித்துள்ளது.

A. லண்டன்

B. டோக்கியோ

C. வியன்னா

D. புதுதில்லி

82) சர்வதேச ஒலிம்பிக் தினம் என்று அனுசரிக்கப்படுகிறது

A. ஜூன் 22

B. ஜூன் 23

C. ஜூன் 24

D. ஜூன் 25

83) 'இமைகள்' திட்டத்தின் நோக்கம் என்ன?

A. பாலியல் குற்றங்களில் இருந்து பெண் குழந்தைகளை பாதுகாத்தல்

B. பெண் குழைந்தைகளின் கல்வி மேம்படுத்த

C. பெண்களுக்கு அதிகாரம் அளித்தல்

D. பெண்களுக்கு ஊக்கத்தொகை வழங்குதல்

84) ஆர்ட்டெமிஸ் திட்டத்தின் நோக்கம் என்ன?

A) செயல்நிலையில் இருக்கும் ஆளற்ற நிலவைச் சுற்றும் பயணத் திட்டம்

B) செவ்வாய் நிலவில் உள்ள வளங்களை

ஆராய்தல்

C) சனிக் கோளை ஆராய்தல்

D) சூரிய குடும்பத்தை ஆராய்தல்

85) ஆர்ட்டெமிஸ் திட்டம் எந்த ஆராய்ச்சி நிறுவனம் முன்முயற்சி ஆகும்?

A. நாசா

B. இஸ்ரோ

C. ஐரோப்பிய ஒன்றியம் நிறுவனம்

D. ஜப்பான் நிறுவனம்

86) அங்கீகரிக்கப்பட்ட பொருளாதார வல்லுனர்களுக்காக இந்தியா ____ உடன் ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது?

A) இங்கிலாந்து

B) அமெரிக்கா

C) கனடா

D) ஐக்கிய அரபு அமீரகம்

87) உத்யமி பாரத் – MSME தினம் என்று அனுசரிக்கப்படுகிறது

A. ஜூன் 25

B. ஜூன் 26

C. ஜூன் 27

D. ஜூன் 28

88) உலகளாவிய புதிய நிதி ஒப்பந்தத்திற்கான உச்சி மாநாடு எங்கு நடைபெற உள்ளது?

A. பிரான்ஸ்

B. சிக்காகோ

C. நியுயார்க்

D. நியூசிலாந்து

89) தேசிய புளோரன்ஸ் நைட்டிங்கேல் விருது எந்த ஆண்டு நிறுவப்பட்டது?

A. 1971

B. 1972

C. 1973

D. 1974

90) தேசிய புளோரன்ஸ் நைட்டிங்கேல் விருதானது எந்த துறைக்கு வழங்கப்படுகிறது?

A. செவிலியர்கள்

B. கால்பந்து வீரர்கள்

C. கிரிக்கெட் வீரர்கள்

D. சாதனை மகளிர்க்கு

91) ராயன் ரஸ்மி எந்த விளையாட்டுடன் தொடர்புடையவர்

A. ஸ்குவாஷ்

B. ஸ்னூக்கர்

C. கால்பந்து

D. பூப்பந்து

92) ஐக்கிய நாடுகளின் பொது சேவை தினம் என்று அனுசரிக்கப்படுகிறது

A. ஜூன் 22

B. ஜூன் 23

C. ஜூன் 24

D. ஜூன் 25

93) சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் தினம் என்று அனுசரிக்கப்படுகிறது

A. ஜூன் 26

B. ஜூன் 27

C. ஜூன் 28

D. ஜூன் 29

94) சர்வதேச வெப்ப மண்டல தினம் என்று அனுசரிக்கப்படுகிறது

a. ஜூன் 26

b. ஜூன் 27

c. ஜூன் 28

d. ஜூன் 29

95) உலகப் பொருளாதார மன்றத்தால் ஜூன் 28 அன்று வெளியிடப்பட்ட அதன் ஆற்றல் மாற்றக் குறியீட்டில் இந்தியாவானது உலகளவில் __ வது இடத்தில் தரவரிசைப்படுத்தபட்டுள்ளது

A. 65

B. 67

C. 99

D. 110

96) பசுமை ஹைட்ரஜன் சர்வதேச மாநாடு எங்கு நடைபெற்றது?

A. சென்னை

B. அமெரிக்கா

C. மும்பை

D. புது தில்லி

97) சைபர் எச்சரிக்கை செயலியின் நோக்கம் என்ன?

A. குற்றங்களை தடுத்தல்

B. பெண்களுக்கு ஊக்கத்தொகை வழங்குதல்

C. மின் ஆளுமை வளர்ச்சிக்கு ஊக்கம் அளித்தல்

D. குழந்தை தொழிலாளர்களை ஒழித்தல்

98) QS (Quacquarelli Symonds) உலக பல்கலைக்கழக தரவரிசையின்படி, IIT பம்பாய் எத்தனையாவது இடத்தில் உள்ளது?

A. 145

B. 149

C. 152

D. 153

99) பின்வரும் கூற்றுகளைக் கருத்தில் கொள்க

1) சாகர் சமாஜிக் சஹயாகின் நோக்கம் துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் அமைச்சகத்தின் கீழ் உள்ள கார்ப்பரேட் சமூக ஆணையத்தின் பொறுப்புகளுக்கான (CSR) புதிய வழிகாட்டுதலை உருவாக்குதல்

2) இந்த புதிய வழிகாட்டுதல்களானது CSR நடவடிக்கைகளை நேரடியாக மேற்கொள்ள துறைமுகங்கள் மற்றும் அது சம்பத்தப்பட்ட துறை நிறுவனங்களுக்கு அதிகாரம் அளிக்கிறது.

மேற்கண்ட கூற்றுகளில் எது/ எவை சரியானது / சரியானவை?

A) கூற்று 1 மட்டும் சரி

B) கூற்று 2 மட்டும் சரி

C) இரண்டு கூற்றுகளும் சரி

D) இரண்டு கூற்றுகளும் தவறு

100) தேசிய புள்ளியியல் தினம் என்று அனுசரிக்கப்படுகிறது?

A) ஜூன் 27

B) ஜூன் 28

C) ஜூன் 29

D) ஜூன் 30

## Answers:

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | B | 21 | B | 41 | B | 61 | A | 81 | C |
| 2 | B | 22 | B | 42 | B | 62 | C | 82 | B |
| 3 | B | 23 | B | 43 | A | 63 | C | 83 | B |
| 4 | C | 24 | A | 44 | D | 64 | A | 84 | A |
| 5 | C | 25 | B | 45 | D | 65 | B | 85 | A |
| 6 | A | 26 | C | 46 | A | 66 | A | 86 | D |
| 7 | A | 27 | D | 47 | B | 67 | A | 87 | C |
| 8 | B | 28 | D | 48 | B | 68 | B | 88 | A |
| 9 | D | 29 | C | 49 | C | 69 | A | 89 | C |
| 10 | D | 30 | B | 50 | C | 70 | B | 90 | A |
| 11 | C | 31 | B | 51 | C | 71 | C | 91 | B |
| 12 | D | 32 | B | 52 | A | 72 | D | 92 | B |
| 13 | C | 33 | C | 53 | D | 73 | D | 93 | B |
| 14 | B | 34 | A | 54 | B | 74 | D | 94 | D |
| 15 | A | 35 | C | 55 | C | 75 | B | 95 | B |
| 16 | D | 36 | C | 56 | C | 76 | D | 96 | D |
| 17 | B | 37 | B | 57 | A | 77 | B | 97 | A |
| 18 | A | 38 | C | 58 | B | 78 | B | 98 | B |
| 19 | C | 39 | B | 59 | C | 79 | B | 99 | C |
| 20 | D | 40 | B | 60 | A | 80 | C | 100 | C |